மாலா
டிசம்பர்-60. 25 காசு

நாளொரு
மேனியாக...
ரெக்ஸோணாவில் அடங்கியுள்ளது கேடில்; சரும எழிலுக்கான பற்பல எண்ணெய்கள் இணைந்த விசேஷத் தைலமாகிய கேடில், சருமத்திற்கு ஊட்டமளித்து, மழமழப்பாகவும், மென்மையுடனும் மிளிரச் செய்கிறது! ரெக்ஸோணாவின் எடுப்பான நறுமணம் இணைபிரியாமல் உங்கள்மீது கமழ்ந்து இளங்காலைப் புதுமலர்ச்சியுடன் நாள்முழுதும் உங்களை விளங்கச் செய்கிறது. உங்கள் அன்றாட அழகுசாதனமாக ரெக்ஸோணா உபயோகியுங்கள்!
Rexona
Rexona
BLENDED WITH CADYL
...ரெக்ஸோணா உங்கள் மேனியெழிலை ஓங்கச்செய்கிறது
ஆஸ்திரேலியாவிலுள்ள ரெக்ஸோணா ப்ரொ. லிமிடெட் சார்பாக இந்துஸ்தான் லீவர் லிமிடெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.
RP.165-50 TM

For

QUALITY DIAMONDS
&
NOVEL JEWELLERY

★

# SURAJMAL'S

**MADRAS-1.**

★

Phone 21650. Grams: MORALITY:

கேசப்
பராமரிப்பின்
ரகசியம்
ஸ்வஸ்திக்
பெர்ப்யூம்டு காஸ்டர் ஆயில்
தயாரிப்பாளர்: ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ்
லிமிடெட், பம்பாய்
SHILPI SDM 10

# மிட்டாய்கள்

Nutrine

## சுவை மிகு நியூட்ரைன் டாபிகள்

நீங்கள் ஆசையுடன் வைத்துக்கொள்ள விரும்பும் அழகான டின்களில் கிடைக்கின்றன.

நியூட்ரைன் டின்களில் நிறைய **டாபிகள்** கிடைக்கின்றன.

காரணம் டின் முழுவதும் டாபிகளால் நிரப்பப்படுகின்றன. அரைகுறையாக நிரப்பப்படுவதில்லை.

**நியூட்ரைன் கன்பெக்ஷனரி கம்பெனி (பி) லிட்,**
**சித்தூர், ஆந்திர பிரதேசம்**

# நிறைவு
# உறையும் வாழ்வு

கடைசியில், உழைப்பும் கவலையும் சூழ்ந்த ஆண்டுகள் கழிந்தன. இப்போது உள மகிழ் வோடும், கடமையைச் செவ்வனே முடித்த மன நிறைவோடும் நாட்களை ஓட்டுகிறார். எப்படித் தெரியுமா? முதிர்வடைந்த ஆயுள் இன்சூரன்சுப் பாலிசி உறுதியளிக்கும் ஒழுங்கான ஒரு வருமானமே அவர் ஓய்வு பெற்ற பின்பும் இன்பமயமான, கவலை இல்லாத வாழ்வு வாழ உதவியது.

அன்பு மகளின் இன்ப மணத்திற்கும், மக்களின் கல்விக்கும், வாழ்வினைத் தொடங்குவதற்கும், ஓய்வுக்காலத்தில் ஒரு வருமானத்திற்கும், இவை போன்றவற்றுக்கும் பணத்திற்கு வகை செய்ய ஆயுள் இன்சூரன்சு பொறுப்பேற்கட்டும். உங்களுக்கு எது நேரினும் இந்த வாழும் தன்மைகள் வழங்கப்படும் என்பதை நினைவில் கொள்வீர்.

ஆண்டுதோறும் 'லைப் இன்சூரன்சுக் கார்ப்பொரேஷன்' ரூ. 28 கோடிக்குமேல் உரிமத் தொகைகளாக ( Claim ) வழங்குகின்றது. அவற்றுள் ரூ. 21 கோடிக்குமேல் வாழும் பாலிசிதாரர்களே பெறுகின்றனர்.

## ஆயுள் இன்சூரன்சு போல ஆதரவு தருவது எதுவுமே இல்லை.



UC-C8-18

சென்னை

# காஸினோ - பிராட்வேயில்

# 50-வது நாள்

வெற்றிகரமாக நடைபெறுகிறது

★

வாசு பிலிம்ஸ்




# கைராசி

டைரக்ஷன்: **K. சங்கர்.**

---

சோலார் பிலிம் டிஸ்டிரிபியூடர்ஸ் ரிலீஸ்.

## இன்றே விஜயம் செய்யுங்கள்

மதுரையில்
1901-ல் ஸ்தாபிக்கப்பட்டது
மூன்று தலைமுறையாக
நடைபெற்றுவரும்.

**ஒரிஜினல்**
**நாகப்பட்டணம்**
**நெய் மிட்டாய் கடை**

இது ஒன்றுதான்
20, மேலச் சித்திரை வீதி
(மேல கோபுரம் சமீபம்)

Prop: வி. வெங்கட்ருமய்யர் சன்.
வி. அனந்தநாராயணன் மதுரை.

Phone : Show Room: 2002
Residence: 61725

Grams: "NATHELLA"




Fashionable GOLD Jewellery Variety of Latest designed Gem-Setted Jewellery

SILVER Trophies Cinema Shields Water Drums a Number of attractive articles

Please pay a visit to our Show Rooms:

**Nathella Sampathu Chetty Son & Co. (Private) Ltd.**

Wholesale & Retail Silver-Ware Manufacturers

177, N. S. C. BOSE ROAD, MADRAS-1.

# கேச பராமரிப்பு-
# ஒரு கலை

அடர்ந்து வளர்ந்த கேசம் தோற்றத்திற்கு என்றுமே தனி அழகை அளிக்கிறது. கேச அழகு தானாக ஏற்படுவதில்லை. மிகுந்த கவனத்துடன் சிறந்த சாதனமான கேசவர்த்தினியை விடாது உபயோகிப்பதால் அது மிளிர்ந்து வளருகிறது.

கேசவர்த்தினியை நீடித்து உபயோகியுங்கள். உங்களுடைய கூந்தல் அடர்ந்த கருமையோடு வளருவதுடன், தனி சோபையும், மென்மையும் பெறும்.

நிறைந்த கூந்தல் வளர்ச்சிக்கு
நிகரற்றது கேசவர்த்தினி

# கேசவர்த்தினி

ஹேர் ஆயில், ஷாம்பூ, கண் மை

KSV-4 TAM

கேசவர்த்தினி பிராடக்ட்ஸ், கிராஸ்கட் ரோடு. கோயமுத்தூர்.

# கே. ஸி. பி. லிமிடெட்

38, மவுண்ட் ரோடு, சென்னை-6.

★

## KRISHNA SWEETS

CHOICE QUALITY.

★

★ நிபுணர்களது மேற்பார்வையில் உயர்ந்த ரக பழ ரஸங்களைக் கொண்டு, சுத்தமான சர்க்கரையிற் தயாரான மிட்டாய்கள்.

★ குழந்தைகளுக்கு ஆரோக்கியமும், வலிமையும் அளிக்கின்றன.

★ ஆலையிலிருந்து அப்படியே புதிதாக விற்பனைக்கு வருகிறது.

★

K C P

கிருஷ்ணா மிட்டாய்கள்

# மாலா

★


போஷகர் : வைஜயந்திமாலா

ஆசிரியர் : எஸ். எஸ். சர்மா

| மாலா 10 | டிஸம்பர் 1960 | மலர் 9 |
|---|---|---|

## பொருளடக்கம்

★


தொழில் நடத்துவதற்கு நிதிவசதிகள் —தலையங்கம்

பொன்மொழிகள் —பன்மொழிப் புலவர்

பிரமுகர் எம். ஏ. சிதம்பரம் செட்டியார் —த. ரா. ரா

நடிப்புக் கலை —டி. கே. ஷண்முகம்

ப்ரமரகீதம் —ரஸிகர்

அன்பின் கட்டளை —திருவரசி

எழுத்தாளனுவது எப்படி ? —தே. பார்த்தசாரதி

அவளும் தாய்தான் —கிருஷ்ணு

உள்ளமும் உருவமும் —மயிலை ஆனந்தன்

ஐலவ்-யூ —வாசவன்

ராசி, பலன்—கேள்வி பதில் —கணபதி ஜோஸ்யர்

கலை அரங்கம்—மற்றும் பல.


★

'மாலா'வில் கதைகளில்வரும் பெயர்கள் நிகழ்ச்சிகள் யாவும் கற்பனையே.

808837

மாலா

டிஸம்பர் 1960

# தொழில் நடத்துவதற்கு நிதி வசதிகள்

தொழில்துறை நிதிக் கார்ப்பொரேஷன், தொழில் துறை கடன் வசதி முதலீட்டுக் கார்ப்பொரேஷன், தேசிய தொழில்துறை அபிவிருத்திக் கார்ப்பொரேஷன், தொழிலுக்கான மறு நிதி வசதிக் கார்ப்பொரேஷன் ஆகிய ஸ்தாபனங்கள் தனியார் துறையில் நடத்தப்படுகிற தொழில்களுக்குக் கடன் வசதிகள் அளித்து வருகின்றன.

1948 ஜூலையில் ஏற்படுத்தப்பட்ட தொழில்துறை நிதிக் கார்ப்பொரேஷன், 338 விண்ணப்பங்கள் விஷயத்தில் 1960 ஜூன் மாதம் வரையில் மொத்தம் ரூ 84.61 கோடிக்குக் கடன் தொகைகள் அனுமதித்திருக்கிறது.

புதிய தொழில் நிறுவனங்கள் உட்பட, போதிய அளவு ஜாமீன் கொடுக்க முடியாத நிலையிலுள்ள, ஆனால், தேசிய பொருளாதார நோக்கில் பார்க்கும்போது ஊக்கமளிக்கப்பட வேண்டிய அனேக தொழில் நிறுவனங்கள் இக்கார்ப்பொரேஷனிலிருந்து இப்போது கடன் தொகைகள் பெற்றுக்கொள்ளலாம்.

தொழில்துறை நிதிக் கார்ப்பொரேஷன் 1959–60ம் வருஷத்தில் மட்டும், மொத்தம் ரூ 17.92 கோடிக்குக் கடன் தொகைகள் அனுமதித்திருக்கிறது.

இக்கார்ப்பொரேஷன் அங்கீகரித்துள்ள மொத்தக் கடன் தொகைகளில் சுமார் 23 சதவிகிதம் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ராஜ்ய நிதிக் கார்ப்பொரேஷன்கள், அகில இந்தியக் கார்ப்பொரேஷனின் வியாபகத்துக்கு உட்பட்டிராத நடுத்தர, சிறிய தொழில்களுக்கு உதவி புரிந்து வருகின்றன. இவை தவிர, சிறு தொழில்களுக்கு வேறு சில ஆதாரங்களிலிருந்து கடன் வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

1955 ஜனவரியில் அமைக்கப்பட்ட இந்திய தொழில்துறை கடன் வசதி முதலீட்டுக் கார்ப்பொரேஷன், 1959 செப்டெம்பர் வரையில் 48 கம்பெனிகளுக்கு மொத்தம் ரூ 14.05 கோடிக்கு நிதியுதவி அனுமதித்தது.

இந்த ஸ்தாபனம் நிதியுதவி அளிக்கும் திட்டங்களுக்குத் தேவையான அன்னியச் செலவாணிக்காக, உலக பாங்கி இக்கார்ப்பொரேஷனுக்கு இரண்டுகோடி டாலர் கடன் வழங்கியிருக்கிறது. மேலும் இரண்டு கோடி டாலர் கடன் வழங்க உலக பாங்கி முன் வந்திருக்கிறது.

1954-ல் அமைக்கப்பட்ட தேசிய தொழில்துறை அபிவிருத்திக் கார்ப்பொரேஷன் பருத்தி, ஜவுளி, சணல் தொழில்களைப் புனரமைப்பதற்கும் நவீனமயமாக்குவதற்கும் விசேஷக் கடன் தொகைகள் வழங்க சர்க்காரின் சார்பில் இயங்கும் ஒரு ஸ்தாபனமாகவும் பணியாற்றி வருகிறது.

தொழில் துறை உற்பத்தியின் மொத்தக் குறியீட்டெண் (1951-ம் வருஷ உற்பத்தி அடிப்படையில்) 1959-ல் 151-க்கு உயர்ந்தது. தற்போது இக்குறியீட்டெண் அனேகமாய் 168-ஐ எட்டிவிட்டது.

பல செல்வந்தர்கள் தங்கள் பணத்தையும் சிறிது முதலிட்டு அரசாங்கத்திலிருந்து பாக்கியைப் பெற்று தொழில்கள் நடத்தினால் நம்நாடு தொழில்களில் நன்கு முன்னேறிவிடும் என்பதில் ஐயமில்லை.

# பொன்மொழிகள்

—பன்மொழிப்புலவர்.

## 17. குற்றம் :-

குற்றங்கள் அறிந்தும் அறியாமலும் செய்யப்படுகின்றன. அறியாமல் குற்றம் செய்வோரைத் திருத்துதல் எளிது. அறிந்தே சிலர் குற்றம் செய்வர். அதற்கு வறுமை, ஏமாற்றம், சோம்பல், கூடாநட்பு, தீயபழக்கம், காமம், சினம், செருக்கு, பேராசை, பொறாமை முதலியன காரணங்களாக அமைகின்றன. அறிந்து குற்றம் செய்வோரையும் தக்க அறிவுரை கூறித் திருத்த முயலவேண்டும். அறிவுறை கூறியும் கேளாமல் பன்முறை குற்றம் செய்வோரைத் தக்கவாறு தண்டிக்கவேண்டும். ஒரு முறை ஒரு சிறு குற்றம் செய்தவன், பன்முறை பெருங்குற்றங்கள் செய்வோனுகவும், கொலையும் செய்வோனுகவும் மாறுவதற்குக் காரணம் சமூகத்தின் கொடுமையேயாகும். சில கயவர்கள் தம்மைத் தூயவராகக் கூறிக்கொண்டு பிறர் குற்றத்தைப் பெரிதாக்கிப் பழித்துப் பேசுவர். சிறு குற்றத்தையேனும் செய்யாத மனிதனை நாம் காண்பது அரிது. முற்றத் துறந்த சில முனிவர்களே சில குற்றங்களைச் செய்திருப்பதாகக் கதைகள் மூலம் அறிந்துள்ளோம். அங்ஙனமிருக்க ஐம்பொறிகளில் ஒரு பொறியையும் அடக்கிவைத்துக்கொள்ளாத மனிதன் எங்ஙனம் தவறு செய்யாமலிருக்கமுடியும்? வேண்டுமானுல் குற்றமே செய்யாதவன்போல் நடிக்கலாம். திறமையுள்ளவன் தப்பித்துக் கொள்வான். திறமையற்றவன் அகப்பட்டுக் கொள்வான். ஆஷாடபூதிகள் போலிவேஷத்தால் சில காலம் தம் குற்றங்களை மறைத்துக் கொள்வர். சினம், மதம், காமம், பேராசை, பொறாமை, வஞ்சனை முதலியவற்றை வென்றவனே ஓரளவு குற்றமற்றவனுக விளங்க முடியும். பிறருக்குத் துன்பம்தரும் பெருங் குற்றங்களை விரைவில் விலக்கி ஏனைய சிறு குற்றங்களையும் நாளடைவில் விலக்க முயல்வது ஓரளவு நடைபெறக்கூடிய செயலாகும்.

## 18. கூட்டம் :-

கூட்டம் நிறைந்த இடம் சிலருக்கு விருப்பத்தையும், சிலருக்கு வெறுப்பையும் உண்டாக்கும். கூட்டம் மிகுந்த இடத்தில் வசித்தால்தான் சிலருக்குப் பொழுது போவதாகத் தோன்றும். வீடுகளும் மக்களும் நிறைந்துள்ள நெருக்கடியான இடத்தில் வாழ்ந்தே பழகியவர்கள் தனி இடத்தை விரும்பாமல் கூட்டம் நிறைந்த இடத்தையே விரும்புவர். சிலர் வேறு வழியில்லாமல், எப்பொழுதும் கூச்சல் நிறைந்த கூட்டத்தில் சிக்கிக்கொண்டு பயனற்ற வாழ்க்கையை நடத்துவர். சிலர் அமைதி, ஆலோசனை, ஆராய்ச்சி, கற்பனை, தியானம் உண்மை, இன்பம் முதலியவற்றைக் கெடுப்பது கூட்டமே எனக்கருதி அதிக வீடுகள் இல்லாத தனித்த இடத்தில் வாழ விரும்புபவர்.

## 19. கெடுதி :-

கெடுதியை ஒருவர் பிறருக்கு உண்டாக்க விரும்புவதற்கு ஏமாற்றம், பொறுமை, சினம், பேராசை முதலியன காரணங்களாம். சிலர் இத்தகைய காரணங்களால் பிறருக்குத் தீங்கு செய்வர். வேறு சிலர் பழிதீர்த்துக்கொள்வதற்காக அல்லலை விளைவிப்பர். கயவர்கள் காரணமேயில்லாமல் கெடுதியை உண்டாக்குவர். சிலர் அறிவீனத்தால் தாமே கெடுதியைத் தேடிக்கொள்வர். மணத்துணிவில்லாதவர் கெடுதி வந்துவிட்டால் புலம்புவர். துணிவும் அறிவுமுள்ளவர்கள் கெடுதியைச் சமாளிக்கும் வழியைக் கெடுதிவரும் முன்பே அறிந்து வைத்திருப்பர்.

பிரமுகர்

# ஸ்ரீ எம். ஏ. சிதம்பரம் செட்டியார்

(து. ரா. ரா.)

தந்தையோ பிரசித்திபெற்ற மனிதர். விடா முயற்சியால் ஒரு தனி சர்வகலாசாலை தமிழ் நாட்டில் இயங்க வழி கோலியவர். தமையனோ தந்தை வழியிலே நின்று பணிபுரிபவர். மேலும் சட்டசபை அலுவல்களிலே அநுபவம் நிரம்பப் பெற்றவர். முன்னாள் சென்னைமாகாண அரசாங்க நிர்வாகப் பொறுப்பிலும் பங்கு கொண்டவர். இவ்விதக் குடும்பத்திலே வந்தவர்தான் ஸ்ரீ எம். ஏ. சிதம்பரம் செட்டியார் அவர்கள். 'ராஜாஸர்' என்றே கௌரவமாக அழைக்கப்பட்ட காலஞ்சென்ற ராஜா ஸர் அண்ணாமலை செட்டியாரின் கடைக்குட்டியாய்ப் பிறந்தவர் இவர். இவரது மூத்த தமையன்தான் மேலே குறிப்பிடப்பட்ட சிறப்புக்கள் கொண்ட ராஜஸர். எம். ஏ. முத்தையா செட்டியார் அவர்கள் ஆவார்.

தமையன் அரசியலிலும் கலைப்பணியிலும் ஈடுபாடு அதிகம் கொண்டிருக்க தம்பி பெரும்பாலும் வியாபாரத்துறை, விளையாட்டுத் துறை முதலியவைகளிலே ஈடுபட்டு பிரகாசித்து வருகிறார். 1918 அக்டோபர் 12ம் தேதி ராஜாஸர் அண்ணாமலை செட்டியாரின் மூன்றாவது புதல்வராய்ப் பிறந்தார் ஸ்ரீ சிதம்பரம். கல்வி பயிற்சிக்குப்பின் இவர் வியாபாரத் துறையிலே கவனம் செலுத்தலானார். நல்ல தோற்றம். விநய சம்பத்து, யாவரிடமும் சரளமாகப் பழகி நட்பைப்பெறும் சாமர்த்தியம் படைத்தவர் இவர். இதோடு வியாபாரத்துறை, கைத்தொழில் துறை இரண்டிற்கும் வேண்டிய நுண்ணறிவு பெற்றிருப்பவராதலால் இன்று ஒரு சிறந்த வியாபாரத் துறை, கைத்தொழில் துறை பிரமுகராய் விளங்கி வருகிறார். பாரதத்தின் பல பகுதிகளிலும் இவருக்கு வியாபாரத் துறைத் தொடர்புஉண்டு. தென்னிந்திய வியாபாரக் கழகத்தின் தலைவராய் பல ஆண்டுகள் தொண்டு புரிந்தவர் ஸ்ரீ சிதம்பரம். கைராசிக்காரரும் நிபுணருமான இவரது தொடர்புகொண்ட வியாபார ஸ்தாபனங்களில் 'ஸௌத் இந்தியா கார்ப்பொரேஷன் ஏஜன்ஸியையும், 'ஆடோமொபைல் பிராடக்ட்ஸ் ஆப் இந்தியா, பம்பாய்' இவைகளைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

ஸ்ரீ சிதம்பரம் சென்னை நகரசபையிலும் பணியாற்றியுள்ளார். 1954–1955-ல் இவர் சென்னை நகரசபை மேயராய் விளங்கினார். கலைத் துறையிலும் இவருக்குத் தொடர்பு உண்டு. சென்னை தமிழ் இசைச் சங்கத்தின் கௌரவக் காரியதரிசி இவர். தகப்பனார் ஆரம்பித்து வைத்த பணியில் மூத்த தமையனாருடன் இவரும் ஈடுபட்டுள்ளதில் ஆச்சர்யப்படுவதற்கில்லையல்லவா?

ஸ்ரீ சிதம்பரம் அவர்கள் மற்றொரு துறையிலும் சிறப்பிடம்பெற்று விளங்குகிறார். அத்துறையிலே இவர் ஓர் உயரிய பதவியை சமீபத்தில் பெற்று அகில இந்திய, ஏன்? அகிலஉலகத் தொடர்பும், பெயரும் பெற்று விட்டார். ஆம்; ஸ்ரீ சிதம்பரம் அவர்கள் "இந்திய கிரிக்கட் கண்ட்ரோல் போர்டி"ன் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதையே குறிப்பிடுகிறோம். விளையாட்டுத் துறையிலே மிகுந்த ஈடுபாடு உடையவர்,

ஸ்ரீ சிதம்பரம் சென்னை மாகாண 'லான் டென்னிஸ்' சங்கத்தின் தலைவர் இவர். அகில இந்திய 'லான் டென்னிஸ்' சங்கத்தின் உப

தலைவரும் கூட. கிரிக்கட் சங்கத்தின் தலைவராய் பல ஆண்டுகளாகத் தொண்டு புரிந்து வருபவர். சென்னை 'ரேஸ்கிளப்'பில் தொடர்பு உண்டு. சமீபத்தில் கட்டாக்கில் நடந்த 'இந்தியகிரிக்கட் கண்ட்ரோல் போர்டின் அங்கத்தினர்கள் வருடாந்திரக் கூட்டத்திலே மேற்படி ஸ்தாபனத்தின் தலைவராய் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது இவரது செல்வாக்கைக் குறிப்பிடுகிறது. தென்னிந்தியாவிற்கு இத்தேர்தல் தனிக் கௌரவம் அளிக்கிறது. இதற்கு முன் இப்பதவியை வகித்த ஒரே ஒரு தென்னிந்தியர் டாக்டர். பி. சுப்பராயன் அவர்கள் ஆவார்கள். நேர்மை கண்ணியம், கட்டுப்பாடு, ஒழுங்கு முறை இவைகள் விஷயத்தில் கண்டிப்பான ஸ்ரீ சிதம்பரம் ஊழல்களுக்கோ, புகார்களுக்கோ இடம் கொடாது பணியாற்றுவார் என்று யாவரும் நம்புகிறார்கள்.

அகில இந்தியப் புகழ்பெற்றவரான
ஸ்ரீ எம். ஏ. சிதம்பரம் செட்டியார்

மேலே குறிப்பிடப்பட்ட பல ஸ்தாபனங்களைத் தவிர மற்றும் பல பொது ஸ்தாபனங்களிலும் நிர்வாகப் பொறுப்பு வகித்ததால் சிறந்த அனுபவம் பெற்றவராய் விளங்குகிறார் இவர். ஒரு மனிதர் இவ்வளவு விஷயங்களிலும் அலுக்காது, சலிப்புக் கொள்ளாது, அயராது ஈடுபடுவது வியப்பிற்குரியதுதான். ஸ்ரீ சிதம்பரம் அவர்களுக்கு சாமர்த்தியமும் அநுபவமும் வெகு பொருத்தமாய் அமைந்து விட்டதால் தான் இவ்விதம் அவர் இயங்க இயலுகிறது. இது தவிர, ஐரோப்பா, அமெரிக்கா, தூரக்கிழக்கு நாடுகள், தென்கிழக்கு ஆசியா முதலிய நாடுகளில் விஸ்தாரமாகப் பிரயாணம் செய்து அநுபவங்களுடன் திரும்பி வந்தவர் ஸ்ரீ சிதம்பரம். ஸ்ரீ சிதம்பரம் அவர்கள் இன்று பிரபல சென்னைப் பிரமுகர் மட்டுமல்ல அகில இந்தியப் பிரமுகர்; சர்வதேசத் தொடர்பும் பெற்று விளங்கும் மனிதர். சமீபத்தில் இவர் அடைந்துள்ள கௌரவத்தால் பெருமை கொள்ளும் நாம் இவர் பலவிதத் துறைகளிலும் மேலும் பிரகாசிக்க வேண்டுமெனப் பிரார்த்திப்போமாக.

இந்திய கிரிக்கட் பொறுத்தவரை இதுவரை இருந்த நிலைமாறி பழைய பெருமை மிக்க நாட்கள் திரும்புமாறு இவர் காலத்தில் இவர் செய்வார் என்ற நம்பிக்கை நமக்குண்டு. கிரிக்கட், கிரிக்கட்டிற்காகவே. அதில் கட்சி, மாகாணப் பிரச்னைகள் போன்ற பைசாசங்களுக்கு இடம் இல்லை என விரட்டி சர்வதேச கிரிக்கட் அரங்கில் இந்தியா தன் பூர்ணப் பொலிவுடன் விளங்கச் செய்வாராக.

★

# செய்திச் சுருள்

## இந்திய திரைப்படக் கழகம்

பூனுவில் அமைக்கப்பட்டுள்ள இந்திய திரைப்படக் கழகத்தில் மறு பயிற்சி வகுப்புகளில் சேருவதற்குப் போதிய பேர் விண்ணப்பித்துக் கொள்ளும் பட்சத்தில், 1961 மார்ச் மாதத்திலிருந்து அவ்வகுப்புகளை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்த மறு பயிற்சி வகுப்புகள் மூன்று மாத காலம் நடத்தப்படும்; திரைப்படத் தொகுப்பு வேலை, சினிமா படத் தயாரிப்பு, புகைப்படக் கலை, ஒலிப்பதிவு ஆகிய துறைகளில் பயிற்சியளிக்கப்படும். மத்திய செய்தி—ஒலிபரப்பு மந்திரி, டாக்டர் பி. வி. கேஸ்கர் டிசம்பர் 1-ந்தேதி புது டில்லியில் நடைபெற்ற பார்லிமெண்டு அங்கத்தினர்களின் ஆலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் இத் தகவலைத் தெரிவித்தார்.

1961 ஜூன் மாதத்திலிருந்து முறைப்படியான பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படும். முதலாவதாக திரைப்பட டைரெக்ஷன், தயாரிப்பு, திரைப்பட வசனம் எழுதுவது, சினிமாப்பட மெடுப்பது, ஒலிப்பதிவு வேலை, திரைப்படத் தொகுப்பு ஆகிய அம்சங்களில் பயிற்சியளிக்கப்படும் என்று டாக்டர் கேஸ்கர் கூறினர்.

## இசைக் கருவிகளுக்குப் புதிய சாதனங்கள்
## சென்னை சங்கீத வாத்தியாலயத்தின் சேவை

இந்திய கைவேலைப் பொருள் உற்பத்தித் துறையில் இசைக் கருவிகள் உற்பத்தி மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது. இசைக் கருவிகளின் தினுசுகளும், நாத வகைகளும் உலகத்திலேயே இந்தியாவில்தான் மிக அதிகமாக இருக்கின்றன. இந்தியாவில் தலைமுறை தலைமுறையாக இசைவாணர்களுக்குப் பேராதரவு அளிக்கப்பட்டு வந்ததையொட்டி இசைக் கருவி தயாரிப்பாளர்கள் தங்கள் தொழில் அழிந்துவிடாமல் காப்பாற்றுவதற்காகப் பெரும்பாடுபட்டு வந்தனர்.

அகில இந்திய கைவேலைப் பொருள்கள் போர்டு இத்தொழிலுக்குப் பூரண ஊக்கமளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து 1956ல் சென்னையில் சங்கீத வாத்தியாலத்தை ஸ்தாபித்தனர். சங்கீத பரம்பரையில் தோன்றிய பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி இதன் கௌரவ டைரெக்டராக நியமிக்கப்பட்டார். இவர் 1937 முதல் சென்னை சர்வ கலாசாலை இசைத் துறைத் தலைவராக இருந்து வருகிறார்; தற்போது இந்திய சர்வகலாசாலைகளில் இசைத்துறைப் பரீட்சை சோதனையாளராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சென்னை வாத்தியாலயத்தில் சுமார் 30 ஆண், பெண்களுக்கு இசைத் துறையில் பயிற்சியளிக்கப்படுவதோடு இசைக் கருவிகளைத் தயாரிக்கவும் சொல்லித்தரப்படுகிறது. இவர்களில் பலர் பாரம்பரியமாக இசைப் பயிற்சியுடையவர்களோ அல்லது இசைக் கருவிகளைச் செய்து பழக்கமுடையவர்களோ அல்ல.

வாத்தியாலயத்திலுள்ள இசைக் கருவிகள் பட்டறையில் சிறிய யந்திரங்கள், கருவிகள், இசைக் கருவிகளைச் செய்வதற்கு வேண்டிய உபகரணங்கள், அவற்றின் உறுப்புகள் முதலியவை இருக்கின்றன. இசைக் கருவிகளில் எல்லா உறுப்புகளையும் செய்வதற்கு மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. இந்தியாவில் இசைக் கருவிகள் விஷயத்தில் நூற்றுண்டு காலமாக ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியை விளக்குவதற்காக இவை சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இங்கு பழைய கருவிகளையும் தேடிப்பிடித்து வைதிருக்கின்றனர். தற்போது பர்மா,

இலங்கை, பிலிப்பைன்ஸ், ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் சேகரிக்கப்பட்டுள்ள சுமார் 200 கருவிகள் இருக்கின்றன.

இப்போது பழக்கத்திலில்லாத கருவிகளைப்பற்றித் தெரிந்து கொள்வதற்காக புராதன சங்கீத நூல்கள் கவனமாக ஆராயப்படுவதோடு, அதில் காணப்படும் குறிப்புகளை அநுசரித்துப் பல கருவிகளும் இங்கு செய்யப்படுகின்றன. இக்கருவிகளைப் பிரபலமடையச் செய்வதற்காகவும் இவற்றின் மீது ஆர்வம் உண்டு பண்ணுவதற்காகவும் இங்கு இசைக்கருவிகள் அடிக்கடி இசைத்துக் காட்டப்படுகின்றன. இவை இசைக்கருவிகளில் பயிற்சி பெறுபவர்கள் பார்த்துத் தெரிந்து கொள்வதற்கும் பயன்படுகின்றன.

தற்கால இசைக் கருவிகளின் நாதத்தின் தரத்தை மேம்படுத்த இங்கு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இத்தகைய கருவிகளை விலை குறைந்த மரத்துண்டுகளால் செய்து பரிசோதனையும் நடத்தப்படுகிறது. நல்ல நாதத்தை எழுப்பும் மரத்துண்டுகளைக்கொண்டு நரம்புக் கருவிகளும் தயாரிக்கப்படுகின்றன. உதாரணமாக மிகவும் எளிதில் கிடைக்கக்கூடியதும் விலை குறைந்ததுமான இமாலய 'பிர்' மரப்பலகையை உபயோகித்து வயலின் செய்யப்படுகிறது.

இந்திய இசைக் கருவிகளை வெளி நாடுகளில் பிரபலப்படுத்துவது வாத்தியாலயத்தின் இன்னொரு நோக்கமாகும். இதற்காக சர்வதேசக் கண்காட்சிகளில் இவற்றைக் காட்சிக்காக வைக்கவும் இசைத்துக் காட்டவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.


We construct

**MODERN BUILDINGS**

We specialise in

**MODERN SANITATION**

Consult :

**King & Company,**

**321, THAMBU CHETTY STREET,**

**MADRAS-1.**

## 'மாலா'

### பொங்கல் மலர் விலை 50 காசு

மூவர்ண பளபளப்பான அட்டை, சினிமா நட்சத்திரங்களின் படங்களும் செய்திகளும், புதுத் தொடர் கதை ஆரம்பம், அஷ்டபதி ஆரம்பம், மற்றும் வாசவன், எல்லார்வி, அருண், பிலோ இருதயநாத் முதலியோரின் கதைகளும் கட்டுரைகளும் உள்ளன.

விவரம் மாலா மதறாஸ்-18.


## அட்டைப்படம்

அரசிளங்குமரி ஒரு நடன ஆசிரியரிடம் நடனம் பயின்றாள். அதே ஆசிரியரிடம் நடனம் பயின்ற வேறு ஒருந்தியுடன் நடனப் போட்டியில் கலந்து கொள்ளும்படியான சந்தர்ப்ப மேற்படுகிறது. அப்போது அரசிளங்குமரி தான் ஆசிரியரிடம் பயிலாத ஒரு புது நடனத்தை ஆடி வெற்றி பெறலாமா என நினைக்கிறாள். அவள் ஆலோசனையிலிருக்கும்போது அவள் கையிலிருந்த கால் சிலங்கை அவளையுமறியாது கீழே நழுவி விழுகிறது. இதை அருகிலிருந்த தோழி வியப்புடன் கவனிக்கிறாள். இதையே சித்திரமாகச் சித்தரித்துள்ளார் நமது சைத்ரீகர்.

ஜெமினி ரிலீஸான அக்பர் படத்தில் மதுபாலா உருக்கமாக நடித்துள்ளார்.


# S. S. L. C. 1961
## SARMA'S TAMIL GUIDES

| | | |
|---|---|---|
| 1. | தமிழ்த் துணைவன் (பொது சிறப்பு) தமிழ் வினா-விடை | 0 10 0 |
| 2. | தமிழ் வினாக்கள் (Public Model Questions) | 0 4 0 |
| 3. | தமிழ்ப் பொதுக் கட்டுரை | 0 10 0 |
| 4. | தமிழ் மொழி பெயர்ப்பு (English-Tamil) | 0 6 0 |

(ஒவ்வொரு பிரதிக்கும் (Book-Post) தபாற் செலவு 2 அணா சேர்த்து M. O. மூலம் தொகையை அனுப்ப வேண்டும்.)

கிடைக்குமிடம்:

**சர்மா பதிப்பகம்**

1-G, C P. Ramaswamy Iyer Road, Alwarpet, Madras-18.

53, Perumal Koil Street, Madurai.

For exquisite feel &
excellent appeal...
Choose
MYSORE
SILK
SAREES
GOVT. SILK WEAVING FACTORY
TRADE MARK
MYSORE
Hallmark of quality
MYSORE GOVERNMENT SILK WEAVING FACTORY, MYSORE.

# மாலா வாசகர்களுக்கு ரூ. 25

"மாலா" எந்தெந்த விஷயங்களைக்கொண்டு எந்த முறையில் வெளி வர வேண்டும் என்று யோஜனை கூறி கடிதம் எழுதுவோருக்கு ரூ. 25 பரிசு கொடுக்கப்படும். கடிதங்கள் டிஸம்பர் 30-ஆம் தேதிக்குள் வர வேண்டும். பிறகு வரும் கடிதம் கவனிக்கப்படமாட்டாது. (ஆசிரியர்)

அன்புடைய சகோதர சகோதரிகளே! நமது மாலா எந்த முறையில் சிறப்பு பெற்று வாசகர்களை நல்ல முறையில் திருப்தி செய்விக்க முடியும் என்பதை ஆராய்ச்சியினுலும், அனுபவத்தினுலும் பலர் கடிதங்கள் எழுதியுள்ளார்கள்.

சுமார் 286 கடிதங்கள் இதுவரை வந்துள்ளன. நாங்கள் இதுவரை 22 கடிதங்களை மட்டும் பொறுக்கி வைத்துள்ளோம்—இன்னும் சில கடிதங்களை வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். வியாபாரத்தையும் மனதில் வைத்துக்கொண்டும், தற்போதுள்ள வாசகர்களுக்கு உகந்த விஷயங்களை எந்த முறையில் வெளியிடவேண்டும் என்பதையும் மனதில் வைத்துக் கொண்டும் நமது நேயர்களைக் கடிதங்கள் எழுதுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். எமது அடுத்த பொங்கல் மலரில் "பரிசு பெற்றவர்களின்" புகைப் படங்களும் பிரசுரிக்கப்படும். நாங்கள் பொறுக்கி வைத்துள்ள கடிதங்களை எழுதிய நபர்களின் பெயர் கீழே கொடுக்கப் பட்டுள்ளன. யாருக்குப் பரிசு கொடுக்கப்போகிறோம் என்பதை எமது பொங்கல் மலரில் வெளியிடுவோம். (ஆசிரியர்.)

குறிப்பு:—நல்ல அபிப்பிராயங்களைக்கொண்டு எழுதியுள்ள முக்கிய நபர்களின் பெயர்கள்.

| | |
|---|---|
| V. ராஜலெக்ஷிமி B.Sc. | மதருஸ் 10 |
| ஜியாவுடீன் | மதுரை |
| S. பட்டம்மாள் | மதருஸ் 17 |
| S. ஜெயலக்ஷிமி | மதருஸ் 4 |
| ஆர். கல்யாணராமன் | மன்னார்புரம் |
| எஸ். ராமன் | தஞ்சை |
| ஜி. தங்கவேல் | திருச்சி |
| பாலகிருஷ்ணன் | குடந்தை |
| K. வேதாசலம் | சென்னை 1 |
| த. கணேசன் | பொன்னகரம் |
| நந்தி நடராஜன் | தாம்பரம் |
| இரா. கல்யாணசுந்தரம் | சென்னை 2 |
| ஆி. ர. தில்லை கோவிந்தன் | சின்னதானக்குப்பம் |
| R. கணேசன் | ஊர் பேர் தெரியவில்லை |
| S. பாக்கியம் | ஊர் பேர் தெரியவில்லை |
| சுலோசனு | சென்னை-2 (முழு விலாசம் இல்லை) |
| K. ராகவேந்திரன் | கும்பகோணம் |
| நா. பார்த்தசாரதி | மதுரை |
| S. ஏழுமலை | திருவனந்தபுரம் |
| R. ஆரோக்கியசாமி | பாலக்காடு |
| S. பத்மினி | திருவனந்தபுரம் |
| S. சரோஜா | ஆனமலை |

# குழந்தைகள் பராமரிப்பு —

# ஒரு தேசியப் பொறுப்பாகும்

குழந்தைகளின் க்ஷேமநலத்தைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பு பெற்றோர்களேயும் குடும்பத்தினர்களேயும் மட்டுந்தான் சேர்ந்தது என்ற நிலே இப்போது முற்றிலும் மாறிவிட்டது இது ஒரு தேசியப் பொறுப்பாகும்; தேச நிர்மாணத் திட்டத்தின் இணைப்பானதொரு அங்கமாக இது அமைந்துவிட்டது

நவம்பர் 14-ம் தேதி "குழந்தைகள் தினம்" கொண்டாடப்பட்டது. அப்போது. குழந்தைகளின் மனோநிலையையும் உடல் நிலையையும் அபிவிருத்தி செய்வது விஷயத்தில் தாங்கள் ஆற்றவேண்டிய கடமைகள் பற்றி மக்களுக்கு ஞாபகமூட்டப்பட்டது. குழந்தைகளின் நல்வாழ்வைப் பொறுத்தே வருங்கால உலகத்தின் சுபிட்சம் அமைந்திருக்கும்,

1956-ம் வருஷத்திலிருந்தே உலகமெங்கிலும் குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது; உலகெங்கிலும் குழந்தைகளுக்கிடையே சகோதர பாவத்தையும் நல்லுணர்ச்சியையும் வளர்ப்பதற்கும், குழந்தைகளின் க்ஷேமநல அபிவிருத்திக்கான நடவடிக்கைகளே மேற்கொள்ளுவதற்குமான ஒரு தினமாக இது கொண்டாடப்படுகிறது.

இந்தியாவில், குறிப்பாக கிராமங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள பள்ளிக்கூடங்கள், குழந்தைகளின் பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், சுகாதார நிலையங்களில், நூல் நிலையங்கள், பொழுதுபோக்கு நிலையங்கள் ஆகியவை, தற்காலக் குழந்தைகளுக்கும் வருங்காலக் குழந்தைகளுக்கும் சிறந்த வாழ்க்கைக்கு வகை செய்யவேண்டும் என்ற மக்கள் கொண்டுள்ள ஆசையைப் பிரதிபலிப்பவையாக அமைந்துள்ளன.

சுயேச்சை ஸ்தாபனங்கள் குழந்தைகளின் க்ஷேமநலத்துக்காக எவ்வளவோ சிறந்த நற்பணிகள் ஆற்றிவருகின்றன. 1952-ல் ஏற்படுத்தப்பட்ட இந்திய குழந்தைகள் க்ஷேமநலக் கௌன்சில், இந்நாட்டில் குழந்தைகள் க்ஷேமநல இயக்கத்தின் ஒரு சிறந்த சாதனமாக வளர்ந்திருக்கிறது. குழந்தைகள் க்ஷேமநலத்துக்காகப் பணியாற்றி வருகிற பல்வேறு சுயேச்சை ஸ்தாபனங்களுக்கிடையே தொடர்பு ஏற்படுத்துவதற்கும், அவர்களுடைய திட்டங்களே குழந்தைகளின் க்ஷேமநலனுக்காக ஐந்தாண்டுத் திட்டங்களில் வகுக்கப்பட்டுள்ள பெரிய திட்டங்களுடன் இணைப்பதிலும் இக்கௌன்சில் உதவிபுரிந்து வருகிறது.

1953-ல் அமைக்கப்பட்ட மத்திய சமூக க்ஷேமநல போர்டு குழந்தை க்ஷேமநல சேவைகளே மிகவும் விரிவான முறையில் செய்து வருகிறது. இந்த போர்டு கிராமங்களில் க்ஷேமநல விஸ்தரிப்புத் திட்டங்களே அமைத்திருக்கிறது; அதில் குழந்தைகளுக்கான க்ஷேமநல நடவடிக்கை ஒரு முக்கிய அம்சமாக அமைந்திருக்கிறது. குழந்தைகள் க்ஷேமநலப் பணியில் ஈடுபட்டுள்ள சுயேச்சை ஸ்தாபனங்களுக்கு இந்த போர்டு மானியங்கள் வருகிறது.

குழந்தைகளுக்கான க்ஷேமநலத் திட்டங்களுக்கு உதவி புரிவதில், மத்திய சர்க்காரிலுள்ள பல்வேறு ஸ்தாபனங்களும் சேர்ந்து, ஒரே ரீதியில் பணியாற்றும்படி பார்த்துக் கொள்வதற்காக, மந்திரி சபைக் காரியாலயத்துக்குள்ளாகவே இணைப்புக் கமிட்டியொன்று அமைக்கப்பட்டிருக்கிறது.



குழந்தைகள் "கலை அரங்கில்" வர்ணம் தீட்டுகின்றனர் சித்திரம் வரைந்து வர்ணம்தீட்டுவதில் குழந்தைகளுக்குத்தான் என்ன ஆனந்தம்.



அகதிக் குழந்தைகளுக்கு ஆதரவு நிறைய அளிக்கப்படுகிறது.

A. V. M. தயாரித்த

## திலகம்

மாலா விமர்சனம்

சரஸ்வதி, பாக்யம் இருவரும் சகோதரிகள். சேகர் அவர்களுக்குத்தம்பி. சரஸ்வதியின் கணவன் தேசிய இயக்கத்தில் ஒரு போலீஸ் அதிகாரியைச் சுட்டுக் கொன்று விட்டு ஓடிவிடுகிறான். அவன் தலை மறைவாகியபோது சரஸ்வதி கர்ப்பிணியாயிருந்தாள். அவள் துன்பத்திற்கு ஓர் அளவில்லை. அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அவள்தான் திலகம். சரஸ்வதி தன் மகளுடனும் சகோதரனுடனும் அடங்காப்பிடாரியான தன் தங்கை வீட்டுக்குச் செல்கிறாள். தங்கை பாக்கியத்தின் கணவன் சாம்பசிவம் பல குடும்பங்களை அழித்தும், பித்தலாட்டம் செய்தும் செல்வம் திரட்டியவன். கொடுமையே வடிவானவன், அவனுக்கு மகன் குணசேகரன் உண்மையிலேயே அவன் நற்குணங்கள் நிறைந்தவன். தன் பெற்றோர்களால் பலவகைகளில் கொடுமைப்படும் சரஸ்வதி, திலகம் சேகர் மூவருக்கும் அவன்தான் மறைமுகமாக உதவிகள் செய்கிறான். இந்நிலையிலேயே சில ஆண்டுகள் உருண்டோடி விடுகின்றன. சேகர் திலகத்தைக் காதலிக்கிறான். திலகத்திற்கும் அவனிடம் கொள்ளை ஆசை. இந்த நன்மையை அவர்கள் அடைவது கூட அடங்காப்பிடாரியான பாக்கியத்துக்கும் அவள் கணவனுக்கும் பொறுக்கவில்லை ஆதலால் சேகரை வீட்டைவிட்டு விரட்டி விடுகின்றனர். கட்டிளங்காளை கவலை தோய்ந்த முகத்துடன் பம்பாய் செல்கிறான். அங்கு வேலை கிடைக்கிறது. அவன் முதலாளி சுந்தர்லாலுக்கும் சாமபசிவத்துக்கும் வியாபாரத் தொடர்பினால் நட்பு உண்டு. திலகத்தை முதியவரான அப்பணக்காரருக்கு மனைவியாக்கி அவர் சொத்துக்களையும் அடைய ஆசைப்படுகிறான் சாம்பசிவம். சுந்தர்லால் மனத்தை மாற்றி மணத்திற்கு ஏற்பாடு செய்து வருகிறான். இச்சூழ்ச்சியை அறிந்த சேகர் உள்ளம் துடிக்கிறான். சுந்தர்லால் மண ஏற்பாடுகளுக்காக

பொங்கல் ரிலீஸான ப்ரகதி ஆர்ட் புரடக்ஷன்ஸார் தயாரிக்கும் ''அன்பு மகன்'' என்ற படத்தில் எம். என். ராஜம் அவர்களின் நடிப்பு அபாரமாக இருக்கிறதாம். சிறந்த முறையில் வெளிவர இருக்கிறது. M. N. ராஜத்தின் வசன உச்சரிப்புகள் எப்பொழுதுமே நன்றாக இருக்கும். மேலும் இவர் தற்பொழுதெல்லாம் சிறந்த பாத்திரங்களை ஏற்று நடித்து வருவதால் இவரது புகழ் ஓங்கிவருகிறது.



எம். ஏ. வி. பிக்சர்ஸ் தயாரிக்கும
சிவலீலாவில் எஸ். வி. சுப்பையாவின் வேடம் யாரும் மறக்கமுடியா'தபடி அவ்வளவு நன்றாக இருக்கிறது என்று தெரியவருகிறது.

அவனையே அனுப்புகிறார். அவனும் தன் காதலியைத் தன் எஜமானருக்கே மணம் செய்துகொடுக்க வேண்டும் என்னும் முடிவுக்கு வந்துவிடுகிறான். அவன் தீர்மானத்தை உணர்ந்த சரஸ்வதி தானே சுந்தர்லாலிடம் வந்து தன் துன்பக்கதையைக் கூறுகிறாள். சுந்தர்லால் இறந்துபோய் விட்டதாகக் கேள்விப்பட்ட தன் மனைவியே அவள் என்பதை உணர்கிறார். பல ஆண்டுகளாகப்பிரிந்த தம்பதிகள் ஒன்று கூடுகின்றனர். சேகர் திலகம் திருமணம் நடைபெறுகிறது. இதுதான் கதைச்சுருக்கம்.

இப்படத்தின் வெற்றிக்கு முதற் காரணமாக விளங்குபவர் குணசேகரனாக நடிக்கும் குலதெய்வம் ராஜகோபால். எம். என். ராஜம் திலகம் பாத்திரத்தை ஏற்று உள்ளத்தை உருக்கும் வகையில் நடிக்கிறார். வி. கே. ராமசாமிக்கு அமைந்துள்ள பாத்திரம் மிகப் பொருத்தமாயுள்ளது. பிரேம் நஸீரின் நடிப்பிலும் பேச்சிலும் முன்னேற்றம் காணப்படுகிறது. கண்ணைக்கவரும் வண்ணக்காட்சிகள் படத்தின் தரத்தை உயர்த்துகின்றன. ஹெலன் நடனம் பல ரசிகர்களுக்கு உணர்ச்சியைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது. (B-O-Y-Boy) ''பி. ஓ. ஒய்—பாய்'' என்ற பாட்டு சிரிப்பை உண்டாக்குகிறது. மொத்தத்தில் ஏ. வி எம். தயாரிப்பு என்பதை அனைவரும் ஒத்துக்கொள்வர்.

(சர்மா)

---

## சினிமாவைப்பற்றி எழுதும் வாசகர்களுக்கு ரூ. 5 பரிசு.

அவ்வப்பொழுது வெளியாகும் படங்களைப்பார்த்து நீங்கள் ரஸித்த காட்சிகள், நீங்கள் விரும்பாத காட்சிகள், மனதை விட்டு நீங்காத காட்சிகள், யார் யார் எப்படி நடித்துள்ளார்கள், கதைகளில் எப்படி சந்தர்ப்பம் இருந்திருக்கவேண்டும் என்பவையெல்லாம் குறிப்பிட்டு மாலாவில் ஒருபக்க அளவிற்கு எழுதி அனுப்புங்கள்

(ஆசிரியர்)

# நடிப்புக் கலை

★

டி. கே. ஷண்முகம்

நாடகம் கலைக்கரசு; நாட்டின் நாகரிகத்திற்குக் கண்ணாடி; பாமரர்களின் பல்கலைக் கழகம். உணர்ச்சியைத் தூண்டி உள்ளத்தில் புதைந்து கிடக்கும் அன்பையும் அறிவையும் தூய்மையையும் வெளிப்படுத்தி மக்களைப் பண்படுத்தும் மகத்தான கலை.

நாடு—அகம், நாடகம் நாட்டை அகத்தில் கொண்டது நாடகம். அதாவது, நாட்டின் சென்ற காலத்தையும், நிகழ்காலத்தையும், வருங்காலத்தையும் தன்னகத்தே காட்டுவதால் நாடு — அகம், நாடகம் என்று பெயர் பெற்றிருக்கிறது.

சென்ற காலச் சிறப்புகளைச் சிந்திக்கத் தூண்டி, நிகழ்கால நிகழ்ச்சிகளை நேரில் காட்டி வருங்கால வாழ்வுக்கும் வழி காட்டுவதே இக்கலையின் நோக்கம்.

சுருக்கமாக சொல்லவேண்டுமானால், நாடகம் 'உலக நிகழ்ச்சிகளைக் காட்டும் கண்ணாடி.' நுண்கலைகளில் இந்த நாடகமும் நாட்டியமும்தான் மொழியறியாதவர்களையும் ரசிக்க வைக்கும் கலைகள்.

நம்முடைய நடனகலா நிபுணர்கள் உலக முழுவதும் வெற்றிக் கொடி நாட்டி வருவதைக் கண்கூடாகப் பார்க்கிறோமல்லவா!... ஆகவே இயல், இசையைவிட நடிப்புக் கலைதான் சிறந்தது; முதன்மை பெற்றது என்பதில் ஐயமில்லை.

சுதந்திர நாட்டில் எல்லா கலைகளும் வளருவது போல் நாடகக் கலையும் நல்லமுறையில் வளர வேண்டும். நாடகம் இலக்கியத்தின் ஒரு பிரிவாகக் கருதப்பட்டாலும், இது நூல்வடிவில் மட்டும் வளரும் இலக்கியமல்ல. படித்து மகிழ்வதோடு பார்த்தும் மகிழவேண்டும். அச்சில் வந்தால் போதாது; அரங்கத்திலும் ஆடவேண்டும். இல்லாவிட்டால் இக்கலையின் முழுப் பயனையும் பெறமுடியாது.

கண்ணால் காணும்போது ஏற்படும் உணர்ச்சி படிக்கும் பொழுதோ கேட்கும்பொழுதோ ஏற்படுவதில்லை. காட்சிப் பொருளாகக் காண்பவைகள் மக்கள் உள்ளத்தில் மிகவும் ஆழமாகப் பதிந்துவிடும்.

ஜனசமூகத்தின் நன்மைக்கான விஷயங்களைக் கட்டுரையாக, கதையாக, பாட்டாகச் சொல்வதைவிட நாடகமாக நடித்துக் காட்டுவது பெரும்பயனைத் தரும்.

உலகிலே நடைபெற்ற அநேக அரசியல் புரட்சிகளுக்கு அந்நாட்டு நாடகமேடைகள் பெருந்துணை புரிந்திருக்கின்றன என்று நாம் அறிகிறோம். ஒரு எழுத்தாளன் தன் லட்சியத்தில் பூரண வெற்றியடைய வேண்டுமானால் அவன் ஒரு சிறந்த நாடகாசிரியனாகும் போதுதான் எழுத்தாளன் பூரணத்வம் பெறுகிறான். நாடகாசிரியனாகும் போது தான் எழுத்தாளனுடைய கற்பனை

கள், கருத்துக்கள் எல்லாம் நாட்டுக்கும் மக்களுக்கும் முழுதும் பயன்படுகின்றன.

பொழுது போக்குக்காக நடைபெறும் கலை நிகழ்ச்சிகளில் பிரசார நோக்கம் கூடாது என்பது சிலர் வாதம். நாடகக் கலை மனித சமுதாயத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் துணைசெய்ய ஏற்பட்டதே ஒழிய போகாத பொழுதைப் போக்குவதற்காக அல்ல. கலை நிகழ்ச்சிகள் வெறுந் தமாஷாகக் கருதப்படக் கூடாது கல்விக் கழகங்களின் வேலையைத்தான் கலைக் கழகங்களும் செய்துவருகின்றன. ஆனால் 'பொழுது போக்கு' என்னும் போர்வை போர்த்தப்பட்டிருக்கிறது. நாடகம் மட்டுமல்ல, வளரும் கலைகள் அத்தனையும் மக்களுக்கு வாழ்வுக் கலையைப் போதிப்பனவாகவே இருக்கவேண்டும். மக்களை மறந்துவிடக் கூடாது. மக்களுக்காகத்தான் கலை. அஜீர்ண வாதிகள் சிலர் ஆனந்தமாய் வேடிக்கை பார்ப்பதற்காக அல்ல.

கலாசாலையில் படிப்பது அறிவை விரிவு படுத்தி, சிந்தனை சக்தியை வளர்த்து மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றுவதற்குத்தான். உத்யோகம் பார்ப்பதற்காக அல்ல. இத்தகைய அறிவுவளர்ச்சி கலாசாலையிலிருந்தும் வரலாம்; கலை மேடைகளிலிருந்தும் வரலாம். பொழுதுபோக்கு. அல்லது விளையாட்டு என்று நமது நாட்டில் நடைபெற்று வரும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் அறிவை வளர்க்கவும் உடலை வளர்க்கவுமே ஏற்பட்டிருக்கின்றன. "கலையென்றால் உணர்ச்சிகளைக் கவரவேண்டும், களிப்பூட்டி அறிவினைப் போய்க் கவ்வ வேண்டும்" என்கிறார் நமது கவிஞர் நாமக்கல் இராமலிங்கனார்.

மனிதனுக்கு அறிவிருக்கிறது. அதை நல்ல வழியிலும் திருப்பலாம்; கெட்ட வழியிலும் திருப்பலாம். நல்லதைவிடத் தீயதைத் தான் மனித மனம் விரைவில் ஏற்கும் தன்மையுள்ளது. ஆகவே, பொழுதுபோக்கு என்ற பெயரால் நடைபெறும் நிகழ்ச்சிகள் மக்களின் நலன் கருதியே வளர வேண்டும்.

முதியோர் கல்வித் திட்டத்திற்கு நாடகத்தைவிடச் சிறந்த சாதனம் வேறு கிடையாது. இதை மக்களின் பிரதிநிதிகளாக அதிகாரத்தில் அமருபவர்கள் உணர்ந்தால் நாடு நலம் பெறும். நாடகம் தாய்க் கலை; இதன் முக்யத்தை உணர்ந்தே நமது முன்னோர்கள் மொழியோடு இதைப் பிரிக்க முடியாதபடி பிணைத்துவிட்டார்கள். தமிழ் என்று சொல்லும் போதே இயல், இசை, நாடகம் மூன்றும் சேர்ந்துவிடுகிறது. நாடகத்தைத் தமிழிலிருந்து தள்ளிவிட முடியாது. "இயலிசை நாடகம் என்னும் தமிழ்" என்று கூறுகிறார் தமிழ் நாடகத் தலைமையாசிரியரும், எனது ஆசிரியருமான சுவாமி சங்கரதாஸ் அவர்கள்.

இவ்வளவு சிறப்புக்குரிய நாடகக் கலைக்குத் தனித் தமிழ் கண்ட பெருமையும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இதைப் போற்றி வளர்த்த பெருமையும் நமக்குண்டு என்றாலும் பண்டைப் பெருமையைப் பேசிப் பயனில்லை. பண்டைக் காலத்தை எண்ணிப் பெருமைப் படுவோம். இன்றைய நிலையைப் பார்த்து ஆராய்ச்சி செய்வோம். வருங்காலம் சிறப்பாயிருக்க வழி தேடுவோம். அது தான் புத்திசாலித்தனம்.

(இக் கட்டுரை புத்தா ஆர்ட்ஸ் நடத்திய "அருண்" எழுதிய "ஆடிய அரசு" மலர் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.)

# சென்னையில் புயல்!

சென்னை - ஆழ்வார்பேட்டை மரத்தின் வயது 100 பொருள் சேதம், போக்குவரத்து தடை, தந்திக் கம்பி ''படார்'' என்றது. [போட்டோ. பிலோ இருதயநாத்.

எல்லாப்பத்திரிகைகளும், "புயல் சின்னம் — வங்காளக் கடலில்' என்று பிரசுரம் செய்தபோது அதை பொது மக்கள் கவனிக்கவில்லை. சிலர் கவனித்தார்கள். ஆனால் அன்று ஞாயிற்றுக்கிழமை அநேகர் வேலைக்குப் போகாமல் அவரவர்களின் வீடுகளில் இருந்தார்கள்.

நல்ல பகல் நேரம் சிலர் சாப்பிடும் வேலையில் இருந்தார்கள். காற்று நாகம் சீருவதைப்போல் வீசியது. ''படார்—படார்'' என்ற ஓசையில் மரங்கள் முறிந்து விழுந்தன. குடிசைகளும் ஓடுகளும் பறந்தன. வண்டிகள் நின்றுவிட்டன. மூட்டை முடிச்சுகளுடன் மழையில் ஓடினார்கள் பலர்.

புயல் உண்டாவதற்கு முன் மீனம்பாக்கம் வான நிலை ஆராய்ச்சி நிலையத்தார் பொதுமக்களுக்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன், புயலைப் பற்றி எச்சரிக்கை செய்தார்கள்.

புயல் உண்டாவதற்குக் காரணம் என்ன? கடலிலோ தரையிலோ புயல் உண்டாகலாம். ஆனால் தரைப்புயலைக் காட்டிலும் கடல் புயலுக்கு வேகமும் மழையும் அதிகம்.

புயல் உண்டாகுமிடத்தில் அழுத்தும் சக்தி அதிகமானால் அந்தக் காற்று அழுத்தும் சக்தி குறைவாக இருக்குமிடத்தை நோக்கி வீசும். அழுத்தும் சக்தியின் தன்மையைப் பொருத்து புயல்காற்றின் வேகத்தை மைலுக்குகணக்கிடப்படும்.

இப்பொழுது சென்னையில் அடித்த புயல் கடற் புயல். ஆனால் அது தரையை நோக்கி அடித்தாலும், தரை மட்டத்தை நோக்கி அடிக்காமல், தரை மட்டத்திலிருந்து சுமார் நூறு அடி அடித்த புயலின் உயரத்தில் அடித்தது. அப்படி சேதமே சில லக்ஷங்கள் என்று கணக்கிடப்படுகிறது.

இந்தப் புயலில் சேதமானவைகளுக்காக அநேக நடிகர்களும், அரசாங்கமும் ஆயிரக்கணக்கில் பண உதவி செய்தார்கள். அவர்களை நாம் போற்ற வேண்டும் அல்லவா? சென்னை போலீஸ் இலாகா செய்த சேவைய்யை மிகவும் குறிப்பிடவேண்டும்.

★

மௌபரீஸ் ரோடு—பொருள் சேதம், உயிர்ச் சேதமில்லை. மரத்தின் வயது 80.
[போட்டோ: பிலோ இருதயநாத்.

# "ப்ரமர கீதம்" ரஸிகர்

"அவனுடன் இனி ராசி இல்லை"

[கிருஷ்ணவதாரத்தில் கண்ணனது திருவிளையாடல்களில் ஆனந்தம் கொண்டவர் பலர். கண்ணனிடத்தில் வைத்துள்ள அன்பு காரணமாக கண்ணனை அடித்தவரும் உண்டு. அணைத்தவரும் உண்டு. கண்ணன்பால் கொண்டுள்ள அன்பு காரணமாக அமைந்துள்ள இந்த ரஸமான சம்பவத்தை "ரஸிகா" நன்ருக விளக்கி யுள்ளார்.

ஆசிரியர்.]

விருப்பமே, சில சமயங்களில் சிற்சிலகாரணங்களால் வெறுப்பை உருவாக்குகிறது. ஆனல் அந்த வெறுப்பு, நிலையில்லா வெறுப்பாக ஆவதோடு, முன் விருப்பத்தைப் பன்மடங்காகவு மாக்குகிறது. இவ்வெறுப்பும் அன்பு வயலில் தான் பயிராகிறது. ஆனல் விருப்பிற்கு உரமாகிறது. இவ்வகையில் தான் எழுந்தது 'பிரமர கீதம்'. இந்நிலையை ஒவ்வொரு ஜீவனும் ஒவ்வொரு காலத்தில் அடைகிறது என்பது வெளிவரும் பேச்சுக்களாலும், சேஷ்டையாலும் அறிய இயலும்.

கண்ணனிடத்தில் அன்புக் கோபம்கொண்ட கோபிகைகள் கூறும் விதத்தைப் பாருங்கள்.

"தேனுள்ளவரையில் தேன் நிறைந்த மலரிடம் ஆட்டம் ஆடி அலைந்து, பாடி, அதில் அமர்ந்து இறுகப்பிடித்து, இரண்டறக்கலந்துத் தேனைப் பருகி, மெல்லநகரும் ஏ கரும்வண்டே! உன் தொடர்பு போதும். உன்னைப் போன்ற உன் தோழனையும் யாம் அறிவோம். காலில் விழுந்து, கழுத்தைவளைத்து கைகுவித்து நிற்கும் கார்யவாதிகளை நம்பிமோசம் போனேம். அநுபவம் வந்துவிட்டது. யாரிடம் ஆட்டம் ஆடினல் பயன் உண்டோ அங்கு செல். உண்ட வீட்டில் இரண்டகம்நினைக்கும் உன்போன்ற அக்கண்ணனையும், அவன்போன்ற நிறம் பெற்ற உன்னையும் இனி எண்ணேம். நகரும்போது உலுக்கிச் செல்லும் நீ, வரும்போது, இனிய கீத ஓசையும், அழகிய கருநிறமும் ஆடும் ஆட்டமும், அவன் எண்ணத்தை ஏற்படுத்துகிறது. இனி ஏமாற்றமில்லை. விழித்தோம். அவன் செயல்களை அறிந்தோம். வேறு வழியில்லாமல் ஒளிந்த காலத்தில் அன்று கோகுலத்தில் எங்களுடன் தொடர்புகொண்டு, மற்றதை மறந்தவன்போல் நடித்து எங்கள் உள்ளத்தை திருடிய திருடன் அவன். நீயோ அவன் தூதன். புரிந்து விட்டது நிறமும் ஒத்து, கீதமும் ஒத்து, நடத்தையும் ஒத்து இருக்கும் உன் தொடர்பு வேண்டாம் என்றே தீர்மானித்தோம். இன்று அவன் நாகரீகப் பெண்களுடன் வடமதுரையில் அலைகிருன். அப்பெண்கள் அவனது வதனத்தைப் பார்க்கட்டும். அன்பு ததும்ப பேசட்டும். ஹே வண்டே! அவன் ஆசையை விடப்பார்க்கிருேம். ஆனல் என்னமாயமோ விடமுடியவில்லை. இல்லம் மறந்தோம். எங்கள் குலம் மறந்தோம். சிலம் மறந்தோம். ஆயினும் அவன் எங்களை விட்டு விட்டு, ஏமாற்றி, மறைந்து மற்ற மங்கையருடன் அகமகிழ வாழ்கிருன். அன்று எங்களிடம் சொன்ன சொல்லை மறந்தான். எங்களுள் லக்ஷ்மீ ஒருவள்தான் இடைவிடாமல் அவனுடன் வாழ்கிருள். அவள் மகா புண்ணியவதி. கண்ணன் என்ற பேச்சைத் தவிர மற்ற பேச்சு உண்டானல் எங்களிடம் பேசுவாய். அவனைப் பற்றிப் பேசாதே.

கறுத்தவரின் நட்பை இனி விரும்போம் போதும். அவன் நிறம் கொண்ட கரும்வண்டே! புரம் நிற்காதே. புண்படுத்தாதே. என்று வெறுப்பின் உச்ச நிலையை எட்டிய அந்தப் பெண்களின் மனம், நிலையில்லா வெறுப்பில் உதயமாகி, பேசி, பிதற்றி கடைசியில் கண்ணனின் பேரன்பாய் மாறுகிறது.

விருப்பு வெறுப்பாக மாறினலும், கடைசியில் முன்னைக் காட்டிலும் பன் மடங்கு விருப்பம் அதிகரித்து விடுகிறது.

**அருமைச் சகோதரியின் ஆதரவிலே நடந்துவந்த அனந்தன் குடும்பம் அரைக்கணம்கூட அவளில்லாது நடைபெறவில்லை யென்றால்.........?**

# அன்பின் கட்டளை

'திருவரசி'

''மாலா, நாழிகையாகிவிட்டதே! இன்னமுமா அடுப்புமூட்டுகிறாய்?'' என்று இரைந்தான் அனந்தன். கையும்காலும் பரபரவென்று துடித்தன அவனுக்கு. கையில் வைத்திருந்த கண்ணாடி சீப்புடன் ஒரே தாவலில் உள்ளே ஓடினான். அப்போதுதான் அவன் மனையாள் மாலா புகையும் அடுப்பில் மேன்மேலும் மண்ணெண்ணெயை ஊற்றிக்கொண்டிருந்தாள். அடுப்பும் எரிந்த பாடில்லை. மணி ஆறரை ஆகிவிட்டதற்கு அறிகுறியாக கடிகாரம் 'டாண்' என ஒருமுறை ஒலித்து விட்டு ஓய்ந்தது. ''ஐயையோ! இன்னும் அரைமணிதானே இருக்கிறது?'' என்றபடியே தலையை அவசர அவசரமாக ஒரு முறை தள்ளிவிட்டுக்கொண்டு உள்ளே ஓடினான் அனந்தன். 'நீபோ அந்தண்டை. நான் பற்றவைக்கிறேன் பார்! அக்கா இருந்தால் இவ்வளவு நாழிகையில் சமையல் முடிந்து, நான் சாப்பிட்டிருப்பேனே? நீ இப்போதுதான் அடுப்பே பற்றவைக்கிறாய்!' என்றபடியே மாலா அடுப்பில் திணித்து வைத்திருந்த வறட்டிகளையும், சுள்ளிகளையும் இழுத்துவிட்டுக் கொஞ்சம் உமியைக் கொண்டு வந்துபோட்டு, இரண்டே விறகுகளை வைத்து அடைசலில்லாமல் அடுப்பைப் பற்ற வைத்தான்.

கணவனருகே நின்றிருந்த மாலா வியப்புடன் 'என்ன இருந்தாலும் உங்களுக்கும் அக்காவுக்கும் மட்டும் தான் இந்த ஊர் விறகு எரிகிறது! எனக்குச் சவுக்கு விறகைத் தவிர வேறு எதையும் வைத்து அடுப்பு மூட்டத்தெரியாது' என்றவாறே கெட்டிலில் தண்ணீரை ஊற்றி அடுப்பில் வைத்தாள். 'ஆமாம். என்ன இருந்தாலும் சீமான் வீட்டுப் பெண்ணல்லவா நீ? ஸ்டவ் அடுப்பு, சவுக்கு விறகு பம்பாய்க்கும்மட்டி இவைகள்தான் எரியவிடத் தெரியும் உனக்கு? என் அக்காவும் உனக்குமேல் அருமையாக வளர்ந்தவள்தான். ஆனால் அவள் வாழ்வின் மேடு பள்ளங்களை உணர்ந்தவள். உன்னைப் போல நகத்தில் அழுக்கு ஏறாமல் வளரவில்லை அவள். என்னைக் காப்பாற்றுவதற்காக அவள் பட்ட சிரமங்கள் ஆண்டவனுக்குத்தான் தெரியும். எனக்குச் சிறுவயதில் இதுமாதிரி வேலைகளைக் கற்றுக் கொடுக்காவிடில், இந்தப் பாழாய்ப் போன ஊரில் ஹோட்டல் இல்லாதிருப்பதற்கு அதற்கும், நான் இன்று காப்பிக்குத் 'ததிங்கிணதோம்' தாளம் போடவேண்டியதுதான்' என்றான்.

இதற்குள் பில்டரில் பொடியைப் போட்டு கொதித்த நீரை எடுத்து ஊற்றிப் பாலைக்காய்ச்சிக் காப்பியும் தயார் செய்துவிட்டான். தானும் குடித்து மாலாவுக்கும் கொடுத்து விட்டு ஆபீஸுக்குக் கிளம்பி விட்டான். மாலா வியந்தேபோனாள். 'இவ்வளவு தூரம் கற்றுக்கொண்டிருக்கிறீர்களே! எல்லாம் உங்கள் தமக்கையின் 'ட்யூஷனா'யிருக்கும்!' என்றாள். பெருமையுடன் சிரித்தான் அனந்தன். 'இதுதானா தெரியும் எனக்கு? சமைக்கக்கூடத் தெரியுமாக்கும்! மத்தியான்னம் வந்து நான் சமைக்கிறேன் இன்று. உன் சமையலை நாளைக்கு வைத்துக் கொள்ளலாம்' என்று சொல்லிக் கொண்டே சைக்கிளை ஓங்கி மிதித்தான். சைக்கிள் பறந்தது. அவன்

தலை மறையும் வரை பார்த்துக் கொண்டே நின்றாள் மாலா. தலை மறைந்ததும் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்தாள். அவள் சிந்தனைச் சைக்கிளும் சுழன்றோடத் தொடங்கியது.

卐

மிகப்பெரியதோர் கம்பெனியின் முதலாளியான வைரநாதனின் ஒரேமகள்தான் மாலா. 'சீரும் சிறப்புமாக' என்ற சொல்லின் முழுப் பொருளும் மாலாவை வைரநாதன் தம்பதிகள் வளர்த்த முறைக்குத் தான் பொருந்தும். தாய் தந்தையரின் முழு அன்பும் குன்றுமணி கூடக்குறைவில்லாமல் அவளுக்கே கிடைத்தது. நிறையப்படிக்க வைத்னர் ஆனால் பெண்களுக்கு வேண்டிய படிப்பைக் கற்றுத்தராமலேயே. மாலாவுக்குத் திருமணப் பருவம் வந்தவுடனே அவர்கள் தேடாத வரன் இப்பூவுலகில் ஒருவரும் இல்லை. ஒருவரும் தன் அந்தஸ்துக்குச் சமமானவர்களாகவே தென்படவில்லை. தபாலாபீஸில் உத்தியோகம் வகிக்கும் அனந்தனையும் தான் வைரநாதன் மாப்பிள்ளையாக்கிக்கொள்ள விரும்பினார். ஆனால் அவனிடம் அவருக்கேற்ற அந்தஸ்து இல்லை.

ஆயினும் அனந்தனையே முழுமனதுடன் வரித்தாள்மாலா. அந்தஸ்து ஒன்று குறுக்கே நின்றது. திடுமென வைரநாதனின் கம்பெனி நொடித்துப் போய்ப் போட்ட முதலுக்கே திண்டாட்டம் ஏற்படவே 'குணமே சாசுவதம்' என்பதை உணர்ந்த வைரநாதன் மாலா-அனந்தன் திருமணத்தை அதிவிமரிசையாக முன் இருந்த அந்தஸ்திற்குத் தகுந்தவாறே நடத்தினார்.

'நடுத்தரச் சம்பள உத்தியோகஸ்தினன் தானே? மணமானவுடன் மருமகனைத் தம்வீட்டிலேயே வைத்துக்கொண்டுவிடலாம் என்று எண்ணினார் வைரநாதன். ஆனால் அனந்தன் இசையாததால், சில மாதங்கள் சென்ற பின்பு மாலாவை மல்லியூருக்குக் கொண்டுவந்துவிடுவதாகக்கூறிச் சம்மதம் பெற்றுக் கொண்டு சென்றார்.

இரண்டு மாதங்கள் கழித்து அனந்தனின் தமக்கையான பங்கஜா, மாலாவை அழைத்துக் கொண்டு வரும்படி வைரநாதனுக்குக் கடிதம் எழுதினாள். அதன் படியே மாலா மல்லியூர் வந்து சேர்ந்தாள். மாலாவந்து ஒரு மாதம்வரை பங்கஜா இருந்து தம்பி மனைவிக்கு வேலைகளையெல்லாம் கற்றுக்கொடுத்தாள். அது பொருந்தாது. தான் வேலை செய்யும்போது மாலாவைப் பார்த்துக் கொண்டிருக்கச் சொன்னாள் என்பதுதான் பொருந்தும். சமைத்தவுடனேயே அனந்தனையும் மாலாவையும் ஒன்றாக உட்கார வைத்துப் பரிமாறுவாள் பங்கஜா. அனந்தன் கோபிப்பான். 'ஏன் அக்கா? நீ உட்காரேன் சாப்பிட. மாலா பரிமாறுகிறாள்?' என்பான். 'போடா நீ உன் வேலையுடன். சிறிசு அவள்! எவ்வளவு நாழிகை சாப்பிடாமல் இருப்பாள்?' என்பாள் பங்கஜா.

பங்கஜா, மாலாவை வேலையே செய்யவிடமாட்டாள். வேளைக்கொருவித அலங்காரம் செய்து பார்த்து மகிழ்வாள், மாலாவுக்கு. 'அவளுக்கு இவ்வளவு செல்லம் கொடுக்கிறாயே அக்கா? நாளைக்கே நீ ஊருக்குப் போய்விட்டால் அவள் இப்படியே அலங்காரம் செய்து கொண்டே நின்று கொண்டிருப்பாள். நான் சமைக்கவேண்டி வரும்' என்பான் அனந்தன் குத்தலாக. பங்கஜா சிரித்தபடியே 'நன்றாயிருக்கிறதடா நீ சொல்வது? அவள் சிறு குழந்தையா என்ன? நாளைக்கே நான் ஊருக்குப் போய் விட்டால் அவள் சமைக்க மாட்டாளா? இப்படியேவா நின்று கொண்டிருப்பாள்? 'சிரிப்பும் இனிப்பும் சிலகாலம் தானே' என்பாள். இப்படியே அவர்கள் இருவரையும் களிப்பில் ஆழ்த்திக்கொண்டும், அவ்வீட்டை எழுந்தது முதல் படுக்கும்வரை வளையவந்துகொண்டிருந்தாள் பங்கஜா. நேற்றுவரை

ஆனால் இன்று அவள் இல்லை. நேற்று அவள் ஊருக்குக் கிளம்பும் போது உடன் பிறந்தசகோதரியைப் பிரிவதுபோல மாலா அழுதேவிட்டாள். 'சீ அசடே, அழுவார்களோ யாராவது? ஒரு சனியன் நந்தி போல் குறுக்கே இல்லாமல் தொலைகிறதே என்று சந்தோஷப்படாமல்...' என்றாள் பங்கஜா. 'நான் அப்படி உங்களை நினைக்கமாட்டேன் அக்கா' என்றவாறே கண்ணீர் உகுத்தாள் மாலா. 'பைத்தியமே வேடிக்கைக்காகச் சொன்னேனடி. இதற்கு அழுகிறாயே. போய் வருகிறேன். சமர்த்தாக இரு. என்ன வரட்டுமா?' என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டாள் பங்கஜா.

அவள் இல்லாத அருமை இப்போதுதான் தெரிந்தது மாலாவுக்கு. அவளுக்குத் தன் தாயின்மீது மிகுந்த ஆத்திரம் வந்தது. 'கேவலம் ஒரு ஆண் பிள்ளை எவ்வளவு பாங்காக வேலைகள் செய்கிறார்? நாமும் வளர்ந்திருக்கிறோமே தடி மாடு மாதிரி ஒன்றும் தெரியமால்' என்று தன்னைத்தானே நொந்துகொண்ட அவளுக்குத் தன்னை அம்மாதிரி வளர்த்த தாயின்மீதுதான் எரிச்சலாக வந்தது.

卐

கதவு தட்டப்படும் சப்தம் கேட்ட அவள் தன்னைச் சிந்தனையினின்றும் விடுவித்துக்கொண்டு கடிகாரத்தை நோக்கினாள். மணி பதினொன்றுக்கு மேல் ஆகிவிட்டதை அறிந்ததும் ஓடிப்போய் அலுவலகத்திலிருந்து வந்துவிட்ட தன் கணவனுக்குக் கதவைத் திறந்தாள். சைக்கிளைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தான் அனந்தன். பரபரவென்று கால்கைகளைக் கழுவிக்கொண்டு, அடுப்பைப் பற்றவைத்துச் சாதம், குழம்பு, கறி, ரஸம் எல்லாவற்றையும் ஒரே கொடியில் செய்து முடித்தான். 'மாலா முதலில் நீ உட்கார் நான் பரிமாறுகிறேன். என்னுடைய நளபாகத்தைக் கொஞ்சம் சுவைத்துப்பார்' என்றான். மாலாவை நோக்கி, 'ஊஹூம் நான் பரிமாறுகிறேன். நீங்கள் உட்காருங்கள். அதற்குக்கூடவா நான் லாயக்கில்லை?'' என்றாள் மாலா. முடிவில் இருவரும் ஒன்றாய் அமர்ந்து உண்ண ஆரம்பித்தனர்.

'சமையல் எப்படியிருக்கிறது மாலா?' என்றான் அவன். 'கேட்க வேண்டுமா என்ன? எல்லாம் ஏ ஒன்' என்றாள் அவள். 'இருந்தாலும் அக்கா சமையலுக்கு அடுத்தபடிதான்' என்றான் அவன். தொடர்ந்து 'அக்கா அடிக்கடி சொல்வாள் 'நாளைக்கே உனக்குக் கலியாணம் ஆகி, மனைவிக்குச் சமைக்கத் தெரியாவிட்டாலும், அவள் லீவு போட்டுவிட்டாலும் திடுமென்று ஹோட்டலில் காசைக் கொண்டுபோய்க் கொட்டாமல் வீட்டிலேயே நல்ல மணமுடன் சமைத்துச் சாப்பிடலாம் பார்! 'களவும் கற்று மற' என்பது போல் எல்லா வேலையுடனும் சமையலும் தெரிந்திருக்க வேண்டும். ஒரு சமயத்துக்குப் பயன்படும்' என்பாள்.



என்னை அழைத்து வைத்துக் கொண்டு எல்லா வேலைகளையும் காட்டிக் கொடுப்பாள். அப்போது எனக்கு அக்காமீது கோபமாக வரும். இப்போதல்லவா அதன் அருமை தெரிகிறது? ஏன் மாலா! அக்கா நேற்றுதான் போனாள். அதற்குள் அவளைப்பார்த்து வருஷக்கணக்கில் ஆனது போல இல்லை!' என்றான்.

திகை[illegible]த வாய்மூடாமல் கணவனின் ஐ. [illegible] எஸ். (இண்டியன் குக்கிங் ஸர்வீஸ்) டிரெயினிங்கை கேட்டுக்கெட்டுக்கொண்டிருந்த மாலா சடக்கென 'ஆமாம்! வீடே 'வெறிச்'சென்று இருக்கிறது அக்கா ஊருக்குப் போனதுமுதலே' என்றாள். இருவரும் எழுந்து சென்று கைகழுவினர்.

卐

பிற்பகல் காரியாலயத்துக்குச் சென்றுவிட்டு வந்துகொண்டிருந்த அவன் உள்ளே நுழையுமுன்பே 'மாலா ரெடியா?' என்று கேட்டுக்கொண்டேவந்தான். 'ஓ நான் எப்பொழுதோ இருந்து காத்துக்கொண்டிருக்கிறேனே' என்றபடியே வெளியே வந்தாள் மாலா. 'எங்கேபோக என்று நினைத்துக்கொண்டு 'ரெடி' என்கிறாள் என்றான் அவன். 'நீங்கள் எங்கே கூப்பிடுகிறீர்களோ அங்கே வருகின்றேன். 'ராமன் இருக்குமிடம்தானே சீதைக்கு அயோத்தி' என்றாள் மாலா குறும்புச் சிரிப்புடன். சரி அப்படியானால் புறப்படு. அயோத்திக்குப் போகலாம்' என்று கண்ணைச் சிமிட்டினான் அனந்தன். இருவரும் வீட்டைப் பூட்டிக்கொண்டு கிளம்பினர்.

திடீரென வந்துநின்ற தம்பியையும் அவன் மனைவியையும் கண்ட பங்கஜா திகைத்தாள். ஏன்டா நேற்றுத்தானே நான் இங்குவந்தேன்? அதற்குள் வீட்டைப் போட்டது போட்டபடி விட்டுவிட்டுக் கிளம்பி வந்துவிட்டீர்களே இருவரும்!' என்றாள்.

'பின் என்ன? உன்னுடன் ஒரு பாட்டம் சண்டைபோட்டுத் தீர்க்கத்தான் நான் வந்திருக்கிறேன். உனக்கு ஈவு இரக்கம் இருக்கிறதா? இருந்தால் என் மனைவியை அப்படிக் கொடுமைப் படுத்துவாயா? நீ அவளுக்குச் செய்த கொடுமைக்குப் பிராயச்சித்தத்தை அங்குவந்தால்தான் செய்துகொள்ளலாம்' என்றான் அனந்தன். 'என்ன கொடுமையா? நானா செய்தேன்?' என்று திகைத்தாள் பங்கஜம். மாலா கலகலவென்று சிரித்தாள். 'இல்லை அக்கா எனக்கு ஒரு வேலையும் செய்யத் தெரியாமல் பொம்மை மாதிரி ஆக்கி வைத்து விட்டீர்கள் அல்லவா? எனக்கு அடுப்பு பற்றவிடக்கூடத் தெரியவில்லை. ஒருவேலையும் செய்யவிடாமல் எல்லாவற்றையும் நீங்களே செய்துகொண்டீர்கள்! நான் உதவாக்கரையாய் நிற்கிறேன். இவர் வேறு 'சமைக்கிறேன் பேர்வழியே' என்று கிளம்பிவிடுகிறார் எனக்கு வெட்கமாயிருக்கிறது. நீங்கள் கட்டாயம் கிளம்பித்தான் வரவேண்டும். சீக்கிரம் கிளம்பி வாருங்கள் என்னோடு. எனக்குச் சற்று வேலையில் பழக்கம் வந்தவுடன் நீங்கள் இங்கு வரலாம்' என்றாள். 'ஆமாம் அக்கா! 'நாத்தனார் கொடுமை' என்பதை நிருபிப்பதுபோல வேலையில் பழக்காமல் என் மனைவியைக் கொடுமைப் படுத்திக் குட்டிச்சுவராக்கி இருக்கிறாயே! கிளம்பு! இவள் சமைத்து அதை நீ ஒருநாள் சாப்பிட்டால்தான் உன் கொடுமைக்குப் பிராயச்சித்தம் ஆகும். உம், புறப்படு!' என்றான் அனந்தன்.

திகைத்து நின்ற பங்கஜம் நகைத்தாள். 'தேவலையே' என்னவோ என்றல்லவா பார்த்தேன். சமர்த்துதான் நீங்கள் இருவரும்' என்றபடியே கொடியில் கிடந்த புடவையை மடித்து எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டாள் தம்பியுடன். அன்பின் கட்டளையை மறுக்க முடியுமா யாராலும்?

# எழுத்தாளனாவது எப்படி?

தே. பார்த்தசாரதி

தானும் ஒரு பிரபல எழுத்தாளனாக வேண்டும் என்ற ஆசை அனேக இளைஞர்களுக்கு இருக்கிறது. ஆனால் ஆசைமட்டும் இருந்து விட்டால் போதுமா? எழுத்தாளனாவது எப்படி என்று தெரியவேண்டாமா? சுலபமாகக் கதைகள் எழுதி எழுத்தாளனாக விரும்பும் இளைஞர்களுக்காகத்தான் இலக்கியப் பத்திரிகையான "மாலா" மூலமாக இந்தக் கட்டுரையைச் சமர்ப்பிக்கிறேன்.

இப்பொழுதெல்லாம் 'எப்படி?' புத்தகங்கள் நிறைய வெளிவந்து கொண்டிருக்கின்றன. 'அழகாயிருப்பது எப்படி?' எண்ணெய் தேய்த்துக் கொள்வது எப்படி?' 'பணம் சம்பாதிப்பது எப்படி?' 'பவுடர் பூசுவது எப்படி?' என்று அனேக புத்தகங்கள் பிரசுரமாகியிருக்கின்றன. ஆனால் 'எழுத்தாளனாவது எப்படி?' என்பது பற்றி ஓர் ஆசிரியராவது புத்தகம் எழுதியிருப்பதாகத் தெரியவில்லை. ஒரு வேளை 'ஏற்கெனவே இருக்கும் எழுத்தாளர்கள் போதும் இன்னும் இந்தப் புத்தகத்தைப் படித்து விட்டுப் புதிய எழுத்தாளர்கள் வேறு வந்துவிட்டால் என்ன செய்வது?' என்ற பயத்தில்தான் யாரும் இதைப்பற்றி எழுதத் துணியவில்லை என்று நினைக்கிறேன்.

ஆயினும் எனக்குத் தோன்றிய சில கருத்துக்களை இந்தக் கட்டுரையில் எழுதியிருக்கிறேன். நான் அனேக எழுத்தாளர்களுடன் கலந்து பழகியிருப்பதாலும், கதைகள் எழுதிப் பத்திரிகை அலுவலகங்களைப் படையெடுத்திருப்பதாலும் இத்துறையில் எனக்குச் சில அனுபவங்கள் உண்டு. அந்த அனுபவங்களின் அடிப்படையில் எழுதப்பட்டதே இக்கட்டுரை.

முன்னுரை இவ்வளவு போதும் என்று நினைக்கிறேன். இனி கட்டுரைக்கு வருவோம்.

எழுத்தாளனாகும் ஒருவனுக்கு முதலில் கீழ்க் [illegible] அம்சங்கள் இருக்கவேண்டும்:

1 ஒழுகும் பேனா
2 ஒன்சைட் பேப்பர்
3 உடைந்த மேசை
4 நடனமாடும் நாற்காலி
5 மல் ஜிப்பா
6 சேலம் குண்டஞ்சு வேஷ்டி (பட்டுக்கரை போட்டது)
7 குப்பைக் கூடை
8 முகம் பார்க்கும் கண்ணாடி
9 பற்கள்
10 பொறுமை

இந்தப் பத்து அம்ச திட்டத்தைப் பார்த்ததும் உங்களில் சிலருக்கு ஓர் ஐயம் எழலாம். 'என்னென்னவெல்லாமோ இருக்கும் இந்த 'லிஸ்'டில் கற்பனை என்ற அம்சத்தைக்காணோமே' என்பதுதான் அது.

நீங்கள் நினைப்பது தவறு. எழுத்தாளர்களுக்குக் கற்பனை இருந்துதான் ஆகவேண்டும் என்பது அவசியமில்லை. அது இல்லாமலே இந்தக் காலத்தில் எவ்வளவோ பேர் எழுத்தாளர்களாக இருக்கிறார்களே!

மேலே சொன்ன அம்சங்களெல்லாம் உங்களிடம் இருக்கின்றன என்று வைத்துக் கொள்ளுங்கள். சரி; இனிமேல் எழுத்தாளனாக வேண்டியதுதான்.

முதலில் நடனமாடும் நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளுங்கள், ஒன்சைட் பேப்பரை உடைந்த மேசைமீது வைத்துக்கொள்ளுங்கள். குப்பைக்கூடை அருகில் தயாராக இருக்கிறதா என்று பார்த்துக்

கொள்ளுங்கள். பிறகு ஒழுகும் பேனவை எடுத்துக்கொண்டு எழுத ஆரம்பியுங்கள்.

என்ன எழுதுவது?

அதுதான் அடுத்தபிரச்னை என்ன தான் தலையைச் சொறிந்து கொண்டாலும் எழுதுவதற்கு விஷயம் அவ்வளவு எளிதில் கிடைக்காது. எனவே, பேனவை மேசைமீது வைத்துவிட்டு. சற்று நேரம் பின் கை[illegible]த்துத் திறந்[illegible]காண்டு அறையில் அப்படியும் இ[illegible]டியும் நடை போடுங்கள். எவ்வளவுக் கெவ்வளவு வேகமாக நடைபோடுகிறீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரம் கால்வலிக்க ஆரம்பிப்பதோடு எழுதுவதற்கும் விஷயம் கிடைக்கும். 'இது என்ன 'எக்ஸர் ஸைஸா?' என்று அலுத்துக் கொள்ளாதீர்கள். பின்னே எழுத்தாளனவது சும்மாவா?

அரைமணி நேரம் நடந்தபிறகு, கால் வலித்ததுதான் கண்டபலனக இருக்குமே தவிர, 'ஐடியா' ஒன்றும் உதிக்காது. 'சே, என்னடா இது? நாம் கதையும் எழுத வேண்டாம், 'கால்வலியும் சம்பாதித்துக்கொள்ள வேண்டாம்' என்று எரிச்சலாக வரும் ஆனல்கோபத்தையெல்லாம் பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்துக்கொள்ள வேண்டியதுதான். (அதனல்தான் எழுத்தாளருக்கு இருக்கவேண்டிய பத்து அம்சங்களில் பற்களையும் சேர்த்துக்கொண்டிருக்கிறேன். எழுத்தாளர்களுக்கு அடிக்கடி கோபம் வரும். அப்பொழுதெல்லாம் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்துக்கொள்ள வேண்டும். பல் இல்லாதவர்கள் பாடு திண்டாட்டம்தான்.)

சற்றுநேரம் நடந்ததும் சமையலறைக்குச்சென்று ஒரு டம்ளர் குளிர்ந்த பானைத் தண்ணீர் சாப்பிட்டு விட்டு வாருங்கள் (முடியாதவர்கள் காப்பி சாப்பிடலாம்.) பிறகு மீண்டும் அறைக்குள் நடைபயிலுங்கள். பலஹீனமாக இருப்பவர்கள் ஒரேயடியாக நடக்காமல், தினசரி அரைமணி நேரம் நடக்கலாம். இதனல் கடைசியில் நீங்கள் எழுத்தாளனகமட்டுமின்றி, உடற்பயிற்சியாளனகவும் ஆவீர்கள். ஒரே கல்லில் இரு மாங்காய்கள்!

கடைசியில் 'சடா' ரென்று உங்கள் மூளையில் மின்னல் போல் ஒரு யோசனை பளிச்சிடும். உடனே சற்றும் தாமதிக்காமல் பழையபடி நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு எழுத ஆரம்பியுங்கள்.

'கதைக்குத் தலைப்பு வைக்க வேண்டுமே' என்று சிலர் கேட்பது காதில் விழுகிறது. அது ஒன்றும் தலைபோகிறகாரியமில்லை. கதையை உருப்படியாக முடித்துவிட்டு அல்லவா தலைப்பு வைக்கவேண்டும்!

எப்படிக்கதையை ஆரம்பிப்பது?

அதற்குப் பல வழிகள் உண்டு. முதலில் நீங்கள் இதுவரையில் படித்திருக்கிறதோ, அப்படி ஆரம்பியுங்கள். மாதிரிக்கு இங்கே சில ஆரம்பங்கள் தருகிறேன். இதோ ஓர் ஆரம்பம்:

'ராமுவின் முகத்தில் அசடு வழிந்தது...'

இதை எழுதிவிட்டு உடனே எதிரே தயாராக இருக்கும் முகம் பார்க்கும் கண்ணாடியில் உங்கள் முகத்தைப் பாருங்கள். (இப்போது தெரிகிறதா கண்ணாடியின் உபயோகம்?) உங்கள் முகத்தில் அசடுவழிவது தெரியும், ஏனென்றல், அதற்குமேல் என்ன எழுதுவதென்றே தெரியாது! 'சே, இது நன்ருக இல்லை. வேறுமாதிரி ஆரம்பிக்கலாம்' என்று தோன்றும் உடனே அந்தப் பேப்பரைக் கசக்கி உருண்டையாக்கிக் குப்பைக்கூடையில் போடுங்கள். வேறு ஓர் ஒன்ஸைட் பேப்பரை எடுத்துகொண்டு எழுத ஆரம்பியுங்கள்.

இதோ அடுத்த ஆரம்பம்.

கடிகாரம் 'டிங்...டிங்...' என்று எட்டுமுறை ஒலித்து ஓய்ந்தது. கந்தன் ஆடுதிருடின கள்வனைப் போல் விழித்துக் கொண்டிருந்தான்...'

கடிகாரம் மணி அடிப்பதற்கும், கந்தன் விழிப்பதற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்காதீர்கள். ஏதோ மனதில் தோன்றுவதை எழுத வேண்டியதுதான். எப்படியாவது ஓர் ஆரம்பம் செய்யவேண்டாமா? 'கந்தன் ஆடு திருடிய கள்வனைப் போல் விழித்தான் என்று எப்படி 'அக்யுரேட்'டாகச் சொல்வது? ஆடுதிருடியகள்வன் விழித்து நான் பார்த்ததே இல்லையே!' என்று சிலர் சொல்லலாம். அதில்தான் தவறு செய்கிறீர்கள். ஆடு திருடிய கள்வன் விழித்துயாரும் பார்த்தது கிடையாது. ஆகவே உங்கள் கதையைப் படிப்பவர்கள் (அது பிரசுரமானால்தான்) உங்களை யாதொரு கேள்வியும் கேட்கமாட்டார்கள்.

ஆனால். இதிலும் ஒரு சங்கடம் என்னவென்றால், மேலே என்ன எழுதுவது என்று தெரியாததுதான். அதற்காகக் கவலைப்படாதீர்கள். இந்தப்பேப்பரையும் முன்போலவே கசக்கி உருண்டையாக்கிக் குப்பைக் கூடையில் போடுங்கள். (இப்படி அடிக்கடி குப்பைக் கூடையில் போட்டுக் கொண்டிருந்தால் தான், குப்பைக் கூடையின் மீதிருக்கும் பயம் விலகும்.)

அடுத்தபடி நீங்கள் இதற்குமுன் படித்திருக்கும் துப்பறியும் கதைகள் நினைவுக்கு வரும். உடனே உங்களையறியாமல் உங்கள் கை கீழ்க் கண்டதுபோல் எழுத ஆரம்பிக்கும்.

"டமார், டமார் என்ற பெருத்த ஓசை கேட்டது. சில், சில்லென்று கண்ணாடித் துண்டுகள் தெறித்து விழுந்தன... அம்பி எறிந்த கிரிக்கட் பந்து ஜன்னலை உடைத்ததால்தான் இவ்வளவு வினையும்..."

இதுவரையில் ஜோராக வந்து விட்டது. இனி எப்படித் தொடருவது? அம்பி எதற்காகக் கிரிக்கட் பந்தை எறிந்தான்? அப்புறம் வீட்டுச் சொந்தக்காரர் மட்டையைத் திருப்பித் தந்தாரா அல்லது மட்டையால் திருப்பித் தந்தாரா? பின்னர் எப்போது ஜன்னலை ரிப்பேர் செய்தார்?

சே, சே! இப்படி ஆரம்பித்தது பெரிய தொல்லையாகப் போய்விட்டதே! சரி. ஒரு சரித்திரக் கதையாக—ராஜா ராணிக் கதை— எழுதிப்பார்ப்போம்.

"முன்னொரு காலத்தில் கிருஷ்ணபுரி, கிருஷ்ணபுரி என்ற ஒரு தேசம் இருந்தது. அதைக் கிருஷ்ணராயர் என்ற ஒரு பருமனான அரசர் ஆண்டு வந்தார். அவருக்கு ஒரே ஒரு குறை. தனக்கு மணமாகி இவ்வளவு வருஷங்களாகியும் இன்னும் ஒரு குழந்தையும் பிறக்கவில்லையே என்ற குறைதான் அது..."

நீங்கள் படித்திருக்கும் ராஜா ராணிக் கதைகளெல்லாம் இப்படித்தான் ஆரம்பிப்பது வழக்கம். பழங்காலத்து மன்னர்களுக்கு அனேக வருஷங்களுக்குப் பிறகுதான் குழந்தை பிறப்பது வழக்கம். ஆனால், இருபதாம் நூற்றாண்டின் மன்னர்களாகிய கிரகஸ்தர்களுக்கோ 'தனக்கு இவ்வளவு குழந்தைகள் பிறந்து விட்டதே' என்பதே கவலையாக இருக்கும் போது, இந்தப் பழங்காலத்துக் கதைகள் ரசிக்குமா? ஆகவே, இந்தப் பேப்பரையும் கிழித்துப் போடுங்கள்.

கடைசியாக, ஒரு சிக்கன நடை, தற்போது அதிகமாகக் கையாளப் பட்டு வருவது என்றுகூடச் சொல்லலாம். இதோ:

"பார்த்தான். பார்த்தாள். புன்னகை பூத்தான்; பூத்தாள்...ஓடினான்; ஓடினாள்."

இந்த வாக்கியத்தை யாராவது தமிழ்ப் பண்டிதர் படிக்க நேர்ந்தால், "இது என்ன தமிழிலக்கணத்துக்கு முரண்பட்டதாக வன்றோ உள்ளது! எழுவாய். செயப்படு பொருள் ஆகியவை இன்றி எழுதப்படுவதும் ஒரு வாக்கியமா?" என்று கூறலாம். ஆனால், எழுத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டி ஓர் எழுத்தாளர் கண்டு

பிடித்த கடை இது. ஆரம்ப எழுத்தாளர்களுக்கு இதனல் பயனில்லை. ஆகவே, இந்தப் பேப்பரையும் முன் போலவே கசக்கி உருண்டையாக்கி...(கோடிட்ட இடத்தைப் பூர்த்தி செய்க.)

இவ்வாறே ஒரு வாரம் தொடர்ந்து செய்துகொண்டு வந்தால் போதும். எட்டாவது நாள் நீங்களும் ஒரு கதையை முழுவதும் எழுதி, எழுத்தாளராகி விடுவீர்கள்! உங்கள் கதையைப் படித்துப் பார்க்கும்போது உங்களுக்கே மகிழ்ச்சியாக இருக்கும்.

அடுத்தபடி எழும் பிரச்னை, இந்தக் கதையை எந்தப்பத்திரிகைக்கு அனுப்புவது என்பதுதான். அதிலும் கொஞ்சம் யோசிக்க வேண்டும். மயிர்க்கூச்செறியும் மர்மக் கதைகளைப் பாட்டிகள் படிக்கும் பத்திரிகைக்கு அனுப்பலாமா? அதைப் படித்துவிட்டுப் பாட்டிகள் மயிர்க்கூச் செறிவதற்குப் பதிலாக, கொட்டாவி விட்டுக் கொண்டு தூங்க ஆரம்பித்துவிடுவார்கள்.

இப்படியாகத்தானே "எழுத்தாளனுவது எப்படி?" என்பது பற்றி இராமாயணம் போல் தொடர்ந்து எழுதிக்கொண்டே போகலாம். ஆனல் அதைப் படித்துவிட்டு நீங்கள் 'ஆஸ்ப்ரோ' சாப்பிட நேர்ந்துவிட்டால் பிறகு என்னையல்லவா பழிப்பீர்கள்! ஆகவே, மீதி விஷயங்களையெல்லாம் தற்காலிகமாக ஒத்திப்போடுகிறேன். நான் மேலே சொல்லியிருப்பவற்றை நீங்கள் கடைப்பிடித்தீர்களானல், உங்களுக்கும் பல அனுபவங்கள் எற்படும். பின்னர், நீங்களும் ஓர் எழுத்தாளராகி 'எழுத்தாளனுவது எப்படி?' என்று மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்துவிடுவீர்கள்!

---


சந்தன நறுமணம்
நாள் முழுவதும் கமழ . . .

# மேட்டூர் சந்தன சோப்

மேட்டூர் சந்தன சோப்பை உபயோகிப்பதனல் சீரிய சந்தன நறுமணம் மட்டுமின்றி உங்கள் சருமம் ஒரு தனி மெருகுடன் சோபிக்க உதவுகிறது. மேலும் அதனின்று ஏற்படும் உற்சாக உணர்ச்சி நெடுநேரம் நீடித்திருக்கின்றது.

நீங்கள் எப்பொழுதும் கேட்டு வாங்கவேண்டிய சோப்
**மேட்டூர் சந்தன சோப்**

தயாரிப்பு :

**மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்**
மேட்டூர் அணை R. S. சேலம் ஜில்லா

மானேஜிங் ஏஜெண்ட்ஸ் :—

**சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்**

# அவளும் ஒரு தாய்தான்

★

'ஈன்றபொழுது பெரிது வந்தாள் அவன் அன்னை முன்னே; ஆனால் மகனின் தீச் செயலைக் கண்டு பெற்ற வயிற்றை நினைத்து வேதனை கொண்டாள் பின்னே!'

★

கிருஷ்ணா

"ஆரஞ்சு என்ன விலை அப்பா?"

"டஜன் மூணு ரூபா ஆயா!"

"அடேயப்பா!... டஜன் மூணு ரூவாயின்னா, அரை டஜன் ஒண்ணரை ரூபா. கால் டஜன் முக்கா ரூபா, பளம் ஒண்ணு நாலணாவா?..."

கணக்கை சொல்லால் கூட்டி மனதில் புரிந்துகொண்டு கேட்டாள் கிழவி மங்கம்மா.

"ஆமா ஆயா! ஒரு நய்யா பைஜா கூட கொறையாது. இஷ்டமிருந்தா எடு, இல்லாட்டிப் போ! சும்மா பேரம்பேசி, யாபாரத்தைக் கெடுக்காதே!..." ஆரஞ்சுப் பழக்காரன் தன் முதலாளித்துவத்தைக் காட்டினான்.

மனிதனின் உழைப்பில் உருவாவது உலக வாழ்வு. வாழ்வுக்குத் தேவையான சகலமும் அவன் உழைப்பில உண்டாகுபவையே. பால் விம்மி நிற்க, உண்ணப் பரிவுடன் அழைக்கும் தாய்போல பூமி தேவி தன் மக்களை அழைக்கிறாள். ஆனால் அவளுடைய அன்புக்கும், மக்களின் தேவைக்கும் இடையே 'பணம்' ஆட்சி செலுத்துகிறது.

"நைஸாப் போட்டுக் குடு நாயினா! என் மகன் சிக்காப் படுத்திருக்கான்—"

மங்கம்மா தன் தேவைக்கான காரணத்தை குறித்துவிட்டு அவனிடமிருந்து இரக்கத்தை எதிர்பார்த்தாள். பழக்காரன் வேறு ஒரு அம்மாளுடன் பேசிக்கொண்டிருந்தான். வைரத்தில் பிறந்து, பட்டில் குளித்து, பொன்னால் பொதியப்பட்டிருந்த அந்த அம்மாள் அட்டியில்லாமல் நான்கு டஜன் பழங்களுக்கு ஆர்டர் கொடுத்தாள்.

"இந்தாப்பா!" மங்கம்மாளின் மங்கிய குரல்தான் அது.

நாலுமணிக்கு முன்பு ஆஸ்பத்திரிக்குள் போய்விட்டால் ஆறு மணி வரையிலுமாவது அவனுடன் பேசிக்கொண்டிருக்கலாம். நேரத்தை வீணாக்கிவிடாத அவள், எட்டணா கொடுத்து

இரண்டு பழங்கள் வாங்கிக் கொண்டாள்.

'பதிமூன்றாம் நம்பர்' பஸ்ஸில் நல்ல வேளையாக இடமும் கிடைத்துவிட்டது.

மங்கம்மாவைக் கண்டதும் தானாகவே ஒரு பதினாறு பைசா டிக்கட்டைக் கிழித்து நீட்டினான் கண்டக்டர். காசைக் கொடுத்து, அதை வாங்கி தன் சுருக்குப் பையில் பத்திரப்படுத்திக் கொண்டாள்.

ஓடுகிற பஸ்ஸின் வேகத்தோடு அவளுடைய சிந்தனையும் ஓடவாரம்பித்தது.



மாணிக்கம் அவளுடைய இரண்டாவது பிள்ளை. அவன் தான் இப்பொழுது ஆஸ்பத்திரியில் நாலு மாசமாய் படுத்திருக்கிறான். மாணிக்கம் தாயைப் போல் பிள்ளை. கறுப்பாயிருந்தாலும் எடுப்பான அழகும், பெற்றவளைப் போல சாந்தமும் உறுதியும் கொண்டவன். அவனது உள்ளத்திலிருந்த உறுதி உடலில் இல்லாமலிருந்துவிட்டதுபோலும், இருந்திருந்தால் ஹார்பரில் மூட்டை தூக்கி, மூட்டை தூக்கி உழைத்த அது வலுவேறியல்லவா இருந்திருக்க வேண்டும்! அப்படி நேராமல் காசநோய்க் கிருமிகளின் வலுவுக்கு அவன் உடல் பலியாகி விட்டதே!

நான்கு மாதங்களுக்குப் பிறகு தான் வெளியே தெரிந்தது: முதலில் லேசாக இருமினான். அப்புறம் கொஞ்சம் அதிகமாகவே இருமினான். பிறகு விலா எலும்புகள் நொறுங்கி தொண்டை கிழிந்துவிடுமோ எனும் அளவுக்கு மூச்சுத் திணற இருமினான். கடைசியில் அவன் இருமாமலிருக்கும் பொழுது கொஞ்சமாகிவிட்டது. முடிவு? ராயப்பேட்டை ஆஸ்பத்திரி க்ஷய ரோக வார்டின் ஒரு கட்டில் அவனுக்கு இடமளித்தது.

மங்கம்மாவுக்குக் கவலைப்படக் கூட நேரம் கிடையாது. கவலைப் பட்டுக் கொண்டிருந்தால், காசு தேட வேண்டாமா? உழைத்து சம்பாதிக்காவிட்டால் உயிருக்குயிரான மகனின் உடம்பை எப்படி பாதுகாப்பது?... மகனைப்பற்றி கவலைப்படாமல், தான் உழைக்கும் உழைப்பே, அவனுக்கு மருந்தாகவும் பழங்களாகவும் சத்து ஊட்டும் என்பதை உணர்ந்திருந்த அவள் சற்றும் தளரா யந்திரமாய் கடமையைச் செய்து வந்தாள், யந்திர உழைப்பு!

உடல் தேய்ந்தாலும் உள்ளம் நிமிர்ந்திருந்தது மங்கம்மாவுக்கு. எதிர்த்து வரும் துன்பங்கள் எத்தனையாயினும் நிலையசையா மலைபோல தாங்கிக்கொள்வாள் அவள். இல்லாவிட்டால் கணவன் மாரிமுத்து குத்துப்பட்டு செத்ததையும், மூத்த மகன் பொன்னு திருடிவிட்டு சிறைப் பட்டதையும் எப்படி அவளால் மறந்திருக்க முடியும்?

மாரிமுத்து கொஞ்சம் அப்படி இப்படிப்பட்ட பேர்வழிதான். பஞ்ச மகா பாதகங்களும் அவனுக்கு விளையாட்டுத் தோழர்கள்! மகனையும் அப்படியே பழக்கி வந்தான். "தே! சொன்னாக் கேளு! நீதான் கெட்டே. மணியாட்டம் புள்ளையையும் கெடுக்காதே!'' என்று அவள் கெஞ்சினபோதெல்லாம் அவனது கல் நெஞ்சில் உறைக்கவேயில்லை.

தந்தைக்கு மேலே இரண்டடி அதிகமாய் பாய்ந்தான் மகன். செவந்தி என்ற ஒரு பெண் பிள்ளை சம்பந்தப்பட்ட விவகாரத்தில் மாரிமுத்து வஞ்சகமாக குத்தப்பட்டான். கமலைக் கிணறு

ஓரத்தில், விலாவில் செருகியிருந்த கத்தியுடன் ரத்தப் பிரவாகத்தில் அவன் நனைந்து கிடந்தான் ஒரு நாள்.

மங்கம்மாளின் கழுத்துக் காலியாயிற்று. மாணிக்கம் அப்பொழுது பத்து வயசுப் பிள்ளை.

வக்கீல் ராமசாமி ஐயர் வீட்டில் மங்கம்மா எடுபிடி காரியங்களுக்காக சேர்ந்தாள். வஞ்சமில்லாமல் உழைத்தாள். மாணிக்கத்தை ஆறுவது வரையிலும் தான் அவளுக்கு படிக்க வைக்க முடிந்தது. மற்ற விஷயங்களில் எல்லாம் மாணிக்கம்கூர்மையான வனுகவும் சுறுசுறுப்பான வனுகவும் மட்டும் காணப்பட்டாலும் படிப்பு விஷயத்தில்மட்டும் 'மக்காக'வே இருந்தான்.

'அவ்வளவுதான்' என்று தீர்மானித்துக் கொண்டு விட்டாள் மங்கம்மா. மாணிக்கம் அன்ருடம் ஏதாவது வேலை செய்து மாலையில் கூலியை அப்படியே தாயிடம் கொடுத்து வந்தான். பொன்னு அப்படியல்ல.

காதில் துண்டு பீடி எப்பொழுதும் இருக்கும். ஒரு கூர்மையான பிளேடுதான் அவனுடைய வஜ்ராயுதம். கூட்டாளிகளோ ஏராளம். நகரின் எந்தெந்த கேந்திர ஸ்தானங்களில் எப்படி எப்படி பதுங்கியிருந்து காரியம் நடத்த வேண்டும் என்பதெல்லாம் அவன் பள்ளியில் கற்காத கலை. அறுபத்திநாலு கலைகளுக்கும் அப்பாற்பட்ட அதிசயக்கலை அது.

அடிக்கடி மாமனூர் வீட்டுக்கும் விருந்து சாப்பிடப் போய்விடுவான். அதனுல் அவனுக்கு புத்தி வரவில்லையானுலும் மாமனூர் வீடு பழக்கமாகிவிட்டது.

எழும்பூர் மேம்பாலத்தடியில் ஒருநாள் கையும் களவுமாக பிடிபட்டுவிட்டான். அகப்பட்டுக் கொண்ட வெறியில் தன்னிடம் இருந்த கத்தியால் போலீஸ் அதிகாரியையும் காயப்படுத்தி விட்டான்.

செய்தி கேட்டதும் மங்கம்மாள் துடித்தாள். இல்லை. அவள் துடிக்கவில்லை. அவனைப் பெற்ற பாசம் துடித்தது. உள்ளத்தின் வலுவினுல் அதை அடக்கிவிட்டாள். அப்பனைப் போல பிள்ளையும் என்று தனக்குள் சொல்லி வருந்தினதோடு சரி. மூன்று வருடங்கள் சிறைப்பட்டான் என்ற செய்தி கிடைத்தவுடன் ஒரு புறம் வருத்தமாக இருந்தாலும் ஒரு புறம் அவளுக்கு மகிழ்ச்சியே ஏற்பட்டது. இன்னும் மூன்று வருடங்களுக்கு அவள் மகனுல் எந்தவிதமான தீமையும் செய்ய முடியாதல்லவா!

காலம் ஓடியது.

மாணிக்கத்துக்கு ஹார்பரில் நிரந்தரமான இடம் கிடைத்தது. மங்கம்மாளின் வாழ்க்கை ஒரே கதியில் நிதானமாக செல்லும் பெருத்த மேகம் போல மெதுமாக நகர்ந்து கொண்டிருந்தது.

எங்கிருந்தோ பேய்க்காற்று அடித்தது...வானில் கூடிச்சென்ற மேகம் சிறிது சிறிதாக பிசிறு தட்டி கலைந்தது...

மாணிக்கம்!—எடுப்பான புஜங்களும், அகன்ற மார்பும், படிந்த வயிறும் வலுவான கை கால்களும் அதுவுமாய் ஒரு வீரனைப் போன்றிருந்த மாணிக்கம்—இன்று கூனிக் குறுகி, தோள்கள் முன்னேக்கி வளைந்து, மார்புக்கூடு பிரம்புப் பின்னலாய் வெளியே தெரிய மூங்கில் குச்சிக்குத் துணி கட்டினுப்போல படுத்திருந்தான். அவனைப் பெற்றவளின் அன்பு அவனை காக்குமா?

★

பஸ் 'கௌடியாமட்' ஸ்டாப்பில் நின்றது. மங்கம்மா தன் சிந்தனையிலிருந்து விடுபட்டு சுருசுருப்படைந்தாள். கண்களின் கீழே ஏதோ 'ஜில்'லென்று உணர்ந்தவே புடைவைத் தலைப்பினுல் யாருமறியாதவாறு துடைத்துக்கொண்டாள். பையில் அலுமினியம் செம்பில் இருந்த

ஐயருகடை மைசூர் பாகையும், இரண்டு ஆரஞ்சுப் பழங்களையும் மறுபடியும் ஒருமுறை சரிபார்த்து எடுத்து வைத்துக்கொண்டாள். மாணிக்கத்துக்கு ஐயருகடைப் பலகாரம் என்றால் உயிர்.

பஸ் ராயப்பேட்டை ஆஸ்பத்திரி வாசலில் நின்றது. மங்கம்மா இறங்கி க்ஷயரோகிகளுக்கென்று ஒருபுறமாய் தனியாகக் கட்டப்பட்டிருக்கும் 'ப்ளாக்'கினுள் நுழைந்தாள். 53-ம் நெம்பர் 'பெட்' இருக்கும் வரிசையில் அவள் திரும்புவதற்கும் வெண்ணுடைதரித்த குண்டு நர்ஸ் ஒருத்தி வெண்மையான ஸ்கிரீனை மாணிக்கத்தின் படுக்கையைச் சுற்றி மறைப்பதற்கும் சரியாக இருந்தது.

மங்கம்மாவின் குடல் திரண்டு எழும்பி, இதயத்துடன் மோதி, இதயத்தையும் பெயர்த்து வெளியே வரத் துடித்த வேகத்தில் கையிலிருந்த பை நழுவியது. மைசூர்பாகு உடைய, பேரம் பேசி வாங்கிய ஆரஞ்சுப் பழங்கள் மூலைக்கொன்றாய் உருண்டன.

★

"ஏண்டி மங்கம்மா! மாணிக்கம் போய் ஒரு மாசம்கூட ஆகல்லே. அதற்குள்ளே மறுபடியும் வேலைக்கு வருகிறேன் என்கிறாயே! வேண்டாமடி, பாவம்! இன்னும் கொஞ்சநாள் ஓய்வில் இரு!" என்றாள் ராமசாமி ஐயர் மனைவி தர்மு.

"இல்லீங்கம்மா!..வேலை செய்யாம தனியாய் இருந்தா மனசை வேதனை புடுங்கித் திங்குது. உழைப்பிலே பொழுதுபோனா எனக்குக் கவலைப்பட வே நேரமிருக்காதம்மா! தயவு செய்யுங்க—"

மங்கம்மா கெஞ்சினாள். தர்முவின் மனம் இளகியது. "சரி, பேசாம வந்துடு! அங்கே உன் குடிசையில் என்ன சாமான் தட்டுக் கெட்டுப் போறது! ஏதோ இருக்கிற இரண்டு ஓட்டை ஒடைசலையும் எடுத்துண்டு இங்கேயே வந்துடு. சோற்றோடு சோறு போட்டுடறேன். இங்கேயே விழுந்துகிட. எனக்கும் துணையாயிருக்கும்!" என்றாள் தர்மு.

"சரி அம்மா! எனக்கு இனிமே எங்கிருந்தா என்ன!...எல்லாம் ஒன்றுதான். ஆனா...... இப்பப் பாருங்க. மாணிக்கம் இருக்கிறது வரை பொன்னுவைப்பற்றி நான் அதிகம் நெனைக்கவே இல்லை. இப்போ மாணிக்கம் போன பிறகு பொன்னுவாவது நேரே திருந்தியிருந்து என் கடைசிக் காலத்துக் கடனைக் கழிக்கமாட்டானா என்று தோணுது. இவ்வளவு பாடுபட்டும்கூட பாழும் பாசம் என்னை விடமாட்டேங்குது அம்மா!"

"அதெப்படி விடும்! இடம் கொடுத்த வயிருச்சே! கொதிக்காம இருக்குமா? நீ செய்த பாவம் குடலிலே கோடரியாய் வந்து பிறந்திருக்கு! என்ன செய்ய? ஆமாம்! பொன்னுவுக்குத் தெரியுமோ, மாணிக்கம் போனது?"

"தெரியுமுங்க! கடுதாசி போட்டேன். இன்னும் ஆறு மாசம் இருக்கல்லே ஜெயில் வாசம்!... அவன் எப்படி வருவான்?"

மங்கம்மா அழுத்துக் கொண்டாள். பொன்னு நல்ல பையனாய் அவளுக்கு ஆதரவாய் இருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும்?

★

மங்கம்மா வக்கிலின் வீட்டோடு வந்துவிட்டாள். காலையில் வாசலுக்கு சாணி தெளித்து முத்து முத்தாக கோலம் இடுவதிலிருந்து இரவு பற்றுதேய்த்து வீடு அலம்பி விடுவது வரையிலும் சகல வெளி வேலைகளையும் அவளே கவனித்துக் கொண்டாள். சுக்கு உலர்ந்த தென்றால் வீரியம் போய்விடுமா?

இரவு பத்தரை மணிக்குமேல் வேலையெல்லாம் முடித்துவிட்டு ஒரு டம்ளர் குளிர்ந்த ஜலத்தைப் பருகிவிட்டு மணைக்கட்டையை எடுத்து தலைக்குப் போட்டுக் கொண்டு, ஹாலையடுத்த வராந்தாவில் படுத்துக்கொள்வாள் மங்கம்மா. தர்மு ஏதாவது பேசுவாள். பேசிக்கொண்டிருக்கையிலேயே அவளுக்குத் தூக்கம் வந்துவிடும்! எழுந்து போய்விடுவாள். அன்றும் இப்படித்தான். தர்மு எழுந்து போய்விட்டாள் மாடிக்கு.

கடிகாரத்தில் மணி பன்னிரண்டு அடிக்கும் வரையில் மங்கம்மாளுக்கு உறக்கம் பிடிக்கவில்லை. தெருவில் எங்கோ இரண்டு நாய்கள் ஊளையிட்டன. இரண்டாவது ஆட்டம் இன்னும் விடவில்லை. தெரு நிம்மதியாக இருந்தது. வீட்டில் பெரிய, பழைய 'ரெகுலேட்டர்! கடிகாரத்தின் 'டிக், டிக்' ஓசையைத் தவிர வேறு ஒலியே இல்லை.

மங்கம்மாளின் கண்கள் அரை விழிப்பில் மயங்கின. இருளோடு இமை சேரும் நேரம்! அவளுடைய பாம்புச் செவிக்கு ஏதோ நடமாடும் சப்தம் கேட்டது போலும். அவள் புலன்கள் கூராயின.

ஆம்! நிச்சயம் யாரோ நடக்கிறார்கள். மெதுவாக அடி ஊன்றுவதை அவளால் நன்கு உணர முடிந்தது. மங்கம்மா ஒரு யுவதியின் விரைவுடன் எழுந்து 'ஸ்விட்சை' தட்டிவிட்டாள். ஒளி வெள்ளம் பாய்ந்தது...

கையிலே கத்தியுடன் ஒருவன்!...

ஓட யத்தனித்த அவனை ஒரு நொடியில் இடுப்பை வளைத்துப் பிடித்துக் கொண்டு கூக்குரலிட வாயெடுத்தாள் அவள்.

அவனுடைய பேய்க் கரம் அவள் வாயை மூடியது.

“அம்மா! என்னைத் தெரியல்லே ஒனக்கு?...”

“கையை எடடா! பாவி!...

பொன்னு கையை எடுத்தான். மறுகணமே அவள் பலமாக கத்த ஆரம்பித்தாள். பொன்னு திமிறினான்! வளைந்தான்! நெளிந்தான்! அறை முழுவதும் சுற்றினான், அவளை இழுத்துக் கொண்டு. அவன் கற்ற வித்தை பெற்ற தாயிடம் பலிக்கவில்லை.

தடதடவென மாடிப் படியில் ஓசை கேட்டது. வக்கீல்தான் இறங்கி வந்தார். மறு வினாடி மங்கம்மாவின் தோளில் ஏதோ ஒன்று மின்னல் போல் இறங்கியது.

“ஐயோ! என வாய் கூவியது. ஆயினும் பிடியை தளர்த்தவில்லை அவள். ஓடிவந்த வக்கீல் அவனைப் பிடித்துக்கொண்டு விட்டார். மறுதினம் பாங்கியில் கட்டவேண்டிய கேஸ் பணம் பத்தாயிரம் ரூபாய் மட்டுமல்ல! அது பற்றிய தஸ்வேஜிகளும்!

அவர் பெருமூச்சு விட்டார்.

தர்மு 'போன்' செய்தாள் போலீசுக்கு. 'போன்' செய்துவிட்டுத் திரும்பியவள் கணவனின் பிடியில் சிக்கியிருக்கும் பொன்னுவைப் பார்த்தாள். கீழே தோள் பட்டையை இடது கையால் அமுக்கிக்கொண்டு ரத்தம் சொட்டச் சொட்ட, படபடப்புடன் இருக்கும் மங்கம்மாவையும் பார்த்தாள். தன் புடைவைத் தலைப்பை 'சர்'ரென்று கிழித்து காயத்தில் வைத்து அமுக்கியவள் மங்கம்மாவை நோக்கி' “மங்கம்மா! இவன்...” என்று இழுத்தாள் சந்தேகத்துடன்.

“ஆமாம்மா......இவன் தான் 'அவன்' சீக்கிரம் போலீஸை கூப்பிடுங்க! நான் நிம்மதியா இருப்பேன் இரண்டையும் நான் பெறல்லேன்னே நெனைச்சுக்கறேன்” என்றாள் அந்த தாய்.

வக்கீல் தம்பதியின் விழிகளிலே நீர் நிறைந்தது.

★

# உள்ளமும் உருவமும்

மயிலை "ஆனந்தன்"

★

ஆதவன் தன் அனல் கக்கும் கதிர்களை வீசி, மக்களை வெயிற் கொடுமையில் துடிக்க செய்து, தன் வேலை முடிந்தது என்று எண்ணி மேல் திசையின் அடி தளத்தே மறைந்து கொண்டிருந்த வேளை. ஆற்றங்கரை யோரத்தில் அநேகர் வெய்யிலின் கொடுமையை தணித்துக்கொள்ள, சிறிது காற்ருேட்டமாக இருந்துவிட்டு செல்ல ஆங்காங்கே அமர்ந்திருந்தனர். ஏதேதோ பேசிக் கொண்டு பொழுதை கழித்துக் கொண்டிருந் தனர்.

ஓர் புறத்தே இரு நண்பர்கள் அமர்ந்திருந்தனர். இருவரும் இளங் காளையர்கள்.

அவர்களில் ஒருவனை ரவீந்திரன் நண்பன் சுந்தரத்தைப் பார்த்து, "இன்று வெய்யில் மிகவும் அதிகம்" என்ருன்.

ஆம், தாளமுடியாத வெய்யில். காற்றுகூட அனல் காற்ருக இருக்கிறது" என்ருன் சுந்தரம்.

"கோடைகாலம் வந்தாலும் வெய்யிலின் கொடுமை தாளமுடியவில்லை. மழைகாலம் வந்தாலும் மழை ஏன் பெய்கிறது, மாலையில் வெளியே செல்ல முடியவில்லை. எப்பொழுது பார்த்தாலும் மழை பெய்துகொண்டே இருக்கிறதே என்று தோன்றுகிறது. குளிர் காலம் வந்தாலும் குளிர் தாள முடியவில்லை. வருட முழுவதும் சீதோஷ்ண நிலையில் ஏதாவது இடைஞ்சல்கள் இருந்துகொண்டே தான் இருக்கிறது."

"அதற்கென்ன செய்வது? எப்படியோ நாட்கள் கழிந்துகொண்டு தான் இருக்கின்றது. நாமும் வயதான வாலிபர்களாகிவிட்டோம். இன்னும் எவ்வளவோ இன்பதுன்பங்கள் இப் புவியில் அனுபவிக்க இருக்கிருேம். இப்பொழுதே சீதோஷ்ண நிலையைப்பற்றி கவலை படுகிருயா?"

"நாமும் எப்படியோ நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கிருேம். அது போகட்டும் உனக்குத் திருமணம் எப்பொழுது?"

"எனக்கு என்ன அவசரம்? உனக்கு எப்போது? என் மனதிற்குப் பிடித்தமான பெண் கிடைத்தால் தான் எனக்குத் திருமணம் என் எண்ணப்படி மனைவி, எனக்குக் கிடைக்க இன்னும் சில நாட்கள் ஆகும்."

"ஏன் சில நாட்கள் ஆகும். உன் எண்ணத்துக்கேற்ற மனைவியை நீயே தேர்ந்தெடுத்து, அவளுடன் பழகி, அவள் நடையுடை பாவனைகளை அறிந்து திருமணம் செய்து கொள்ளப்போகிருயா?"

"அப்படி நடந்தாலும் நடக்கலாம். அல்லது நான் எண்ணும் பெண் அவளுடைய பெற்ருேரை பொருத்தும் இருக்கலாம். அதிருக்கட்டும் உன் மனைவி எப்படி இருக்கவேண்டும் என்று நீ எண்ணுகிருய்?"

"எனக்கேற்ற மனைவி அழகு நிரம்பியவளாக இருக்க வேண்டும். பார்ப்போர்கள் மதிக்கும்படியான பணக்காரப் பெண்ணுக இருக்க வேண்டும். படித்தவளாக இருக்க வேண்டும். முக்கியமாக பணமுள்ளவளாக இருக்கவேண்டும்."

"அழகியாகவும் படித்தவளாகவும் இருந்தும், பணம் இல்லாவிட்டால் திருமணம் செய்துகொள்ள மாட்டாயா?"

"கட்டாயம் செய்துகொள்ள மாட்டேன். அவ்வுலகிலே மதிப்புடன் நடமாட பணந்தான் முக்கியம். பணம் இல்லாதவன் பிணம் தான். பணம் இல்லாவிட்டால் அவளை கவனிப்பார் யாரும் கிடையாது. அலட்சியம் செய்பவர்கள்

அநேகர் இருக்கிறார்கள்.''

''பணமும் அழகும் இருந்து, குணமும் பண்பும் இல்லாவிட்டால் என்ன செய்வாய்?''

''குணமும் பண்பும் உடைய வளாக நாம் திருப்பிவிடலாம். முதலில் கொஞ்சம் விட்டுப் பிடிக்க வேண்டும்.''

''சிறு வயதிலிருந்து வந்த குணத்தை பெரியவர்கள் ஆன பிறகு திருத்துவது மிகவும் கடினம். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.''

''எப்படியாவது திருத்திக் கொள்ளலாம். அது போகட்டும், உன் இலட்சிய மனைவி எப்படி இருக்க வேண்டும்.''

''என் இலட்சிய மனைவி ஏதோ சாதாரண அழகியாக இருந்தால் போதும். பணக்காரியாக இல்லாமல் சொற்ப பணமுடைய பெற்றோரை உடைய வளாகவும் இருக்கலாம். அதிகம் படித்தவளாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை. பெண்களுக்கு ஏற்ற நால்வகை பண்புகளும் உடையவளாக இருக்கவேண்டியது முக்கியம். கணவனோடு சேர்ந்து சுக துக்கங்களை அனுபவிக்கக் கூடியவளாக இருக்க வேண்டும்.''

''நீ எண்ணுகிறபடியே மனைவி கிடைப்பது எளிதல்ல. அது சரி, ஏன் அதிகமாகப் படித்த பெண் கூடாது என்கிறாய்?''

''அதிகம் படிக்காத பெண்களிடம்தான் நான் விரும்பும் குணம் இருக்கும்,''

''படித்துப் பட்டம் பெற்ற நீ ஏன் படித்த பெண் வேண்டாம் என்கிறாய் என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஆணும் பெண்ணும் சமம். இருவருக்கும் சம சலுகைகள் கொடுக்கவேண்டும் என்று பெரியோர்கள் பறைசாற்றிக் கொண்டிருக்கும் இக் காலத்தில், நீ என்னமோ புதிர் போடுவதுபோல் பேசுகிறாயே?''

''பெண்களுக்கும் சலுகைகள் கொடுக்க வேண்டியதுதான். மனைவி தனக்கு அடிமை என்று எண்ணக் கூடாது. அவளுக்கும் சிற்சில சலுகைகள் கொடுக்க வேண்டியது அவசியந்தான். அளவுக்கு மீறிவிடக் கூடாது. மனைவி சொல்வதில் நல்லது இருந்தால் எடுத்துக்கொள்ள வேண்டியது தான்.''

''பெண்கள் கல்வி கற்றால்தான் நல்லது கெட்டது அறிந்துகொள்ள முடியும் என்பது உனக்குத் தெரியாததா?''

''பெண்கள் கல்வி கற்கக் கூடாது என்பதல்ல என் எண்ணம். கல்வி கற்பதால் சுடர்களாகி விடக் கூடாது என்பதே என் எண்ணம். அதிகமாக படித்த பெண்களில் நம் நாட்டின் பண்பிற்கு ஏற்றவளாக தேர்ந்தெடுப்போமானால் நூற்றுக்கு ஐந்தாறு பேரே தேறுவார்கள். அதிகமாக படித்துவிட்டோம் என்னும் கர்வத்தினால் யாரையும் மதிப்பதில்லை. அறிவுரை கூறினாலும் எள்ளி நகையாடுகின்றனர். மேல் நாட்டிலே பிறந்து வளர்ந்தவர்கள் மாதிரி ஆடை அலங்காரங்கள் மாறிவிடுகின்றன. அது அலங்காரம் அல்ல. அலங்கோலம். இவர்களும் தமிழ் நாட்டை சேர்ந்தவர்களா என்று எண்ணும்படி இருக்கிறது. படிக்க படிக்க பண்பு வளரும் என்பார்கள். ஆனால் பண்பு வளராமல் அலங்கோல நாகரீகம் வளர்கிறது. அதிகமாக படிப்பு இல்லாமல் உலக விஷயங்களை தெரிந்துகொண்டு. நல்லவை எடுத்துக்கொண்டு அதன்படி நடப்பதற்கு வேண்டிய படிப்பறிவு இருந்தால் போதும்—என் எண்ணம்.''

''ஏதேது நீண்ட பிரசங்கமே செய்ய ஆரம்பித்து விட்டாயே? உனக்கேன் படித்த பெண்களின் மீது அவ்வளவு வெறுப்பு. படித்த பெண் கெடுவதற்கு அவளின் பெற்றோர் கொடுக்கும் வீண் சலுகைகள் தான் காரணம். அவர்கள் ஓர் அளவோடு இருந்தால் கண்டபடி அலங்காரம் செய்து கொள்ளமாட்டார்கள்.''

''நீ சொல்வதுபோல் பெற்றோரும் காரணமானவர்கள் தான்.

என்னதான் நாகரிகம் வளர்ந்தாலும் நம் நாட்டிற்கு அப்பாற்பட்டதாக இருந்தால் அதை பின்பற்றக் கூடாது.''

"அது சரி, நாகரிகம் இல்லாமல், அதிகப் படிப்பில்லாமல் குணமுடையவளாக இருந்து, ஒருவேளை ஊமையாக இருந்தால் என்ன செய்வாய்?''

"எனக்கு வாய்க்கும் மனைவி ஊமையாகவே இருந்தாலும் கவலையில்லை. அவள்தான் என் இலட்சிய கனவை வாழ்நாள் முழுவதும், என் மனதறிந்து நிறைவேற்றுவாள் ஊமையாக இருந்த தனக்கு வாழ்வளித்த கடவுள் என்று போற்றுவாள்.''

"உண்மையாகத்தான் சொல்கிருயா?''

"உண்மையாகத்தான்!''

"என்னமோ நாம் நினைக்கின்றோம். எல்லாம் நடைமுறையில் வரும்பொழுதுதானே அதன் பலன்கள் தெரியும் சரி பேசிக்கொண்ட இருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. வீட்டுக்குப் போவாமா?'' என்று கூறிக்கொண்டே எழுந்தான் ரவீந்திரன்.

இருவரும் வீடு திரும்பினர்.

★

சுந்தரத்தின் தாய், தன்மகனுக்கு சிக்கிரத்தில் திருமணம் முடிக்க வேண்டும்என்று எண்ணிஞள். அதனுல் எங்கெங்கோ சென்று பெண் பார்த்தாள். பெண் சுந்தரத்திற்குப் பிடித்ததாக எதுவும் கிடைக்கவில்லை. பெண் பிடித்தால் பணத் தகராறு. பணம் விஷயம் சரிபட்டால் பெண் பிடிப்பத்தில்லை என்று நாலைந்து பெண்கள் பார்ந்தும் ஒரு முடிவுகாண முடியவில்லை.

கடைசியாக ஒரு பெண்ணை பார்த்தார்கள். அவளைக் கண்டவுடனே சுந்தரத்திற்குப் பிடித்து விட்டது. சுந்தரம் அவளைப் பார்த்த பொழுது அவளும் பார்த்தாள். அவள் கண்கள் கலங்கின. சட்டென்று நிதானித்துக் கொண்டாள்.

சுந்தரத்தின் கண்கள் அவளுடைய அழகை அளவிட்டுக்கொண்டிருந்தன. 'இவளே என் கருத்துக்கினிய காரிகை. என் எண்ணத்தை ஈடேற்ற இவளால்தான் முடியும். இவளையே திருமணம் செய்து கொள்ளவேண்டும்' என்று முடிவு செய்து கொண்டான்.

சுந்தரத்தின் தாய், பெண்ணின் பெற்ருேரிடமிருந்து அவர்களுடைய குடும்ப விவகாரங்களை எல்லாம் தெரிந்து கொண்டாள். "எனக்குச் சம்மதம்தான். அவன் முடிவு சொல்ல வேண்டும்'' என்று சொல்லிக்கொண்டே சுந்தரத்தின் பக்கம் திரும்பி, "என்ன சுந்தரம், சம்மதந்தாஞ'' என்ருள்.

சுந்தரம் அப்பொழுதுதான் கனவுலகிலிருந்து நினைவுலகிற்கு வந்து "என்ன சொல்கிறீர்கள்?'' என்ருன்

"உன் பதில் என்ன?''

அவன் தாயைப் பார்த்து புன்னகை புரிந்து, வெளிப்படையாகக் கூற வெட்கப்பட்டுக்கொண்டு, சரி என்பதற்கு அறிகுறியாக தலையை ஆட்டிஞன்.

"இருவருக்கும் பிடித்துவிட்டது. சிக்கிரத்தில் திருமணத்திற்கு ஏற்பாடு செய்வோம். நாங்கள் போய் வருகிருேம்'' என்று கூறிவிட்டு விடை பெற்றுக் கொண்டாள் அவன் தாய். சுந்தரம் அவளை தொடர்ந்தான்.

சுந்தரமும், அவன் தாயும் தெருவில் சிறிது தூரம் நடந்துகொண்டிருக்கும் பொழுது ஒருவர் அவர்களை நெருங்கி, "நீங்கள் அந்த வீட்டுப் பெண்ணை பார்க்கத்தானே வந்தீர்கள்?'' என்ருன்.

"ஆமாம்'' என்ருன் சுந்தரம்.

"சம்மதித்துவிட்டீர்களா?''

"சம்மதித்துவிட்டோம்.''

"நீங்கள் ஏமார்ந்துவிட்டீர்கள்?''

"ஏன்?''

"அவள் ஒரு ஊமை.''

"ஆ! அப்படியா? அதைப்பற்றி அவர்கள் என்னிடம் ஒன்றுமே சொல்லவில்லையே?'' என்று அலறிஞள் அவன் தாய்.

"அதெப்படி சொல்வார்கள். சொன்னால் நீங்கள் சம்மதிக்கமாட்டீர்களே!''

சிறிது நேரம் சுந்தரம் அயர்ந்து நின்றான். அவன் மனம் சிறிது ஆட்டங்கொடுத்தது. ஆனால் ஆற்றங்கரையில் நண்பனிடம் அவன் கூறியது அவன் செவிகளில் வந்து ஒலியிட்டன. 'இது ஒரு தோதனே' தளரக்கூடாது. என்னைக் கண்டவுடனே அவள் கண்கள் கலங்கின தின் காரணம் இப்பொழுது தான் விளங்குகிறது. அவளை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேனே என்னவோ என்ற எண்ணந்தான். அவளை கலங்க வைத்திருக்கிறது. எத்தனை இளைஞர்கள் வேண்டாமென்று ஒதுக்கிவிட்டார்களோ. அவர்கள் பட்டியலில் நானும் சேர்வதா. சேசே! கூடாது. நானும் கைவிட்டால் அவள் வாழ்நாள் முழுவதும் கன்னியாகவே வாழ நேரிடுமோ என்னவோ. அவள் மனம் பேதலித்து வாழ்வை மாய்த்துக்கொள்ள எண்ணம் ஏற்பட்டாலும் ஏற்படும். அந்நிலை அவளுக்கு ஏற்படக்கூடாது'' என்றெல்லாம் எண்ணங்கள் மனதிற்குள் குழம்பி "அவளை நான் நிச்சயம் திருமணம் செய்துகொள்வேன்'' என்ற சொற்கள் மட்டும் அவன் வாயிலிருந்து வெளிப்பட்டன.

''என்ன? ஊமை என்று தெரிந்துமா திருமணம் செய்துகொள்ள போகிறீர்கள்?''

''அது எங்கள் சொந்த விஷயம். நீங்கள் போகலாம்'' என்று கூறிவிட்டு சுந்தரம் நகர்ந்தான். அவன் தாயாரும் உடன் சென்றாள்.

★

வீடு திரும்பியவுடன் சுந்தரின் தாய், ''என்ன சுந்தரம் அந்த பெண்ணையா திருமணம் செய்து கொள்ளப் போகிருய்?'' என்ருள்.

''என்னம்மா இப்படி கேட்கிறீர்கள்? சம்மதம் என்று நீங்கள் தானே சற்று முன்பு அவர்களிடம் சொல்லிவிட்டு வந்தீர்கள்,'' என்ருன் சுந்தரம்.

''உண்மை முதலில் தெரியவில்லை. இப்பொழுது தானே தெரிந்தது.''

''சம்மதம் என்று கூறிய பிறகு தவறக்கூடாது. எனக்கு அவளை மிகவும் பிடித்துவிட்டது. தாமதமில்லாமல் திருமணத்தை முடிக்க வேண்டியதுதான்.''

''என்னமோ, எனக்கு என்ன? அவளுடன் வாழ வேண்டியவன் நீதான். பின்னால் என்னை குறை கூருதே.''

மகனிடம் ஏதோ கூறியபோதிலும், அவளுக்குச் சிறிதும் பிடித்தமில்லை. அதனால் மறுநாள் அவன் நண்பன் ரவீந்திரன், அவனை தேடி வந்த பொழுது சுந்தர் வீட்டில் இல்லை. அவன் தாய் நடந்ததைக் கூறி அவன் மனதை மாற்ற கேட்டுக்கொண்டாள். ஆனால் அவனே தாயின் பேச்சையே கேட்காதவன் தன் பேச்சை எப்படி கேட்பான் என்று எண்ணினான்.

ரவீந்திரன் நண்பன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்திற்செல்லாம் சுந்தரம் வந்தான். நண்பர்கள் இருவரும் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தனர். இடையே ரவீந்திரன், ''இவ்வளவு நாட்கள் காத்திருந்து, போயும், போயும் ஊமைப் பெண்ணையா?''

ரவீந்திரன் வார்த்தையை முடிக்கவில்லை. அவன் கன்னத்தில் பளீரென்று ஒரு அறை விழுந்தது. அயர்ந்துவிட்டான். கன்னத்தை தடவிக் கொண்டிருக்கும் போது கடற்கரையில் சுந்தரம் கூறிய 'ஊமையானலும் திருமணம் செய்துகொள்வேன்' என்ற வார்த்தைகள் எதிரொலித்தன.

ரவீந்திரன் சுந்தரின் கைகளைப் பிடித்துக் கொண்டு ''என்னை மன்னித்துவிடு சுந்தர். தெரியாமல் கேட்டுவிட்டேன். ஆனால் இன்று போல் என்றும் உறுதியாக இருக்க வேண்டும் என்பதை மட்டும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.''

''இல்லை, ரவி. நீதான் என்னை மன்னிக்க வேண்டும். உணர்ச்சி

வசத்தால் செய்யாததை செய்து விட்டேன். ஆனால் இந்த உறுதியை என்றும் தளரவிடமாட்டேன்.''

''சரி. என்னுடைய வாழ்த்துக்களை உனக்கு அளிக்கின்றேன்.''

''நன்றி.''

ரவிந்தரன் சுந்தரிடம் விடைபெற்றுக்கொண்டு வீடு திரும்பினான்.

★

குறித்த நாளில் திருமணம் சிறப்பாக நடந்தது. சுந்தர் மகிழ்ச்சியில் மூழ்கினான். மணமக்களுக்கோ அளவிட முடியாத மகிழ்ச்சி.

திருமண நிகழ்ச்சிகள் முடிந்து சுந்தரம் மனைவியுடன் வீடு வந்து சேர்ந்தான். இரண்டு நாட்கள் கழிந்தன. சுந்தர் தனது 'டைரி'யில் பக்கத்தில் இருப்பது யார் என்று கூட அறியாமல் 'ஊமைதான். ஆனால் என் இலட்சியத்தின் உயிர்' என்று எழுதினான்.

'களுக்'கென்று சிரிப்பொலி கேட்டது.

சிரிப்பொலி கேட்டு திரும்பிய சுந்தர், மனைவி செந்தாமரை அருகில் நிற்பதைக் கண்டான். 'டக்'கென்று டயரியை மூடி மறைத்தான்.

''இனி ஒளி மறைவு யாருக்கும் வேண்டாம்.''

யாரோ பேசிய குரல் கேட்டு திரும்பி திரும்பிப்பார்த்தான் சுந்தர். அங்கு செந்தாமரையைத் தவிர வேறுயாரும் இல்லை.

செந்தாமரை அவன் கைகளை எடுத்து தன் முகத்தைப் புதைத்

துக்கொண்டாள். கணநேரத்தில் சிரிப்பொலி மறைந்து விசும்பலொலி கிளம்பிற்று அவன் கைகள் கண்ணீரால் நிரம்பிற்று.

''சுந்தரம் அயர்ந்துவிட்டான் நீயா பேசினுய்? நீ ஊமையில்லே?''

''இல்லே. ஆனல் ஊமையாக நடிக்கும் நிலேக்கு ஆளாக்கப்பட்டேன். உங்களே ஏமாற்றிவிட்டேன். என்னே மன்னியுங்கள்.''

''அது சரி நீ ஏன் ஊமையாக நடித்தாய்?''

''சொல்கிறேன் கேளுங்கள். கொடியவனிடம் இருந்து தப்பிக்கவே இம்மாதிரி செய்ய நேரிட்டது. நெடுங்காலமாக பெற்ருேருடன் வாழ்ந்த என் அத்தான் அவர்கள் இறந்த பிறகு சிங்கப்பூரிலிருந்து சென்னேக்கு வந்தார். அவரிடம் சிறிது அதிகமாக பணம் இருந்ததால் தவருன வழிகளில் சென்று பணத்தை செலவிட்டுவிட்டார். துர்குணங்கள் நிரம்பியவர் ஆகிவிட்டார். அவர் என்னே மணக்க விரும்பினுர். அவரைப்பற்றி கேள்விப்பட்ட என் தாய் என்னே அவருக்குக் கொடுக்க சம்மதியாமல் என்னே இப்படி ஊமையாக நடிக்கச் செய்தாள். அவர் ஊமைப் பெண் வேண்டாம் என்று சொல்லிவிட்டார். ஆனல் அவர் சும்மா இருந்துவிடாமல் வருவோர் போவோரிடமெல்லாம் நான் ஊமை. ஊமை என்று சொல்லிக் கொண்டிருந்தார். அதைப்போல் உங்களிடம் சொன்னதை தாய் பார்த்ததாக கூறினுள். ஆனல் நீங்கள் அப்படியும் என்னே மணந்தது என் பாக்கியந்தான்'' என்று ஒரு பெரிய புதிரையே விடுவித்தாள்.

சுந்தருக்கு மகிழ்ச்சி பொங்கியது. தான் ஒரு விதத்தில் நன்மை செய்வதாக கருதி அவளே மணக்க அது வேறு விதத்தில் அவள் வாழ்வு மலர்ந்ததே என்ற எண்ணம் அவன் உள்ளத்தைக் குதூகலிக்கச் செய்தது. இருவரும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர் என்று கூறவும் வேண்டுமா?

★


## தி இந்தியன் பாங்க் லிமிடெட், மதருஸ்

(ஸ்தாபிதம்: 1907)

தலேமைக் காரியாலயம்:

'இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்', வடக்குப் பீச்ரோடு, மதராஸ்-1

24 உள்ளூர் ஆபீஸ்கள்.

பம்பாய், கல்கத்தா, புதுடில்லி, பூனு, கொழும்பு, பினுங்கு, கோலாலம்பூர், மலாக்கா, சிங்கப்பூர் மற்றும் தென் இந்தியா முழுவதும் கிளே ஆபீஸ்கள் உண்டு.

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ரூ. | 1,00,00,000 |
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 88,60,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. | 82,99,435 |
| ரிசர்வ் & இதர நிதிகள் (ஷேர் பிரமியம் உள்பட) | ரூ. | 85,01,884 |
| டிபாசிட்டுகள் (30-6-1960) வரை | ரூ. | 45,18,48,512 |

வெளிநாட்டுப் பரிவர்த்தனே உள்பட எல்லாவிதமான பாங்க் அலுவல்களேயும் ஏற்றுக் கொள்ளுகிறேம்.

லண்டன் ஏஜெண்டுகள்: வெஸ்ட்மின்ஸ்டர் பாங்க் லிட்.,
நியூயார்க் ஏஜெண்டுகள்: பர்ஸ்ட் நேஷனல் சிடி
பாங்க் ஆப் நியூயார்க்.

ஜி. எஸ். சுந்தரம்
காரியதரிசி.

## அன்புடைய நண்பர்களே, சகோதரிகளே !

**மறக்காமல் உங்கள் சினேகிதர்களுக்கும் இந்த விஷயத்தை அறிவியுங்கள்.**

"மாலா" தற்பொழுது தனிச் சிறப்பு பெற்று ஜயக்கொடி நாட்ட வேண்டுமானுல் அதன் மூலகாரணஸ்தர்களாக விளங்குபவர்கள் நீங்களே என்பது வெளிப்படையான உண்மை. நீங்கள் எல்லாரும் விரும்பும் பத்திரிகையாக "மாலா"வைக் கொண்டு வரவேண்டும் என்பதே எமது அவா ! நீங்கள் படித்த கல்வி தற்போது உங்கள் தொழிலுக்கு எவ்வாறு பயன் படுகிறது? அல்லது எவ்வாறு பயன்படும்படி செய்து கொண்டீர்கள்? என்பதை ஆதாரமாக வைத்து தற்போதைய கல்வி முறை எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி "மாலா"வில் இருபக்க அளவிற்கு ஒரு கட்டுரை எழுதி அனுப்புங்கள். பிரசுரமாகும் கட்டுரைகளுக்கு ரூ. 15, ரூ 10. ரூ 5, என பரிசுகள் வழங்கப்படும். கட்டுரை எழுதுவோரின் புகைப்படமும் பிரசுரிக்கப்படும்.

இன்னும் பல கதைகள் பல அம்சங்கள் வெளிவருகின்றன.

"மாலா"வில் பொங்கல் மலர் முதல் "பிரபல பெண் எழுத்தாளர்" "குயிலி" என்பவர் எழுதும் "அன்பின் பிணைப்பு" என்னும் தொடர் கதை ஆரம்பமாகிறது. இந்த தொடர் கதை 13 வயது முதல் ஆரம்பித்து ஓர் பெண்ணின் வாழ்க்கைக் கதையைத் தெரிவிக்கிறது.

அனுபவம் மிகுந்த அரசியல் எழுத்தாளர் "அருண்" அவர்களின் கட்டுரை.

நீங்கள் எல்லாரும் அனுப்பும் "சினிமா விமர்சனங்களை" தேர்ந்தெடுத்து மாலாவில் பிரசுரிக்கப்போகிறோம். நல்ல விமர்சனங்களுக்கு ரூ. 5-00 சிறு அன்பளிப்புத் தொகையாக அனுப்பப்படும்.

தமிழ் இலக்கியங்களைப்பற்றிப் பல கட்டுரைகள் வெளிவரும்.

நீங்கள் சினிமா நட்சத்திரங்களுக்கு எழுதும் கடிதங்களையும் அதற்கு அவர்கள் எழுதும் பதில்களையும் பிரசுரிக்கப் போகிறோம்.

நாட்டியக் கலைக்கு உயிர் போன்ற அஷ்டபதிக்கு தமிழ் விளக்கம் படங்களுடன்,

'உச்சிஷ்ட மஹா கணபதி' என்னும் சக்திவாய்ந்த தெய்வத்தை உபாஸனை செய்து வரும் ஸ்ரீ கணபதி ஜோஸ்யர் எழுதும் ராசி பலனும் உங்கள் கேள்விகளுக்கு அவர் அளிக்கும் இனும் பதில்களும் வருகின்றன.

### இவ்வளவும் சேர்ந்து மாலாவின் விலை 25 காசுதான்.

வருஷத்தில் மூன்று மலர்கள் உண்டு. பொங்கல் மலர், தமிழ் வருஷப்பிறப்பு மலர், தீபாவளி மலர் என மூன்று மலர்களும் வெளியிடப்படும். மலர்களின் விலை மட்டும் 50 காசு. ஆனுல் சந்தாதாரர்களுக்கு 25 நயாபைசாதான்.

### நீங்கள் சிந்தித்து பார்த்தால் ? ?........................

என்ற புது அம்சம் ஒன்று வெளியாகிறது.

| | |
|---|---|
| ஒன்பது மாதத்திய பிரதிகளுக்கு மாதம் ஒன்றுக்கு 25 காசு வீதம் | ரூ. 2—25 காசு |
| மூன்று மலர்களின் விலை 50 காசு வீதம் | ரூ. 1—50 காசு |
| மொத்தம் 12 மாதத்திய மாலாவின் மொத்த விலைகள் | ரூ. 3—75 காசு |

குறிப்பு :—சந்தாதாரர்கள் ரூ. 3. அனுப்பினல் போதும்.

# சூடிக்கொடுத்த ★ ★ சுடர்க்கொடியும்

பல்லாண்டுகளுக்கு முன் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியின் திருப்பாவையை ஏற்றுக் கொண்டார் எம்பெருமான். உலகம் உய்ய, பாவை நோன்பு நோற்கும் முறையினையும் அதன் பயன்களையும் தமது நூலில் வெளியிட்டுள்ளார் ஸ்ரீ ஆண்டாள். அத்தகைய நோன்பு நோற்பதற்கு ஏற்ற காலம் மார்கழித் திங்களென வருணிக்கப்பட்டுள்ளது.

மாதங்களில் சிறந்தது மார்கழி என்பதையும் தானே அந்த மார்கழி மாதமாக விளங்குவதாகவும் கண்ணபிரான் கீதையில் குறிப்பிட்டபடி ஸ்ரீ ஆண்டாளும் உலகம் உய்ய, பாவை நோன்பு நோற்கும் மாதமாக மார்கழி மாதத்தையே தேர்ந்தெடுத்தார். பல்லாண்டுகளுக்குமுன் சூடிக்கொடுத்த சுடர்க் கொடியின் திருப்பாவையை ஏற்றுக் கொண்டார் எம்பெருமான்.

கோதையர் திருமாலை இடைவிடாது நினைந்து அவருடைய திருவிளையாடல்களை எண்ணி எண்ணி உருகிக் கண்ணனிடமே கருத்தை வைத்துவிட்டபடியால் இருக்குமிடமும், பக்கத்துத் தோழிமார்களும், ஆயர்பாடியில் உள்ள நந்தகோபன் வீடாகவும் ஆய்ச்சியர்களுமாகவே தென்பட்டன. மனிதப் பிறவியில் தம்மைப் பற்றியுள்ள மாயைகளை அகற்றி அஞ்ஞானத்தைவிரட்டி அறியாமையை ஒழித்து நீக்குமாறு கண்ணனை வேண்டிக் கொள்ளுகின்றார் ஸ்ரீ ஆண்டாள்.

ஸ்ரீ ஆண்டாள் ஸ்ரீவில்லிப்புத்தூரை ஆயர்பாடியாகவும், வடபெருங் கோயிலை நந்தகோபன் மாளிகையாகவும் அக்கோயிலில் விளங்கும் இறைவனைக் கண்ணனாகவும் கொண்டு தாம் பாடிய திருப்பாவை நூலில் அக்கருத்தை அமைத்துள்ளார்.

முப்பது பாடல்களைக் கொண்ட திருப்பாவை நூலினை மார்கழித் திங்களிலே விடிய

★ மார்கழி மாதத்தில் தினந்தோறும்

# ஆடிக்கொடுக்கும் ★ ★ ★ ★ ஆரணங்கும்

லில் பாராயணம் செய்யும் பக்தர்கள் பெரும் பயனடைவர் என்பது உண்மை.

"பாதங்கள் தீர்க்கும்
பரமன் அடிகாட்டும்
வேதம் அனைத்துக்கும்
வித்தாகும்—கோதை தமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத
மானிடரை
வையம் சுமப்பது வம்பு."

அன்று சூடிக் கொடுத்த சுடர்க் கொடி பாடிக்கொடுத்த திருப்பாவையின் உண்மைக் கருத்துக்களை இன்று மக்கள் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் அற்புதமாக ஆடிக் கொடுத்து வருகிறார் ஆரணங்கு "வைஜயந்தி மாலா" அவர்கள். ஆடிக் கொடுக்கும் நாச்சியார் "வைஜயந்தி மாலா" அவர்கள் தமது அபிநயங்களின் மூலம் பாடல்களின் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துக் காட்டும் முறையே சிறந்த முறையாகும்.

திருப்பாவை என்றதுமே "வைஜயந்தி மாலா" அவர்களைத்தான் எண்ணத் தோன்றும் நமது வாசகர்களுக்கு.

ஆகவே இச் சந்தர்ப்பத்தில் இவரது திருப்பாவை நடனத்தையும் நமது வாசகர்களுக்கு ஞாபகப்படுத்துகிறோம்.

காலையில் ஒருமுறை
30 திருப்பாவைகளையும் படிக்கவேண்டும்.

இந்த முப்பது திருப்பாவைப் பாடல்களைப் பாராயணம் செய்வதற்குமுன் இதோ கீழே பிரசுரித்திருக்கும் "தனியன்களையும்" சொல்ல வேண்டும். முதல் தனியன் திருப்பாவையைச் செய்த "ஸ்ரீ ஆண்டாளுக்கு" நமது வணக்கத்தைத் தெரிவிக்கிறது. இரண்டாவது தனியனில் ஸ்ரீ ஆண்டாள் அவதரித்த இடத்தைப்பற்றிக் கூறி நமது கடமையைச் செய்ய ஸ்ரீதேவியின் அனுக்கிரஹத்தை அடையப் பிரார்த்திக்கிறோம்.

டிஸம்பர் மாதம் 15-ஆம் தேதியன்று மார்கழி மாதம் ஆரம்பமாகிறது. மாலா வாசகர்கள் தினந்தோறும் இந்த 30 திருப்பாவையைப் பாராயணம் செய்து ஸ்ரீ ஆண்டாள் தேவியின் அனுக்கிரகத்திற்குப் பாத்திரமாகும்படி கேட்டுக்கொள்கிறோம்.

★

# திருப்பாவையின் தனியன்கள்

## பட்டர் அருளிச்செய்தது.

நீளாதுங்கஸ்தநகிரி தடஸுப்தமுத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்த்யம் ஸ்வம் ச்ருதிசதசிரஸ்ஸித்த மத்யாபயந்தீ
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜநி களிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே
கோதா தஸ்யை நம இதமிதம் பூயஏவாஸ்து பூய:

## உய்யக்கொண்டார் அருளிச்செய்தது.

அன்ன வயல்புதுவை யாண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம்—இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற் பாமாலை பூமாலை
சூடிக்கொடுத்தாளைச் சொல்லு.

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே!—தொல்பாவை
பாடி யருளவல்ல பல்வளையாய்!—நாடி நீ
வேங்கடவற் கென்னை விதியென்ற விம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு.

★

# ஐலவ்யு!

**வாசவன்**

20837

தந்திச் சேவகன் ராமன், ஜூபைடா ஸ்டோருக்கு வந்திருந்த தந்தி ஒன்றை 'டெலிவரி' செய்து விட்டு, இன்னும் பாக்கி இருக்கும் ஆறு தந்திகளை ஒவ்வொன்றாக எடுத்துப் பிரித்து தீனதயாளு தெருவிலுள்ள சுந்தரத்துக்கு அடுத்த தந்தியைப் பட்டுவாடா செய்ய வேண்டும் என்று முடிவு கட்டிக் கொண்டு, தன் சிவப்பு சைக்கிளில் ஏறி உட்கார்ந்தார்.

ஆரவாரமும், கும்பலும் நிறைந்த அந்த ரஸ்தாவில் அவன் சைக்கிளை ஜாக்கிரதையாகச் செலுத்திப் போய்க் கொண்டிருந்தபொழுது, 'சுந்தரத்துக்குத் தந்தி வந்திருக்கிறதா?' என்ற ஒரு குரல் அவன் கவனத்தைக் கவர்ந்தது. "இருக்கிறது" என்று மட்டும் சொல்லிவிட்டு தீனதயாளு தெருவிலுள்ள சுந்தரத்தின் வீட்டை நோக்கி சைக்கிளை விட்டான்.

## கொலை மணி

மணி பத்து பதினைந்து.

போலீஸ் நிலையத்தின் போன் அலறியது.

சப் இன்ஸ்பெக்டர் சந்தர் ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்தார்.

"ஹலோ. போலீஸ் ஸ்டேஷன்தானே? தீனதயாளு தெரு மூலையில் ஒரு கொலை நிகழ்ந்திருக்கிறது. கொலைப் பட்டவன் தந்திச் சேவகன் ராமன். உடனே ஸ்தலத்துக்கு வருகிறீர்களா?" என்று ரிஸீவரில் ஒரு குரல் பரபரத்தது.

"தீனதயாளு தெரு முனையிலா? தந்திச் சேவகன் ராமன் கொலைப்பட்டானா? பட்டப் பகலிலேயா?" என்று சந்தர் வாயைப் பிளந்து கொண்டிருக்கும்போது, இன்ஸ்பெக்டர் அருணகிரி காரசாரமாகப் பேச்சைக் கத்திரித்தார்: "இதென்ன அசட்டுக்கேள்வி சந்தர்? ஊம், கிளம்பு தீனதயாளு தெரு முனைக்கு."

சிறிது நேரத்தில் போலீஸ் ஜீப் தீனதயாளு தெருவை நோக்கிப் பறந்து போய்க்கொண்டிருந்ததது.

## நல்லவன் பிணம் நடுத்தெருவில்

ஜன சந்தடியற்ற அந்தச் சிறிய தீணதயாளு தெருவில் அப்பொழுது கூட்டம் ஏராளமாகக் கூடி விட்டிருந்தது. தெரு முனையில் நின்றது போலீஸ் ஜீப். அதிலிருந்து இறங்கிய இன்ஸ்பெக்டர் அருணகிரியும், அவர் குழுவினரும் பிரேதம் கிடந்த இடம் நோக்கி விரைந்தனர்.

கொலைப்பட்டு விழி பிதுங்கிக் கிடந்த ராமனின் நெஞ்சுக்குழியில் ரத்தம் ஒழுகி இருந்தது. அந்த நெஞ்சுப்பகுதியின் நேர் கீழே ஓர் ஆழமான காயம் நுரையீரலை நோக்கி ஓடி இருந்தது. கொலையுண்டவனைத் தாக்கியவன் அவனுடைய விரோதியாக இருக்கமுடியாது. ஏனென்றால் கத்திக்குத்து அவன் மார்பில் பட்டிருக்கிறது. கொன்றவன் எதிரில் வந்து நட்பு முறை

யில் பேசிக்கொண்டே குத்தி இருக்கிறுன். அசாதாரண நிலையில் சற்றும் எதிர்பாராதவிதத்தில் ராமன் குற்றப்பட்டிருக்கிறுன்.

இன்ஸ்பெக்டர் அருணகிரி கூட்டத்தை ஒரு முறை சுற்றிப் பார்த்து விட்டு, பிரதேத்தின் தோளில் தொங்கிய பையிலிருந்து காகிதக் கற்றையை எடுத்துப் பார்த்தார். எல்லாம் தந்திகள். அப்படி ஐந்து தந்திகள். அவற்றை சப் இன்ஸ்பெக்டர் சந்திரிடம் கொடுத்துக் கொண்டிருந்தபொழுது, வேகமாகஓடி வந்தார் விஷயத்தைக் கேள்விப் பட்டிருந்த 'டெலிகிராப் ஆபீஸர்!

"நல்லமனிதன்" என்று படிக்கப்பார்க்கச்சொன்ன அவரால் வேறென்றும் பேச முடியவில்லை.

அருணகிரி அவரிடம் கேட்டார்; "ராமன் வீட்டு விலாசம் என்ன?"

விலாசத்தைச் சொன்னர் அவர்.

"வந்தனம்" என்று கூறிவிட்டு சந்தர்ப் பக்கம் திரும்பினர்" சந்தர், தந்திகள் நமக்கு முக்கியமான சாட்சியங்களாக இருந்தாலும் கூட அவற்றைத் தந்தி இலாகா அதிகாரியிடம் கொடுத்துவிடு. ஏனென்றுல் தந்திகள் எப்பொழுதும் காலதாமதப் படுத்தக்கூடியவை அல்ல. பிரேதத்தைச் சவக்கிடங்குக்கு அனுப்பிவிடு. நான் ராமன் வீட்டுக்குப் போய்விட்டுச் ஸ்டேஷனுக்கு வருகிறேன்."

## எதிரி இல்லாத எதிரி

கொலையுண்ட ராமன் வீட்டுக்குள் நுழைந்தார் இன்ஸ்பெக்டர் அருணகிரி. அந்தச் சின்னஞ்சிறு வீட்டில் இரண்டு குடித்தனங்கள் இருந்தன.

"மனிதனுக்கு இப்படியா" தலைவிதி அமைய வேண்டும்? என்று விசனத்துடன் கூறிக்கொண்டே வந்தஒருவர், இன்ஸ்பெக்டரின் திருஷ்டியில் பட்டார்.

இன்ஸ்பெக்டரைக் கண்டதும்அவர்வாயைப் பிளந்தபடி நின்றுர்.

" நீங்கள் ராமனின் நண்பரா ?" என்றுர் இன்ஸ்பெக்டர்அவரிடம்.

"நான் இந்த வீட்டில் குடி இருப்பவன். நண்பனும் கூடத்தான்."

'ராமனுடைய மனைவி வீட்டில் இருக்கிறுளா?"

"இருக்கிறுர் அழுது கதறிக்கொண்டு."

"ராமன் உங்கள் நண்பன்என்று சொன்னீர்

களல்லவா?''

''ஆமாம்''

''அவனுக்கு விரோதிகள் இருக்கிறார்களா?''

''அவனுக்கா? பேசக்கூடாது ஸார்! அவனைப் போல ஒரு சாதுவை நான் பார்த்ததே இல்லை.''

## 'நானே வருகிறேன்!'

இன்ஸ்பெக்டர் அருணகிரி ஸ்டேஷனில் குறுக்கும் நெருக்குமாக நடந்துகொண்டிருந்தார். 'தந்திச் சேவகன் ராமன், 'ஜுபைடாஸ்டோ'ரில் ஒரு தந்தியைப் பத்து மணிக்குப் பட்டுவாடா செய்திருக்கிறான். அவன் கொலையானதாகச் செய்தி வந்தது பத்தே கால்மணிக்கு. இடையிலுள்ள பதினைந்து நிமிஷத்தில்தான் அவன் கொலையுண்டிருக்க வேண்டும். சிந்தையில் தீவிரமாக உலவிக் கொண்டிருந்தவர் சட்டென்று போன் அருகே நெருங்கி, சில எண்களைச் சுழற்றி 'டையல்' செய்துவிட்டு ரிஸீவரைக் காதோரம் வைத்துக்கொண்டார்.

''ஹலோ, இன்ஸ்பெக்டர் அருணகிரி பேசுகிறேன். தந்தி மணியார்டர் ஏதேனும் பட்டுவாடாச் செய்யக் கொடுத்தீர்களா?''

''இதோ பார்த்துச் சொல்கிறேன்.''

''நானே வருகிறேன்.''

## சுந்தரம் மேனனின் காதலி?

இன்ஸ்பெக்டர் அருணகிரியை, தந்தி நிலைய அதிகாரி வரவேற்றார்.

இன்ஸ்பெக்டர் காரியத்தில் கண்ணாக இருந்தார். அதை அறிந்துகொண்ட அதிகாரி கூறினார்;'' நீங்கள் சற்று நேரத்திற்கு முன்னால், 'ராமனிடத்தில் தந்தி மணியார்டர் ஏதேனும் அனுப்பினீர்களா?' என்று கேட்டீர்கள் அல்லவா? இன்றைய தினம் அவனுடைய 'பீட்'டுக்குத் தந்தி மணியார்டரே வரவில்லை; சற்று நிறுத்திவிட்டுக் கேட்டார். ''ஏன் அப்படிக் கேட்டீர்கள்?''

''ஒரு வேளை பணத்தை அபகரிப்பதற்காகக் கொலை நிகழ்ந்திருக்கலாமோ என்ற சந்தேகத்தால் கேட்டேன். கொலைக்குக் காரணம் அதிசயமாக இருக்கிறது ஸார். ராமனின் தோல் பையிலிருந்து எடுத்த தந்திகளை என்ன செய்தீர்கள்?''

''உடனே வேறொரு சேவகன் மூலம் உரியவர்களிடம் அவற்றைச் சேர்ப்பிக்கும்படி செய்துவிட்டேன்.''

''ராமனிடம் எத்தனை தந்திகளைக்கொ[illegible]னீர்கள்?''

''ஏழு தந்திகள். அவற்றில் 'ஜுபைடாஸ்டோ'ருக்கும், தீனதயாளு தெரு சுந்தரத்துக்கும் தந்திகள் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கின்றன. ஐந்து தந்திகள் டெலிவிரிசெய்யப்படவில்லை. அவற்றைத்தான் வேறு சேவகனிடம் அனுப்பி வைத்தேன்.''

அந்தச் சமயத்தில் குமாஸ்தா ஒருவர் வந்து அதிகாரியிடம் கேட்டார்: ''ஸார். தீனதயாளு தெருவைச் சேர்ந்த சுந்தரம் என்பவர் இங்கிருந்து. 'எனக்கு வரவேண்டிய தந்தி இன்னும் ஏன் கிடைக்கவில்லை?' என்று கேட்கிறார். அவருக்கு என்ன சொல்வது?''

இன்ஸ்பெக்டர், அதிகாரியை ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டே பேசினார்: ''ஏன் ஸார், 'சுந்தரத்துக்கு அந்தத் தந்தியை 'டெலிவரி' செய்துவிட்டான் ராமன்' என்று கூறினீர்களே! இப்பொழுது அந்த

'சுந்தரம் தனக்கு அந்தத் தந்தி கிடைக்கவில்லை என்று புகார்செய்திருக்கிறுரே தந்தியை 'டெலிவரி' செய்ததும் பெற்றுக் கொண்டவர்களிடம் கையெழுத்து வாங்குவது வழக்கம் அல்லவா? அந்தப்பட்டுவாடாக் காகிதம் ராமனுடைய விட்டுப்போன காகிதக் கற்றையில் இருக்கிறதா என்று பாருங்கள்.''

''தந்திகளை மட்டும்தான் உங்கள் சப் இன்ஸ்பெக்டர் என்னிடம் கொடுத்தார்!'' என்று கூறினுர் அதிகாரி.

''எங்கே போயிற்று அந்த முக்கியமான காகிதம்?'' என்ற கேள்வி இன்ஸ்பெக்டரின் மனத்தில் எழுந்தது. ஆனுல் வெளியிட்டுச் சொல்லவில்லை.

''சரி, அந்த சுந்தரத்தை இங்கே வரச் சொல்லுங்கள்'' என்று இன்ஸ்பெக்டரே உத்தரவிட்டார்.

சில நிமிஷங்களில் அங்கே சுந்தரம் வந்து சேர்ந்தான். மிகவும் ஆடம்பரமாகத் தோற்றம் அளித்தான் அவன். ''எனக்கு ஒரு தந்தி வந்திருக்கவேண்டுமே'' என்று கவலையோடு கேட்டான்.

''நீங்கள் தந்தியைப் பெற்றுக் கொள்ளவில்லையா?'' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''இல்லை''

''தந்தி வந்திருக்க வேண்டுமே!' என்று சர்வநிச்சயமாகச் சொல்கிறீர்களே! அதெப்படி உத்தேசமாகக் கேட்க முடிகிறது, உங்களால்?''

''உத்தேசமல்ல. ஏற்கனவே தெரிந்தவிஷயம் அது. பம்பாயிலுள்ள என் தொழில் கூட்டாளி இன்றையதினம் தந்தி கொடுப்பதாக நேற்றே எனக்குக்கடிதம் எழுதி இருந்தார். தயவுசெய்து தந்தியைக் கொடுக்கச் சொல்கிறீர்களா?''

''உங்களுக்கு வந்த தந்தியை கொலையுண்ட ராமன் உங்கள் வீட்டில் 'டெலிவரி' செய்திருக்கிறுன்!'' என்றுர் அதிகாரி.

''அப்படியா? எனக்குத் தெரியாமலா? எதற்கும் போய்ப் பார்க்கிறேன்.'' என்று கூறிவிட்டு வேகமாக நடந்தான் சுந்தரம்.

சுந்தரத்தின் தோற்றத்தில், நடை உடை பாவனையில் சந்தேகப்பட்ட இன்ஸ்பெக்டர் அருணகிரி, அதிகாரியிடம் கேட்டார்: ''சுந்தரத்துக்கு வந்த தந்தியின் நகலை எனக்குக்கொடுக்க முடியுமா?'!

''தாராளமாக!''

ஐந்தே நிமிஷங்களில் சுந்தரத்துக்கு வந்த தந்தியின் நகல் இன்ஸ்பெக்டருக்குக் கிடைத்தது.

அதில், ''ப்ளீஸ் செண்ட்தி ஹோல் ஸ்டாக், ஸ்டாப் கேன்ஸல் அவர் ஓல்டு ஆர்டர்—மேனன்'' என்று இருந்தது.

'தயவு செய்து பூரா ஸ்டாக்கையும் அனுப்பவும். எங்கள் பழைய ஆர்டரை ரத்துக் செய்யவும்; பம்பாய்த் தந்தியின் தமிழ் மொழிபெயர்ப்பு இது. இந்தச் தந்திரம் என்ன ஒரு பெரிய வியாபாரியா? நினைத்ததைக் கேட்டே விட்டார் இன்ஸ்பெக்டர்.

பதில் கூறியவர் குமாஸ்தா ''சுந்தரத்தை எனக்கு நன்ரு தெரியும் ஸார். அவர் போன வாரம்வரை ஓர் அன்னக்காவடி இந்த வாரத்தில் அவர் ஒரு பணக்காரர். அப்படியும் அவர் கடை ஏதும் வைத்திருப்பதாகத் தெரியவில்லை. எனக்கு ஒரே அதிசயமாக இருக்கிறது''

''இந்த ஒரு வாரத்தில் சுந்தரத்துக்கு வேறு தந்திகள் வந்தனவா?'' என்று கேட்டார்

இன்ஸ்பெக்டர்.

"ஆம். நாள் தவறினலும் அவருக்குத் தந்திவர தவறுவதில்லை"

"அந்தத் தந்திகளின் நகல்களைக் கொஞ்சம் தருகிறீர்களா?"

பத்து நிமிஷங்களில் ஆறு தந்திகளின் நகல்கள் இன்ஸ்பெக்டருக்குக் கிடைத்தன.

ஒரு தந்தியில் 'அரைவ்டு சேவ்லிஸ்டாப்ஒயர்யுவர்வெல்.ஃ. பேர் இம்மீடியட்லி மீ, மேனன் என்றிருந்தது. இரண்டாவதில், 'பிஸினஸ் அஸ் யூஷுவல் ஸ்டெடிஸ்டாப் ஒய் நோ டெலிக்ராம் ஃப்ரம் யூ ப்ளீஸ் ஒயர்—மேனன் என்றும், மூன்ருவதில், 'பாதர் அண்ட் மதர் கம்மிங் டுமாரோ ட்ரெயின் ஸ்டாப் மீட்டிங் — மேனன்' என்றும் நான்காவதில், 'நோ மணி வித்மி கேந்நாட் சென்ட் யூ நோஸ்டாப் நோட் கெட் ஆங்க்ரி அண்ட் க்யூரெல் வித்மி—மேனன்' என்றும் ஐந்தாவதில் 'ஐ லவ் யூ ஸ்டாப் ப்ளீஸ் ரிப்ளை—மேனன்' என்றும், ஆருவதில், 'மதர் வெரி வெரி சீரியஸ்லி இல் ஸ்டாப் ஸ்டார்ட் இம்மீடியட்லி பை ஏர் மெயில்—மேனன்' என்றும் இருந்தன.



'தந்திகள் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு இல்லாமல் அல்லவா இருக்கின்றன? பம்பாயிலிருந்து தந்திகள் கொடுத்திருக்கும் மேனன், ஐந்தாவது தந்தியில், 'நான் உன்னைக் காதலிக்கிறேன். தயவு செய்து பதில் அனுப்பு' என்று குறிப்பிட்டிருக்கிருர். பம்பாய் மேனன் பெண்ணல்ல. அதைப் போலவே இந்தக்கும்பகோணத்து சுந்தரமும் பெண்ணல்ல. ஆணை ஆண் காதலிப்பதா? ஆருவது தந்தியில் தாய் மிக மிகக் கடுமையான அசெளக்யம். உடனே விமானம் மூலம் புறப்படு என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. உடனே இங்கிருந்து எப்படி விமானத்தில் புறப்படுவது. கும்பகோணத்தில் விமான நிலையமா இருக்கிறது? விமானம் ஏறுவதென்ருல் சென்னைக்கோ திருச்சிக்கோ அல்லவா போகவேண்டும்? இப்படிப் பார்க்கும்போது ஒவ்வொரு தந்தியிலும் முரண்பாடு நிறைய இருக்கிறதே! ஒவ்வொரு தந்தி வாசகத்தின் நடுவிலும் வரும் 'ஸ்டாப்'என்ற வார்த்தை சம்பந்தம் இல்லாமல் கையாளப் பட்டிருப்பது ஏன்?' பலவாருகச் சிந்தித்த இன்ஸ்பெக்டர் ஒரு முடிவுக்கு வந்தவராய், 'ஸார், சென்ற ஒரு வாரத்திய 'ஹிந்து' பத்திரிகை இதழ்கள் உங்களிடம் இருக்கின்றனவா?" என்று கேட்டார்.

"இருக்கின்றன. இதோவரவழைக்கிறேன்" என்று கூறி மணி அடித்து, 'ஹிந்து'ப் பத்திரிகையை எடுத்துவரச் செய்தார் அதிகாரி.

'ஹிந்து'வின் ஒரு குறிப்பிட்ட பக்கத்தை எடுத்து வைத்துக் கொண்டு ஒவ்வொரு தந்தியும் ஒப்பிட்டுப் பார்த்தார் இன்ஸ்பெக்டர். ஆறு நாள் தந்திக்கும், ஆறு நாள் ஹிந்து இதழ் களுக்கும் எவ்வளவு ஒற்றுமை?

பத்திரிகையை மூடி விட்டு அவர் தலை நிமிர்ந்தபோது ஏற்

கனவே வந்துபோன குமாஸ்தா மீண்டும் அங்கே வந்தார் "ஸார், அந்த சுந்தரம் மறுபடியும் வந்திருக்கிறார். அவருக்குத் தந்தி கிடைக்கவில்லையாம். 'அதன் நகலாவது வேண்டும்' என்று பறக்கிறார்!"

"அவரை இங்கே வரச்சொல்லுங்கள்" இன்ஸ்பெக்டர் ஆவலுடன் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

அறைக்குள் சுந்தரம் வந்தார். அவர் முகம் பேயறைந்தமாதிரி வெளுத்துப் போய்க் கிடந்தது. "ஸார், எனக்குத் தந்தி கிடைக்கவில்லை. அதன் நகலையாவது கொடுங்கள்" என்று பதற்றத்துடன் கேட்டான்.

"அவ்வளவு முக்கியமாக அந்தத் தந்தி?" இன்ஸ்பெக்டர் கேட்டுவிட்டுப் புன்முறுவல் செய்தார்.

"ஆமாம் ஸார். வியாபார விஷயம். தந்தியின் நகலைக்கூடக் கொடுக்க வேண்டாம். அதை வாசித்துக் காட்டினாலே போதும். எழுதிக் கொள்கிறேன்"

"விஷயம் நீங்கள் பறக்கிற அளவுக்கு முக்கியமானதுதான்! பழைய ஆர்டரை ரத்துச் செய்து பூராஸ்டாக்கையும் அனுப்பச்சொல்லி பம்பாயிலிருந்து மேனன் என்பவர் தந்தி அடித்திருக்கிறார்."

"வார்த்தைக்கு வார்த்தை சரியான தந்தியின் ஆங்கில வாசகம்தான் வேண்டும். தயவு செய்து, கொஞ்சம் படித்துச் சொல்லுங்கள். எழுதிக் கொண்டுபோய் விடுகிறேன்.

"பேஷாக" என்று கூறிவிட்டு இன்ஸ்பெக்டர் முன்னாலேயே நகல் எடுத்து வைத்திருந்த அன்றையத் தந்தியை வாசித்தார். "செண்ட் ஹோல் ஸ்டாக். ஸ்டாப் கான்ஸல் ஓல்டு ஆர்டர். மேனன்!'

அவர் கூறியபடியே எழுதிக் கொண்டான் சுந்தரம். இன்ஸ்பெக்டர் தந்தியை வாசித்த பொழுது ஒரு திரிசமன் செய்திருந்தார். அசல் தந்தியின் முதல் வார்த்தையான 'ப்ளீஸ்'. மூன்றாவது வார்த்தையான 'தி', 'ஸ்டாப்' என்ற தொடர்பு அற்ற வார்த்தைக்கு நேர் இரண்டாவது வார்த்தையான 'அவர்' (OUR) முதலியவற்றை மறைந்து விட்டுத்தான் படித்தார்.

"நன்றி" என்று அசட்டுத்தனமாகச் சிரித்தான் சுந்தரம்.

"சுந்தரம், மேனன் உங்களுக்கு 'பிஸினஸ்' விஷயமாகத்தானா தந்தி அனுப்புவார்?"

"ஆமாம், ஸார்!"

"புதன்கிழமை வந்த தந்தி 'நான் உன்னைக் காதலிக்கிறேன்' (I love you) என்று மேனன் குறிப்பிட்டிருக்கிறார். இது கூட 'பிஸினெஸ்' தானோ?'

சுந்தரம் விழித்தான்.

"விழிக்க வேண்டியதில்லை. நீங்கள் போகலாம்."

## பணமே பிணமே

பிற்பகல் மூன்று மணி.

பெரிய கடைத்தெரு 'ஸ்வர்ண மாளிகை'யின் அருகே நின்றான் கம்பீர உடை உடுத்த ஒருவன்.

சுந்தரம் பக்கலிலுள்ள ஒரு சிறு கடையினுள் நுழைந்தான் அதைப்பார்த்த அவனும் அங்கே விரைந்தான்.

சுந்தரம் நுழைந்த கடையில் வியாபாரப் பொருள்கள் ஒன்றுமே இல்லை. ஆனால் தொந்தி பெருத்த வடநாட்டுக்காரர். கேசவ்லால்—திண்டில் சாய்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கும் பொழுது சாமான்கள் இல்லாத ஏதோ ஒரு பெரிய வியாபாரம் நடைபெற்று கொண்டிருக்கிறது என்றே நினைக்கத் தோன்றும்.

திண்டில் சாய்ந்திருந்தகேசவ் லால், சுந்தரத்தைக் கண்டதும், "என்ன சுந்தரம், 'பெட்டிங்' குக்கு என்ன நம்பர் ஆடப் போகிருய்?" என்று கேட்டார்.

"ஒப்பனிங் மூன்று குளோஸிங் மூன்று" என்ருன் சுந்தரம்.

"எவ்வளவு ரூபாய் கட்டப் போகிருய்?"

"ஆயிரம்." பத்து நூறு ரூபாய்களை எடுத்து கேசவ்லாலிடம் கொடுத்தான் சுந்தரம்.

பின்னுலே வந்து கொண்டிருந்த அந்தப் புதியவன், 'சேட், நான் கூடக் கட்டுகிறேன் ஒப்பனிங் ஐந்து; குளோஸிங் நான்கு" என்ருன்.

கேட்ட குரலாக இருக்கவே சுந்தரம் திரும்பிப் பார்த்தான். அவன் தலை சுற்றியது. கண்கள் சுழன்றன.

சேட் அந்த மனிதனை ஏற இறங்கப் பார்த்துக்கொண்டே, "எவ்வளவு ரூபாய் கட்டப்போகிருய்?" என்று கேட்டான்.

"இருபத்தையாயிரம்"

"ஆ! — உன் பெயர்?"

"என் பெயருக்கே வேண்டாம்சேட், இன்றைய சர்க்காரின் பெயரைப் போடு. நான் சொன்ன நம்பர்கள் இன்று நியூயார்க்கில் தீர்ந்த பருத்தியின் விலைகள். சரியான விலைகள். உங்கள் பருத்திச் சூதாட்டச் சட்டப்படி ஒரு பங்குக்கு அறுபத்து நான்கு பங்குகள் கிடைக்கும் அல்லவா? அது மூலமாகச் சர்க்காருக்குப் பதினறுலக்ஷம் கிடைக்கும். இன்னும் விவரம் வேண்டுமா சேட்? நான் இன்ஸ்பெக்டர் அருணகிரி."

கேசவ்லால் வெல வெலத்தாள்; சுந்தரம் நடுங்கினன்.

இன்ஸ்பெக்டர் அருணகிரி விசில் ஊதினர் குபுகுபுவென்று போலீஸ் பட்டாளம் ஒன்று கடையினுள் பிரவேசித்து. சப் இன்ஸ்பெக்டர் சந்தரும் அதில் இருந்தார்.

"கொலைகாரன் கேசவ் லாலைக் கைதுசெய்யுங்கள். சுந்தரத்தையும் தான். அவன் சூதாட்டத் தடுப்புச் சட்டத்தை மீறி இருக்கிருன்" என்ருர் அருணகிரி.

இரண்டு ஜோடிக் கரங்களில் விலங்கிடப் பட்டன.

"கேசவ, தந்திச்சேவகன் ராமனைக் கொலைசெய்து, அவனிடமிருந்து சுந்தரத்துக்கு வந்த தந்தியை அபகரித்தாயே, அது எங்கே?" அருணகிரியின் குரல் பயங்கரமாக ஒலித்தது.

"என் மடியிலிருக்கிறது."

ஒரு ஜவான் கேசவ் லாலின் மடியைத் துழாவி அந்தத் தந்தியை எடுத்து இன்ஸ்பெக்டரிடம் கொடுத்தான்.

"கேசவ், ராமனைக் கொன்றவன் நீதானே?"

"ஆமாம்."

"ஒரு சிறிய விண்ணப்பம்" என்று குழைந்தார் சப் இன்ஸ்பெக்டர்.

"என்ன?"

"கேசவ்தான் கொலைகாரன் என்பதை நீங்கள் எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?"

"சந்தர், இங்கேயே அதை நீ தெரிந்துகொள்ளத் துடிக்கிருய் போலிருக்கிறதே! சுருக்கமாகவே உனக்குச் சொல்லி விடுகிறேன். ஒரு வாரத்துக்கு முன் வரை அதோ நிற்கும் சுந்தரம் பஞ்சைப் பயலாக இருந்தான். ஆனல் ஒரு வாரத்துக்குள் அவன் ஒரு திடீர்ப் பணக்காரனகி விட்டான். எப்படி? நியூயார்க் பருத்தி சூதாட்டத்தில் தினசரி அவன் பணம் கட்டினன். அவன் ஆடிய நம்பர்களே தினசரி வெற்றி பெற்றன. அதெப்படி ஒருவன்தொடர்ந்து

ஒரு வாரமாக வெற்றிபெற முடியும்? அதில்தான் இருக்கிறது மர்மம். சில நாட்களுக்கு முன்பு நியூயார்க் பருத்தி மார்க்கெட்டின் விலைகள் பன்னிரெண்டு மணி நேரத்துக்கு முன்னதாகவே ரகஸ்ய ஏஜெண்டுகள் மூலம் பாரதத்தில் வெளியாகிவிடுகின்றன என்பதைத் தெரிந்து நியூயார்க்கில் இரு ஏஜெண்டுகளைப் போலீஸார் கைது செய்தார்கள் அல்லவா? ஆனாலும் இன்னும் ஒரு கூட்டம் பிடி படாமலே இருக்கிறது. அந்தக் கூட்டத்தினர் பம்பாயிலுள்ள மேனன் என்பவனுக்குத் தந்தியின் மூலம் பருத்தி விலையைத் தெரியப் படுத்துவார்கள். மேனன் அதன் முடிவை இங்கே சுந்தரத்துக்கு அறிவிப்பான் தந்தியின் மூலம். தந்தியில் கண்டிருக்கிற நம்பர்களுக்கு சுந்தரம் 'பெட்டிங் கட்டுவான். வெற்றி பெறுவான். பணக்காரனவான் மேனனுக்கு அதில் பாதிப் பங்கு''

''அது சரி. காட்டன் நம்பர்களைத் தந்தியில் எப்படித் தெரியப் படுத்த முடியும்? உடனே அகப்பட்டுக் கொள்ள மாட்டார்களா?''

''அதற்குத்தான் ரகஸ்ய பாஷை வைத்திருக்கிருர்களே! இன்றைய தினம் சுந்தரத்துக்கு வந்த தந்தியில் 'ப்ளீஸ் செண்ட் தி ஹோல் ஸ்டாக் ஸ்டாப் கேன்ஸல் அவர் ஓல்டு ஆர்டர்'' என்றிருந்தது. இந்தத் தந்தியிலுள்ள அர்த்தம் முக்கியம் அல்ல, வார்த்தைகள் தாம் முக்கியம். 'ஸ்டாப்' என்ற வார்த்தைக்கு முன்னால் 'ப்ளீஸ் செண்ட் தி ஹோல் ஸ்டாக்' என்று ஐந்து வார்த்தைகள் இருக்கின்றன. ஐந்து என்ற எண்ணே பருத்தியின் ஆரம்ப விலை. 'ஸ்டாப்' என்பதற்குப் பிறகு 'கேன்ஸல் அவர் ஓல்டு ஆடர்' என்று நான்கு வார்த்தைகள் இருக்கின்றன. அவை முடிவு விலை நான்கு என்பதைக் குறிக்கும். இதைப் போல ஒவ்வொரு நாளும் பரிபாஷையில் தவருது ஆறு தந்திகள் வந்திருக்கின்றன. ஆக எல்லாவற்றுக்கும் நடுவே 'ஸ்டாப்' என்ற அர்த்தமில்லாத வார்த்தை ஒன்று விழுந்ததுதான் என் சந்தேகத்தைத் தூண்டுவதற்குக் காரணமாக இருந்தது. உடனே ஹிந்து இதழ்களையும் புரட்டிப் பார்த்தேன். தந்திகளின் ரகஸ்ய பாஷையில் குறிப்பிட்டிருந்த விலைகளே பருத்தியின் சரியான ஆரம்ப முடிவு விலைகளாக இருந்தன. என் சந்தேகமும் தீர்ந்தது. இன்று சுந்தரத்துக்குக் கிடைக்கவேண்டிய தந்தி அவனுக்குக் கிடைக்காமல் போயிற்று. அதனல் பரபரப்படைந்த அவன், மார்க்கெட்டின் நிலவரம் தெரிந்து சூதாடுவதற்காகத் தந்தி நிலையத்திற்கு வந்தான். அவனிடம் தந்தியின் வாசகத்தைச் சுருக்கி செண்ட் ஹோல் ஸ்டாக் ஸ்டாப் கான்ஸல் ஓல்டு ஆர்டர்' என்று வாசித்துக் காட்டினேன். 'ஸ்டாப்'புக்கு முன்னல் மூன்று வார்த்தைகளையும். பின்னல் மூன்று வார்த்தைகளையும், பின்னல் மூன்று வார்த்தைகளையும் சென்னேன். அதன் படியே ஆடுகிருன என்று பார்த்து வரவே அவனைப் பின்தொடர்ந்தேன். உங்களையும் தொடர்ந்து வரச் செய்தேன். நான் பின்தொடர்ந்தது வெட்டியாகப் போய் விடவில்லை. அவன் கேசவ்லால் இடத்தில் 'ஓப்பனிங் மூன்று குளோஸிங் மூன்று என்றே' பெட்டிங் ஆடினன். ஆகவே தந்தியிலுள்ள வாசகங்

காட்டன் மார்கெட்டின் ரகஸ்யப் புள்ளி விவரம் என்பதில் சந்தேகமே இல்லை.

"ஒப்புக் கொள்கிறேன். கேசவ்லால் தந்திச் சேவகன் ராமனை ஏன் கொலை செய்தான்?"

"சென்ற ஆறு நாட்களாக சுந்தரம் குறிப்பிடும் நம்பர்கள் வெற்றி அடையக் காரணம் என்ன என்று ஆராய்ந்தான் காட்டன் ஏஜெண்ட் கேசவ்லால். அப்படித்தானே கேசவ்?" சேட்டின் பக்கம் திரும்பினார் அருணகிரி.

"அப்படித்தான்"

"சுந்தரத்திற்கு வரும் தந்தியினால்தான் அவனுக்கு வெற்றி கிடைக்கிறது என்று நீ எண்ணினாயல்லவா?"

"ஆம்!" என்றான் கேசவ்.

"அதனால் அவனுக்கு வரும் தந்தியை நீ அபகரிக்க முயன்றாய்?"

"ஆம்"

"அந்தத் தந்தியின் மர்ம எண்களைக் கொண்டு நீயே ஏராளமாகப் பணம் கட்டிப் பெரிய தொகையைச் சம்பாதிக்க விரும்பினாய்?"

"ஆம், இனிமேல் நான் எதையும் ஒளிக்க விரும்பவில்லை. தபால் சேவகன் ராமன், 'ஜுபைடாஸ்டோ'ருக்கு வந்த தந்தியைப் பட்டுவாடாச் செய்துவிட்டு வெளியேறி சைக்கிளில் வந்தபோது, 'சுந்தரத்துக்குத் தந்தி வந்திருக்கிறதா?' என்று கேட்டேன். அவனும் 'ஆமாம்' என்றான். உடனே நான் இரண்டு சந்துகளைக் கடந்து சுந்தரம் வசிக்கும் தீனதயாளு தெரு முனையில் போய் நின்றுகொண்டேன். ராமன் வந்தான். சுந்தரத்துக்கு வந்த தந்தியை என்னிடம் கொடுக்கும்படி கேட்டேன். அவனோ தரமறுத்துவிட்டான். எனக்கோ அந்தத் தந்தியை வாங்கிப்பார்த்து, அதில் இருக்கிற மர்ம எண்களில் பணம் கட்டிப்பெரிய தொகையைப் பெறவேண்டும் என்ற ஆவேசம். எனவே, ராமனின் மார்பில் கத்தியைப் பாய்ச்சிக் கொன்றுவிட்டு, தந்தியை அபகரித்துக் கொண்டேன். ஆனால் என்ன பயன்? பணத்தை அடைந்தேனா? கொலைகாரனாகப் பிடிபட்டிருக்கிறேன்." கேசவ்லால் சற்று நிறுத்திவிட்டுப் பெருமூச்செறிந்தான். 'பணம்! ஒருவனைக் கொன்றது. அது இனிக் கொன்றவனைக் கொல்லப் போகிறது" என்றான் ஞானியைப் போல விரக்திச் சிரிப்புடன்.

"இப்பொழுது புரிந்துகொண்டாயா சுந்தர்?' என்று கேட்ட அருணகிரி, சமிக்கை செய்தார்.

கேசவ் லாலையும், சுந்தரத்தையும் ஜீப்பை நோக்கித் தள்ளிக் கொண்டு போனார்கள் காவலர்கள். ●


# மாலா

தமிழ் கலை இலக்கிய மாதப் பத்திரிகை

தனிப்பிரதி விலை — 0.25

வெளிநாடுகளுக்கு — 0.30

வருட சந்தா (உள்நாடு) — ரூ. 3.00

வெளிநாடு — ரூ. 4.00

விவரங்கட்கு

'மாலா' சென்னை-18.

# இப்பொழுது நடைபெறுகிறது

சென்னை **பிளாஸா**
**பாரத்**
**மஹாலக்ஷ்மி**
மற்றும் தென்னாடெங்கும்



**P.S.V.**
**பிக்சர்ஸ்**

# வீரக்கனல்

வசனம் · கவிஞர் கண்ணதாசன் · ச. அய்யா பிள்ளை
சங்கீதம் · K.V மகாதேவன்
ஸ்டுடியோ · விஜயா · வாஹினி

ஒளிப்பதிவு &
டைரக்ஷன்
**G.K. ராமு**

தயாரிப்பு · **P.S. வீரப்பா**

BAKTHA

வாசகர்களே!

உங்கள் வாழ்க்கையின் சமீப "எதிர்காலத்தைப் பற்றி இரண்டு கேள்விகளுக்கு நமது "கணபதி ஜோஸ்யர்" இனாமாகப் பதில் தருகிறார்.

இதோ, மேலிருக்கும் "ஸ்ரீ மகா கணபதி" மிகவும் சக்தி வாய்ந்த மூர்த்தி. "உச்சிஷ்ட மகா கணபதி" யாகும். இவரை ஆராதித்து உபாஸனை செய்துவரும் "கணபதி ஜோஸ்ய"ரின் வாக்கு மிகவும் பலிதமாகவே இருக்கிறதென்று அனைவரும் அனுபவத்தில் கூறுகிறார்கள். ஜோதிஷத்தில் நம்பிக்கையுள்ள வாசகர்கள் மட்டும் கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து தனித்தாளில் கேள்விகளையும் எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். ஜாதகம் இருந்தால் அவசியம் அனுப்பி வைக்கவும். கூப்பன் இல்லாது வரும் கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. அந்தந்த மாதக் கூப்பனை பூர்த்திசெய்து பிரதி மாதம் 30 ஆம் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும். பின்வரும் கூப்பன் கவனிக்கப்பட மாட்டாது.

—ஆசிரியர்.

இங்கே கூப்பனைக் கத்தரிக்கவும்.

### 1960 டிஸம்பர் மாதக் கூப்பன்

என் சமீப, எதிர் காலத்திய 2 கேள்விகளைத் தனித்தாளில் எழுதி இத்துடன் வைத்துள்ளேன்.

என் பெயர்..........................................

தற்போதைய விலாசம்..........................................

உத்தியோகம்..........................................

கேள்விகள் எழுதின தேதி..........................................

,, ,, நேரம்..........................................

நான் விரும்பும் புஷ்பம்..........................................

108-க்குள் நான் கூறும் எண்..........................................

என் பிறந்த நக்ஷத்திரம்..........................................

என் தற்போதைய வயது..........................................

கூப்பன் அனுப்ப வேண்டிய விலாசம்:

**கணபதி ஜோஸ்யர், c/o "மாலா"**

ஆழ்வார் பேட்டை—மதராஸ்-18.

# கேள்வியும்—பதிலும்

**கணபதி ஜோஸ்யர்**

*13 ப்ராணத் தெரு, சைதாப்பேட்டை, சென்னை—15.*

[நேராக பதில் விரும்புபவர்கள் கணபதி ஜோசியருக்கு நேராகவே ரூ. ஒன்று மணியார்டர் மூலம் செலுத்தி அவருக்கே கேள்விகளையும் எழுதி பதிலைப் பெறலாம். பணம் அனுப்பாமல் கவர் மாத்திரம் வைத்தனுப்பின் நேராக பதிலளிக்கமாட்டாது. இனமாக பதில்களை மாலா கூப்பன் அனுப்பியவர்கள் மட்டுமே மாலா மூலம் பதிலை எதிர் பார்க்கலாம்.]

(1) சுந்தரி, மயிலாப்பூர்: எண் 67. 1961 ம் ஆண்டு ஜூலை ஆரம்பத்தில் விவாஹம் நடைபெறும். ஜாதகத்தில் சந்திரனை சனி பார்ப்பதால் தாமதம்.

(2) ராஜகோபாலன் திருவல்லிக்கேணி. நம்பர் 76. படிக்க ஆரம்பிக்கலாம், பரீக்ஷை தேறுவீர். 1961 அக்டோபர் ப்ரமோஷன்.

(3) சூடாமணி போத்தனூர், வேலூர். சேலம், நம்பர் 84. கைகால் சுவாதீனம் வர மேலும் 18 மாதங்களாகும். லக்ஷ்மீ நரசிம்ம ஸ்தோத்ரம் படித்து வரவும். தங்கைக்கு ஜாதக மில்லையா. அதை அனுப்பவும்.

(4) ராமசாமி, பந்தர் தெரு. நம்பர் 60. 1965 ஆகஸ்டில் சொந்த வியாபாரம் ஆரம்பம். நினைப்பது கைகூட மேலும் இரண்டு ஆண்டுகளாகும்.

(5) வெங்கடவரதன். ரயில்வே. நம்பர் 54. லாட்டரி விழ ஆடி மாதம் வரை காத்திருக்கவும், அப்பொழுதே மனைவியும் கர்ப்பம் தரிப்பாள்.

(6) சுப்பிரமணியம். அசுவதி. நம்பர் 68. உனக்கு வைகாசி மாதம் முதலே நன்று. அதுவரை யத்தன பலிதமிராது.

(7) ஸ்ரீனிவாசன், சென்னை 4. கூறிய எண் 9. உமது நம்பிக் கைக்கும் மிக உயர்ந்த வேலையென எதை எண்ணுகிறீரோ அது கண்டிப்பாகக் கிடைக்கும். கதை கட்டுரை எழுதுங்கள் அதில் 1966 முதல் நல்ல பேரும் புகழும் நாளடைவில் வரும்.

(8) கனகசபாபதி எண் 72. அவிட்டம். பரீக்ஷை தேறும். லிகிதம் தட்டும் உத்தியோகம், ப்ரெஸ் நன்று.

(9) பாலசுப்ரமண்யம்; எண் 66. திருச்சி: உமக்கு உமது 38-ம் வயதில் ஆனிமாதம் மணம் புரியும் பாக்யம் வருகிறது. நீர் வீடுகட்ட வைகாசி மாதம் ஆரம்பிப்பீர்.

(10) ராகவேந்திரன், மதுரை. நம்பர் 66. பரீக்ஷை தேறும். டெக்னிக்கல் கோர்ஸ் எடுக்கவும்.

இந்த மாதம் உங்களுக்கு எப்படி?
கணபதி ஜோஸ்யர்

சார்வரி ஹூ

# மார்கழி மாத ராசி பலன்

## மேஷம்

அசுவதி பரணி கார்த்திகை முதல் பாதம் முடிய.

தேக சுகம் ஏற்பட்டுக் கொண்டு வரும். சென்றமாதம் நோயால் வாடியவரும் ஆஸ்பத்திரி சென்றவரும் உற்றார் உறவினருடன் கூடி ஆரோக்யத்துடனிருக்கக்கூடும். 16தேதிக்கப்பால் தன வசதியுண்டாகும். வழக்கத்திற்கு மேல் அதிகமாக லாபம் பெற ஆரம்பம். வியாபாரம் வலுவடையவும், உத்யோகம் உயர மேலதிகாரி ஆதரவும், தொழில் துவக்க தனவந்தரின் தயையும், தெய்வானுகூலமும் இனி உண்டாகும். ஸ்பெகுலேஷன் லாட்டரி பந்தயம் முதலிய இனங்கள், இனி சிறிதளவு லாபமளிக்கும். ஏஜென்ஸி காண்ட்ராக்ட் எடுக்கலாம். விவாஹ விஷயமாக இனி ஏற்பாடு செய்யலாம். விவகாரம் அப்பீலுக்கு போகவேண்டும்.

## ரிஷபம்

கார்த்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய.

தேகசுகம் பாதிக்கப்படலாம். எச்சரிக்கையுடனிருக்கவும். இடப்பெயர்ச்சி, மனஸ்தாபம், மனத்தாங்கல் இருக்கக்கூடும். வியாபாரத்தில் அனாவசியமான சிறுபுடுங்கல்: தொழில் மந்தம். ஆதலால் வெறுப்பு: வியாபாரம் மூலம் லாபம் மிகக் குறைவு. இம்மாதத்துடன் பிடித்த பீடைவிட, கஷ்டநஷ்டம் தீர, தைமுதல் ஆண்டவன் அருள் உண்டு என்பது நிச்சயம். சிறுவிபத்து ஏற்படாமல் தடுக்கவும், பொறுமையும், விடாமுயற்சியும் தேவை. விவகாரம் நீடிக்கும். விவாஹ விஷயமாக மாசிக்குப்பின் ஏற்பாடு செய்யலாம். ஸ்பெகுலேஷன் லாட்டரி பந்தயம் மூலம் ஏப்ரல் முதலே நன்று இம்மாதம் எதிர்பார்ப்பானேன். ஏமாறுவானேன். லெக்ஷ்மீ ஸ்தோத்ரம் படித்து வர நிம்மதியை நாடவும்.

## மிதுனம்

மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை புனர்பூசம் 3-ம் பாதம் முடிய

நல்லகாலம், முடிவடைய, சில காலம், எதிர்ப்பும் ஏமாற்றமும், எதிர்பாராத நஷ்டமும் கஷ்டமும் ஆரம்பிக்கும். தெய்வ வணக்கமும். எச்சரிக்கையுடன் ஸன்மார்க்கத்தில் காலத்தை கடந்தால், இனிவரக்கூடிய தீய பலன்களை, சமாளிக்கக்கூடும். தேசசுகமிராது. தனவசதி குறையும். உற்றார் உறவினரின் விரோதம் வலுக்கும். வியாபாரம் மந்தம். தொழிலை நிறுத்த நேரும். நூதன விவகாரம் துடங்கும். நெருங்கிய பந்துக்களை விட்டுவிலக நேரும். ஸ்பெகுலேஷன்லாட்டரி மூலம் நஷ்டமே, வரிமூல மும்மரம். நூதனமாக எக்கார்யமும் ஆரம்

பிப்பது நல்லதல்ல. எவரவர் ஜாதகத்தில் குருவும் சனியும் ரிஷபம் கன்னி, விருச்சிகம், மீனத்திலிருந்ததோ அவர்களுக்கே சுப பலன் மற்றவர்களுக்கு மேற்கூறிய தீய பலனேயிருக்கக்கூடும்.

## கடகம்

புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்-யம் 4-ம் பாதம் முடிய

தேகசுகம் திருப்திகரமாகயிருக்கும். இனி யத்தின பலிதமும் லாபமுமிருக்க ஆரம்பம். வேதனையும் யோஜனையும் ஒழிய நன்மையும் மேன்மையுமுண்டு. வியாபாரம் வலுவடைய தொழில் முன்னேற பலவித உதவியும் ஆதரவும் கிடைக்க ஆரம்பம். பரீட்சைதேற, மேற்பதவிக்கு அனுகூலமாய் அதிகாரிகளின் அன்பும் இருக்கும். ஸ்பெகுலேஷன், லாட்டரி, பந்தயம் மூலம் லாபம் இருக்காது. விவகாரம் நீடிக்கும். விவாஹ விஷயமாய் செய்யும் யத்தனங்கள் தாமதிக்கும். வாஹனம் பெறவும், மனை, வீடு வாங்கவும் ஏற்பாடு செய்யலாம். வரிமூலம் இருந்த ஸ்ரமம் தீரும்.

## சிம்மம்

மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய

சென்ற மாதம் போல் இம்மாதம் அவ்வளவு ஸ்ரமம் இராது. யத்தன பலிதம் உண்டாகவும், முயற்சிகளில் ஓரளவு சித்தியடையவும், தன உதவி பெறவும், நண்பர்களின் ஆதரவு அடையவும், இம்மாதம் பதினாறு தேதிமுதல் எதிர் பார்க்கலாம். வியாபாரம் சற்று தலைதூக்க, செய்து வரும் தொழிலில் இருந்த மந்தம் நீங்கி, புனர் ஜன்மம் எடுத்ததுபோல் நூதனமாக வலுவு பெற்று நன்முறையில் நடைபெற ஆரம்பம். கூட்டாளிகளும் சேருவர். விவகாரம் வெற்றி பெறவும், விவாஹ விஷயமாக தாமதம் இருக்கவும், ஸ்பெகுலேஷன், லாட்டரி; பந்தயம் மூலம் அனாவசிய வ்ரயமும் எதிர்ப் பார்க்கலாம். பெற்றோர்களின் உதவி ஓரளவு அதிகமாகக் கிடைக்கும். தூரதேச ப்ரயாணம் செய்ய நேரலாம்.

## கன்னி

உத்திரம் 2-ம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ம்பாதம் முடிய

முயற்சியில் வெற்றி காண்பது கடினம் தேக ஆரோக்யமும் குன்றும் ஆகவே உற்சாகம் குறையும். வீடு மாற ஏற்பாடு உத்தியோகத்தில் இடப்பெயர்ச்சி: வியாபாரஸ்தலம் மாற முடிவு முதல் நன்று. சம்பளமும் வரும்படியும் உயராவிட்டாலும், பொறுப்பும், உழைப்பும் அதிகம் குற்றம்குறைகள் கூறப்படுவதால், கோபமும் வெறுப்பும் ஏற்படும். மதிப்பு கெடலாமோ என அஞ்சும்படி பலாபலன்கள் நடைபெறும். குழந்தைகள் தேக சுகம் கெடுவதாலும், அவர்கள் வெளியூர் செல்வதாலும்சிலவு அதிகம்கடன்காரர்தொல்லையிருக்க, தனவசதிகுறையும், பிறருக்கு உதவி புரியவேண்டிய நிர்ப்பந்தமும் வரும். விவகாரம் நூதனமாக ஆரம்பிக்க, விவாஹ விஷயமாக வீண்ப்ரயத்தனங்கள் செய்ய வேண்டிவரும். வரி மூலமும் ஸ்ரமமிருக்கக்கூடும்.

## துலாம்

சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி விசாகம் 3-ம் பாதம் முடிய

ஆரோக்யம் ஸ்திரமாகயிருக்கும். நீண்ட நோயால் வாடுபவர்கூட, திடமாக நடமாட முடியும் தனவசதியுண்டாகும். கடன் தொல்லை குறையும். உத்தியோக உயர்வோ தொழில் முன்னேறவோ, வியாபாரம் வலுவடையவோ, இம்மாதம் நன்று. இவ்விதமே யிருக்குமென நம்பலாகாது எதிர்காலம். சில மாதங்கள் எதிர்ப்பாகவேயிருக்கும். ஆதலால் நிதானமாக யிருக்கவும். விவகாரம் வெற்றியடையலாம். விவாஹம் தீர்மானிக்கப் படலாம். பரீக்ஷை தேறலாம். நூதன தொழிலும் ஆரம்பிக்கலாம். உற்றூர் உறவினர் கூடவும், மகிழ்ச்சியுடன் இம்மாதத்தை கழிக்கவும் எதிர்ப்பார்க்கலாம், வரி மூலமிருந்த கஷ்டம் விலகும். ஸ்பெகுலேஷன் லாட்டரி பந்தயம் மூலம் லாபம்.

## விருச்சிக்கம்

விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை-முடிய.

பீடை விடுமா, தொல்லை தீருமா, என பல வருடங்களாக வாடியவர்களுக்கு, கடைசி மாதம் கஷ்டம் இதுவே. இம்மாதம் முடிந்ததும், நல்லகாலம் வருகிறது என்பது நிச்சயம். ஆகவே நிதானிக்கவும். உத்தியோகத்திலிருந்த வெறுப்பு ஒழிய ஆரம்பம். மேலதிகாரி மனம் மாற ஆரம்பம். வியாபாரம் ஆரம்பிக்கச் செய்யும் ஏற்பாடு பலிதமாகுமென நம்பிக்கையுண்டாகும். அரசாங்க மூலம் நற்செய்தி கிடைக்கும். லைசென்ஸ் பெறலாம் விவகாரம் எதிர்ப்பாக முடிந்தாலும் அப்பீலெடுப்பீர். விவாஹம் நடைபெறுது. கஷ்டப் பட்டவர்களுக்கு இனியத்தனம் பலிக்கும். ஸ்பெகுலெஷன் லாட்டரி எல்லாம் 1961-ம் ஆண்டில் வைத்துக்கொள்ளலாம். கஷ்ட நஷ்டமெல்லாம் இம்மாதத்துடன் ஒருவாறு முடிவடையும். திருநல்லாறு சென்று 'சனி'யை வணங்கி 1961-ம் ஆண்டைக் கொண்டாடவும்.



## தனுசு

மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய

தேக சுகம் பாதிக்கப்படும் ஆஸ்த்மா, டையாபிடிஸ் முதலியன மூலம் நீண்ட நோயால் வருந்துபவர் ஜாக்கிரதையாக யிருக்கவும். தன நெருக்கடியிருக்கும். உத்தியோகத்தில் பொறுப்பு அதிகமாகும். சம்பளம், ஏறுவது அடுத்த மாதமே. வியாபாரம் வலு உண்டாக நிம்மதியுமிருக்கும். தொழில் முன்னேறும். சேவகர் ஒத்துழைப்பு இருக்கும். கஷ்டம் விலக, நஷ்டமின்றி யிருக்கலாம். விவகாரம் வெற்றி. விவாஹம் தீர்மானிக்கப்படும். தாமதமிராது. ஸ்பெகுலேஷன் லாட்டரி பந்தயம் மூலம் லாபமிராது. சில மாதங்கள் செல்லவேண்டும். உற்றூர் உறவினர்கூட, சிலவினங்கள் அதிகம். வரி மூலமிருந்த ஸ்ரமம் தீரும். தெய்வானுகூலம் 1961 பிப்ரவரி முதல் அதிகம்.

## மகரம்

உத்திராடம் 2-ம் பாதம் முதல் திருவோணம் அவிட்டம் 2-ம் பாதம் முடிய

தேக ஆரோக்யம் குன்றலாம். ப்ரயாணமும் இருக்கக்கூடும். தன வ்ரயமதிகம். கடன் தீர்க்கவும், தொல்லை குறையவும், வேதனை ஒழியவும் ஆரம்பம் உத்யோகத்தில் உயர்வு இல்லாவிடினும் பொறுப்பு அதிகம். உழைப்பு கடுமை. வியாபாரம் வலுவடையும். நண்பர் உதவி நாடின் நற்பலனுண்டு. தொழில்மூலம் அதிக தனம் முடங்கும். வரி மூலமும் சேவகர் மூலமும் சிலவினங்கள் அதிகம். ஸ்பெகுலேஷன் லாட்டரி பந்தயம் மூலம்வீண் சிலவு, விவகாரம் நீடித்து வரும். விவாஹ விஷயமாக சிலமாதங்கள் பொறுத்து யத்தனிக்கலாம். மனை வீடு வாங்க முயற்சித்தால், சீக்கிரம் கைக்கூடிவரும். புத்ரர்களின் கஷ்டம் இம்மாதத்துடன் முடிவடையும் அவர்கள் மூலம் இனி லாபமேற்படும்.

## கும்பம்

அவிட்டம் 3-ம் பாதம் முதல் சதயம் பூரட்டாதி 3-ம் பாதம் முடிய

சகல கஷ்டமும் ஒழிய, புத்துயிர் பெற்றது போல் இம்மாதம் சுப பலன் உண்டாக வேண்டும். தேக சுகம் திருப்திகரமாயிருக்க, தன வசதி ஏற்பட, உத்யோகம் உயர, வ்யாபாரம் வலுவடைய, நூதன தொழில் ஆரம்பிக்க, கூட்டாளி கூடவும், அவர் மூலம் சுப பலன் ஏற்படவும் நன்று பரீக்ஷை தேறவும், போட்டியில் வெற்றி பெறவும், ஸ்பெகுலேஷன் லாட்டரி பந்தயம் மூலம் எதிர்பாராத லாபமும் இருக்கும். வரி மூலமிருந்த ஸ்ரமம் நீங்க, விவாஹம் தீர்மானிக்கப் பட, விவகாரம் வெற்றியடைய விரோதிகள் மறைய எதிர்பார்க்கலாம். சில வருடங்கள் சனிப்ரீதி செய்துவருவது நன்று.



## மீனம்

பூரட்டாதி 4-ம் பாதம் முதல் உத்திரட்டாதி ரேவதி முடிய,

இம்மாதத்துடன் வேதனை ஒழியும் தாமதமின்றி, காரியம் கைகூட ஸ தை பிறக்க வேண்டும். தேக சுகம் பாதிக்கப்படலாம் எச்சரிக்கை யுடனிருக்கவும். தன நெருக்கடி இம்மாதமிருக்கக் கூடும். உத்யோகத்தில் ஸ்ரமமேற்படலாம். வியாபாரம் மந்தம் தொழிலில் முன்னேற்றமிருக்க தாமதம். சேவகர் மூலம் ஸ்ரம மேற்படலாம். வரி மூலம் தன நெருக்கடி யுண்டாகும். அரசாங்கம் மூலம் கிடைக்க வேண்டிய செய்திகள் ப்ரதி கூலமாகயிருக்கூடும். திருப்பாவை திருவெம்பாவை பாராயணம் செய்யவும்.

20 8037

---

(Edited & published by S. S. Sarma No. 1. G. Sir C. P. Ramaswamy Iyer Road, Alwarpet, Madras-18 (Phone 72798.) Printed by S. S. Sarma at Sri Sudarsan Press No. 111, Mount Road, Madras-6.

வருகிறது.
உமா பிக்சர்ஸ்
சித்தூர் ராணி
பத்மினி
திரைக்கதை-வசனம்:
ஸ்ரீதர்
டைரக்ஷன்:
ஸி.எச்.நாராயணமூர்த்தி

நடம்புரியும் பாரதச் சிலம்பொலியோ

# வடிவழகி நீயென்ற வாழ்த்தொலியோ!

ஒலிதனிலே இசைவளர்த்த அழகைப் போலே உடல்தனிலே எழில் வளர்த்த பாரதப் பெண்ணே! பொலிவழகால் புகழ்வளர்த்த பெருமை கொண்டாய்; பொன்னுடலைப் போற்றினையோ, பாரதப் பெண்ணே! நேர்த்தியான மேனியழகு இல்லையேல், பூர்த்திபெற்ற அழகில்லை என்பதை உணர்ந்துள்ள சினிமா நட்சத்திரமாகிய ராகினி கூறுகிறார்: 'அதனால்தான், மென்மைகுலவும் லக்ஸ் சோப்பின்மீது எனக்கு நம்பிக்கை. மணங்கமழும் அதன் நுரை எனது மேனியை மிளிரச் செய்கிறது.'

சினிமா நட்சத்திரங்களின் LUX TOILET SOAP தூய. மென்மைகுலவும் அழகுசாதன சோப்

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு LTS. 54-X29 TM

Sri Sudarsan Press, Madras-6